# திராவிடன்

R.T.ARASU

ஆசிரியர்: என்.வி.நடராசன்




மதுரை மாநாட்டு மலர்: விலை 50 காசு

# தமிழகத்தின் பெரிய எதிர்க்கட்சி தி.மு.க.

# அண்ணாவின் தலைமை திராவிடத்திற்கு விடுதலை நல்கும்!

மதுரையில் நடைபெற்ற தி. மு. கழக மூன்ருவது பொது மாநாட்டில் கலந்து கொண்ட கர்நாடக மாநில முன்ளுள் நீதிபதி திரு. மேடப்பா அவர்கள் ஆங்கிலத்தில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் :—

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு என்னை அன்புடன் அழைத்த நண்பர்கள் அண்ணாதுரை நெடுஞ்செழியன் ஆகியோருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

நான் ஒரு பேச்சாளனல்ல. நான் விவாதித்துப் பழக்கப்பட்டவனுமல்ல—நான் வகித்த பதவியின்படி விவாதங்களைக் கேட்டுத் தீர்ப்புச் சொல்லியவன்.

சிறந்த எதிர்க்கட்சி இல்லாவிட்டால் ஜனநாயகம் சரியாக வேலை செய்ய முடியாது. தமிழகத்திலேயே மிகப் பெரிய எதிர்க்கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நான் நன்கறிவேன்.

கடந்த 14 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சி ஊழல்மிக்க ஆட்சியினை நடத்தி வருகிறது. இன்னும் 15 ஆண்டுகள் கழித்து எல்லாம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனல் அதுவரையில் உயிரோடு வாழ்ந்திருக்க வழி என்ன இருக்கிறது? "Welfare State" என்று சொல்லப்படுகின்ற மக்களுக்கு நலன் அளிக்கும் சர்க்காரா இப்போது இருப்பது என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது.


திராவிட நாடு அமைக்க வேண்டியதன் அவசியம்பற்றி ஏராளமான காரணங்களை நாம் கேட்டிருக்கிருேம்.

கிராவிட நாடு விடுதலை பெறுவதை தாய் நாட்டுப் பற்றுள்ள யாரும் எதிர்க்க முடியாது. திராவிட நாட்டைப் பெறுவதால் என்ன தீமை யிருக்கமுடியும்?

திராவிட நாகரீகம் ஆரிய நாகரீகத்தைவிட மிகப் பழம் பெரும் நாகரிகம். நான் திராவிடக் குடியில் தோன்றியவன்!

திராவிடனகப் பிறந்தேன் நான். திராவிடனக வாழ்கிறேன். இறக்கும்போதும் நான் ஒரு திராவிடனகவே இறப்பேன்.

திராவிட நாட்டு விடுதலை இலட்சியத்தை எதிர்ப்பது பெரியதுரோகமாகும்.



## உயர்திரு. மேடப்பா கருத்துரை

இந்த மாநாட்டில் எனக்கு நம்பிக்கையளிப்பதெல்லாம் இங்கே ஏராளமாகத் திரண்டிருக்கும், இளைஞர்களும், தாய்மார்களும் மாநாட்டில் உற்சாகத்தோடு பங்கெடுத்துக் கொள்வதுதான்.

திரு. அண்ணாதுரையின் திறமைமிக்க தலைமையும் வழிகாட்டும் ஆற்றலும் திராவிட நாட்டு விடுதலைக்கு வழி தேடித்தரும் என்று உறுதியாக நம்புகிறேன். எங்கள் நாட்டை நாங்களே ஆளவேண்டும் என்று சொல்வதற்கு விவாதமே தேவையில்லை.

திறமையான எதிர்க்கட்சி இருந்தால்தான் ஜனநாயகம் செழித்து வளரும்.

காங்கிரசார் நடத்துகின்ற ஜனநாயக ஆட்சியில், 15000 மக்களைக் கொண்ட இந்தியாவின் ஒரு பகுதி பாக்கிஸ்தானுக்கு அளிக்கப்பட்டது. இது ஜனநாயகத்தில் கேலிக் கூத்தாகும்.

மக்கள் குரலைத் தெரிவிக்க ஜனநாயகத்தில் தேர்தல் ஒரு முறையாகும். காங்கிரசு கட்சி வரும் தேர்தலில் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட இருக்கிறது வோட்டுகளை விலை கொடுத்து வாங்குவது முறையான தேர்தல் அல்ல.

நீங்கள் தேர்தலில் சரியான முறையில் வாக்களிக்கும்படிச் செய்யவேண்டும்.

நம் நாட்டில் ஆங்கிலமே ஆட்சிமொழியாக நீடித்தால் எந்தத் தொல்லையும் இருக்காது. ஏன் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு அதனுடைய இடத்தில் வளர்ச்சியேயில்லாத - செழுமையில்லாதஇந்திமொழியைத் திணிக்கவேண்டும்.

கவிஞர் தாகூர் இயற்றியதேசிய கீதத்தில் திராவிடம், வங்கம், மராட்டியம் போன்ற பகுதிகளைச் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிருர். ஆனல் இன்று நாட்டை ஆள்வது அவைகள் அல்ல, தேசிய கீதத்தில் இல்லாத உத்திரப் பிரதேசம் தான் நம்மை ஆள்கிறது, ஆகவே தான் மொழிவழி மாநிலம் அமைத்தபோது சர்தார் கே. எம். பணிக்கர் உத்திர பிரதேசத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்ருர்.

ஆகவே திராவிட நாடு பற்றி எனது முடிவுகளைச் சொல்லிவிட்டேன். இந்த மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்த திரு. அண்ணாதுரை, நெடுஞ்செழியன் ஆகியோருக்கு என் நன்றி. மாநாட்டுக்கு என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

தொகுத்து மொழி பெயர்த்தது:

**என்.வி.என். சோமு**

---

மாநாட்டுத் தீர்மானம் தொடர்ச்சி.........

## வெள்ளச் சேதமும், நிவாரணமும்

அண்மையில் பெய்த பெருமழையின் விளைவாகத் தமிழகம், கருநாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் பெருஞ்சேதமும், குறிப்பாக காவிரிக்கரைப் பகுதிகளில் வெள்ளப்பாழும் ஏற்பட்டு பல்லாயிரக் கணக்காக மக்கள் வீடுவாசல் இழந்து, விளைச்சல் கெட்டுத் துன்புறுவதைக் கண்டு இப்பொது மாநாடு வருந்துவதுடன், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அந்தந்த மாநில அரசுகளும், இந்தியப் பேரரசும் உடனடியாகத் தக்க உதவிகளைச் செய்வதுடன், புதுவாழ்வு அளிக்கத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

வெள்ளம், தீ போன்ற திடீர் விபத்துக்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்கட்கு, நிவாரணமாக ரூ. 30 அளவு அரசினர் தரும் முறை எப்போதோ ஏற்பட்டதால், அத்தொகை இன்றைய விலைவாசியில் மிகவும் குறைவாதலால் குறைந்தது ரூ. 200 அளவேனும் அளிக்க வேண்டுமென்று அரசினரை இம்மாடு கேட்டுக்கொள்கிறது.

ஆங்காங்குள்ள தி. மு. க. கிளையினரும், வட்ட, மாவட்டக் கழக நிர்வாகிகளும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு ஆற்றியுள்ள பணியினைப் பாராட்டுவதுடன்—தொடர்ந்து செய்ய வேண்டும் என விரும்புவதுடன், பொது மக்கள் தம்மால் இயன்ற உதவிகளை எல்லாம் செய்யவேண்டும் எனவும் இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

சில ஆண்டுகட்கு ஒருமுறை காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அழிவு விளைவதால், வெள்ளத்தடுப்பு திட்டத்தின்படி, வெள்ளம் பெருகும்போது தேக்கும் முறையில் மேலும் சில அணைகளைக் கட்டவும், புதுக்கோட்டை பகுதிக்கு ஒரு புதிய கால்வாய் வெட்ட முன்வர வேண்டும் எனவும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன் : குடந்தை பத்மநாபன்,

வழி : இரா. சகந்நாதன், ஆர். நாராயணன் (கருநாடகம்)

---

### திருத்தம்

இம்மலரில், 'ஒரே உலகமும் திராவிடமும்', 'தொழிற்சங்க இயக்கத்தில் நமது பணி' ஆகிய கட்டுரைகள் வெளியாகியுள்ள பக்கங்களை 11-12 என்பதற்குப்பதில் 23—24 என்று திருத்தி வாசிக்க வேண்டுகிருேம் —(ஆ-ர்)

---

### அடுத்த வாரம்!

அடுத்த வாரம் திராவிடன் இதழில் மதுரை, மாநாட்டின் மற்ற தீர்மானங்கள் அனைத்தும், முன்னணி எழுத்தாளர்களின் சிறப்புக் கட்டுரைகளும் வெளிவரும்.

—(ஆ—ர்)

# திராவிடன்

எதையுந் தாங்கும் இதயம் கொள்வோம்
எழிலார் திராவிடம் பெற்றிட உழைப்போம்

R.T. ARASU

சென்னை | 27—7—61 | வியாழக்கிழமை


# மதுரை தந்த தீர்ப்பு!

—*—

மதுரை—திருப்பரங்குன்றத்தில் இத்திங்கள் 13, 14, 15, 16-ம் நாட்களில் தி. மு. கழக மூன்ருவது பொது மாநாடு சீரும் சிறப்புடன் நடைபெற்றுள்ளது கண்டு பெருமிதம் கொள்கிறேம். இத்தகு மகத்தான பொறுப்பை இனிது நிறைவேற்றித் தந்த வரவேற்புக்குழுவினரையும் அவர்களுக்குத் துணை புரிந்த அனைவரையும் மனமாரப் பாராட்டுகின்றேம்.

1951-ம் ஆண்டு சென்னையில் முதல் பொது மாநாடும், 1956-ம் ஆண்டில் திருச்சியில் இரண்டாவது பொது மாநாடும், நடைபெற்றபோது அந்தந்த காலக் கட்டத்திற்கேற்ப அப்பொது மாநாடுகள் தென்னக அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருப்பதை எவரும் மறுக்க முடியாது. அதுபோன்றே கழகத்தின் இன்றைய வளர்ச்சியின் எடுத்துக் காட்டாக அரசியல் உலகில் மதுரை மாநாடு முக்கியத்துவம் பெற்றிருப்பது கண்டு கழகப் பணியில் ஈடுபாடு கொண்டுள்ள ஒவ்வொருவரும் நமது பணி வீணுகவில்லை யென்றே மன நிறைவு கொள்ளலாம்.

ஆனல் கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு அங்கலாய்த்துக்கொள்கிற கூட்டம் மட்டும் அரசியல் அறிவுக்குப் புறம்பான பேச்சுக்களில் இறங்கி நம் மாநாட்டின் சிறப்பினையும் மகத்தான சக்தியினையும் த ழ்த்திவிட்டதாகக் கருதிக் கொண்டிருக்கின்றனர்! இந்த அதிசயப் பிறவிகள் அவ்வித தப்புக் கணக்கைப் போட்டுக் கொண்டே உழலட்டும்.

அடுத்தபடியாக; மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு தீர்மானமும் மக்களின் அன்ருட வாழ்வுப் பிரச்சினையை ஒழுங்குறச் செய்யவும், பொதுவாக மனித உரிமைகளைக் காக்கவும், குறிப்பாக திராவிட நாட்டுப் பெருங்குடி மக்களின் உண்மையான சுதந்திரத்தைப் பெறுவதற்காகவுமான வழிவகைகளைக் கொண்டதாக அமைந்திருப்பதை அனைவரும் அறிவர்.

ஆகவே ஆளவந்தார்கள், மாநாட்டின் தீர்மானங்களைக் கூர்ந்து கவனித்து, மக்களின் துயரங்களைத் தீர்க்க முனையவேண்டும். இல்லையெனில் அத்தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டுவரும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கழகம் தயங்காது என்பதையும் ஆளவந்தார்களுக்கு நினைவூட்டுகிறேம்.

திராவிட நாட்டுத் தனி உரிமைக்கு கேரளமும், கருநாடகமும் ஆந்திரமும் ஆதரவு தந்ததாயென்று கீரல்விழுந்தஇசைத்தட்டுகளைப்போல கூப்பாடு போட்டு வருபவர்களும் தெளிவு பெறும் வகையில் அந்தந்த மாநிலங்களிலிருந்து ஏராளமான பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொண்டது மட்டுமின்றி எவ்வித தியாகத்தையும் புரிந்து சுதந்திரத் திராவிடத்தைப் பெறுவோம் என்றுஅவரவர்களின் தாய்மொழியில் கேரள, கருநாடக, ஆந்திரப் பிரதிநிதிகள் முழக்கமிட்டபோது மாநாட்டில் திரண்டிருந்த அனைவரும் எழுப்பிய திராவிட நாடு திராவிடருக்கே என்றஒலிமுழக்கம் டெல்லி ஏகாதிபத்தியத்திற்கு விடும் கடுமையானஎச்சரிக்கையாக அமைந்திருந்தது என்று கூறின் மிகையாகாது.

இவையனைத்துக்கும் மேலாக கருநாடகமாநில முன்னுள் தலைமை நீதிபதி உயர்திரு. மேடப்பாஅவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு திராவிட நாட்டுத் தனி உரிமைக்கு ஆதரவு தந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

திராவிட நாட்டுக் கூட்டாட்சிக்கு வாதமே தேவையில்லை. நூற்றுக்கு நூறு நியாயமும் நேர்மையும் கொண்ட உரிமையாகும்—என்று உயர்திரு. மேடப்பா அவர்கள் எடுத்துக் கூறியதானது அந்தத் தீர்ப்புக்கு இந்தியப் பேரரசு, என்றைக்காகிலும் ஒருநாள் தலைவணங்கியே ஆகவேண்டும் என்பதைத் திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டுவதைப் போன்றிருந்தது.

கழகம், எவ்வளவு வளர்ச்சியடைந்திருந்தாலும் அதன் மதிப்பீட்டைச் சற்று குறைந்த அளவில் வைத்துப்பேசுபவர் அண்ணு அவர்கள். அந்த நேரங்களில் நமக்கெல்லாம் கூட கோபம்வரும். அவ்வித மனேபாவம் கொண்ட மதிப்பிற்குரிய அண்ணு அவர்களே மதுரை மாநாட்டில் "திராவிட நாட்டு உரிமையை கேட்டுப் பெறவேண்டிய காலம் மாறி, அந்த உரிமையை நாமே நடைமுறையில் உறுதிப்படுத்திக் கொண்டோம் என்று உலகுக்கு அறிவிக்கப்போகும் காலம் விரைந்தோடி வருகிறது."

—என்று போர்முரசு கொட்டியிருக்கிருர்கள். எனவே கழகத்தின் அடிப்படைக் கொள்கையான திராவிடநாடு திராவிடருக்கே—என்ற இலட்சியத்தை சதித்திட்டத்தாலும், நயவஞ்சகத்தாலும், சிதறடித்துவிடலாம் என்று ஏகாதிபத்யவாதிகளும், அவர்களது எடுபிடிகளும் உளறிக் கொட்டுவதைப்பற்றி நாம் பொருட்படுத்தாமல், மதுரை மாநாட்டில் கொண்ட உறுதிப்பாட்டுடன் தொடர்ந்து தொண்டாற்ற முனைவோமாக!

அடுத்து இன்றுள்ள தேர்தல் முறையை மாற்றி; குறிப்பிட்ட நபர்களுக்கு வாக்கு என்று கேட்பதற்கு பதிலாக கட்சிகளுக்கு வாக்கு என்ற அடிப்படையில் தேர்தலில் போட்டியிட்டு அந்தந்தக் கட்சி பெறும் வாக்குகளுக்கேற்ப சம்பந்தப்பட்ட கட்சிகள் தங்களின் பிரதிநிதிகளைச் சட்டமன்றத்திற்கு அனுப்பிவைப்பதென்ற முறையிருக்குமானல், தேர்தலில் சாதி வேறுபாடுகளும் கீழ்த்தரமான செயல்களும் அறவே ஒழிந்து, ஒரு வாக்குக்கூட வீணுகாமல், பிரதிநிதித்துவம் பெறும் வாய்ப்பும் கிடைக்கும்—என்று அண்ணு அவர்கள் மதுரை மாநாட்டில் விரிவாக கூறியிருப்பதை மக்கள் மேலும் ஆராய்ந்து பார்த்து ஆதரவு திரட்டவேண்டுகிறேம். அதுபோன்றே மற்ற கட்சிகளும் இப்பிரச்சினையில் தங்களின் கருத்தை அறிவிப்பது ஜனநாயக முறையை வளர்ப்பதற்கு பேருதவியாயிருக்கும்.

இதுவரை கழகக் கொள்கையில் அவநம்பிக்கைக் கொண்டிருந்த மாற்றுக்கட்சியின் தலைவர்கள்கூட அந்தத் தடுமாற்றத்திலிருந்து தெளிவு பெற்று, கழகத்தின் அடிப்படைக் கொள்கையில் நம்பிக்கைக் கொள்ளும் அளவுக்கு மதுரை மாநாடு வெற்றிக்கொடி பறக்க நடந்திருப்பதை எண்ணி புதிய தெம்புடன் மாநாட்டின் முடிவுகளை செயலாக்குவதற்கு நம்மை ஆட்படுத்திக் கொள்வோமாக! வணக்கம்.

என்.வி. நடராசன்

---

## காமாட்சி - பாண்டி

மதுரையில் நடைபெற்ற கழகப் பொது மாநாட்டின் வெற்றிக்கான தீவிரத் தொண்டில் திருச்சித் தோழர் காமாட்சி அவர்களும் மதுரைத் தோழர் பாண்டி அவர்களும் பெரிதும் ஈடுபட்டார்கள். திருச்சி மாவட்ட தி. மு. கழக ஜீப் காரையும் மதுரை மாவட்ட தி. மு. கழக ஜீப் காரையும், ஏறத்தாழ 25 நாட்களாக, ஓய்வின்றி ஓட்டும் பணியை மேற்கொண்டு பெருந்துணை புரிந்தார்கள். அவர்களுக்கும் அவர்களுக்குத் துணையாயிருந்த தோழர்களுக்கும் நாம் அனைவரும் நன்றி செலுத்துவோமாக!

## மதுரைப் பொது மாநாடு: முகப்பு



---

## நன்றி உரித்தாகுக!

இம்மலரில் வெளிவந்துள்ள மாநாட்டு நிழற்படங்கள் அனைத்தும் திருச்சி நாதன் கம்பெனி உரிமையாளர் தோழர் பாண்டுரங்கன் எம்.சி. அவர்களும், 3-ம் பக்கத்தில் வெளிவந்துள்ள மாநாட்டு முகப்புப் படம் சென்னைத் தோழர் சாமுவேல் அவர்களும் தந்துதவினர்கள். அவர்களுக்கும் எமது நன்றியும் வணக்கமும் உரித்தாகுக!

—என்வியென்

---

## ஏஜெண்டுத் தோழர்கட்கு

ஜூலைத் திங்கள் முடிய அனுப்பப்பட்டுள்ள டிட்டியலின் படி நிலுவைத் தொகை முழுவதையும் உடன் தவருது அனுப்பி வைக்கும்படி நினைவூட்டுகிறேம். வணக்கம்.

—நிர்வாகி : 'திராவிடன்'

# தி. மு. கழக 3-வது பொது மாநாட்டுத் தீர்மானங்கள்

## திராவிடநாடு இலட்சியம்

''இந்தியப் பேரரசின் ஆதிக்கப் பிடியில் சிக்கிக் கிடக்கும் மொழி வழி மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய நான்கும், குழு மொழி அடிப்படையிலும், இன அடிப்படையிலும் திராவிடநாட்டின் அமைப்புக்கள் ஆதலின், இந்நான்கும் இந்தியப் பேரரசின் ஆதிக்கப் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவும், தத்தமது வளர்ச்சி உரிமைக்கரன ஆக்கமும் பாது காப்பும் இருக்கத்தக்க ஏற்பாட்டுடன் சுதந்தரத் திராவிடச் சமதர்மக் குடியரசுக் கூட்டாட்சி அமைத்துக்கொள்ள வழிவகை காண்பதைக் குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றிவரும் திராவிட முன்னேற்றக் கழகம், ஆதிக்கக்காரர்களும், அவர்தம் ஏவுதலால் எதிர்ப்பு மூட்டுவோரும் ஏற்படுத்தும் இன்னல்களையும், கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு, தமிழர்—ஆந்திரர்—கருநாடகர்—கேரளர் என்போர் 'திராவிடரே' என்ற பேருண்மையையும், இன்று தனித்தனி மொழிவழி மாநிலங்களாகவுள்ள இந்நான்கும் உள்ளடங்கிய நிலப்பரப்பு 'திராவிடமே' என்ற உணர்வையும், தமிழகத்தில் மிகப்பெரிய அளவிலும், மற்ற மூன்று இடங்களில் நம்பிக்கை தரத்தக்க சூழ்நிலை அமைகின்ற அளவிலும் ஏற்படுத்தித் திராவிடக் கூட்டாட்சி அமைக்கும் நோக்குடன் இந்தியப் பேரரசிலிருந்து விடுபட்டாக வேண்டும் என்ற உறுதியையும், அதற்கான போராட்ட உணர்வையும், எழச் செய்வதிலே மேலும் ஊக்கந்தரத்தக்க வகையில் வெற்றிபெற்றிருக்கிறது என்பதை அறிவித்துக்கொள்வதுடன், இந்த விடுதலை உணர்வு மலரப் பாடுபட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து, தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி, மேற்கொண்டு விடுதலை இலட்சியம் நிறைவேற எல்லாவகையான இன்னல்களையும் இழப்புக்களையும் ஏற்கும் உறுதியுடன் பணியாற்ற திராவிட முன்னேற்றக் கழகம் முனைந்து நிற்கிறது என்பதை மீண்டும் வலியுறுத்தி சுதந்தரத் திராவிடச் சமதர்மக் குடியரசுக் கூட்டாட்சி அமைக்கும் இந்த விடுதலைப் போருக்குத் துணைநிற்க வேண்டுமென்று இப்பொது மாநாடு கேட்டுக்கொள்கிறது.''

முன் : சேலம் ஈ. ஆர். கிருஷ்ணன்

வழி : 'முரசொலி' மாறன் எம்.எ., வேணுகோபால் (கருநாடகம்) சில்வர்ஸ்டர் (கேரளம்), கே. எம். எர்ரய்யா (ஆந்திரம்) எம். எஸ். வெங்கடாசலம் எம்.எ., ஏ. பி. சனார்த்தனம் (தெலுங்கு) எம்.எ.

## இலங்கைப் பிரச்சினைப் போராட்டம்

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் மொழி உரிமை கேட்டு நடத்தி வரும் அறப்போரை அடக்குமுறை உதவியால் அடக்கியும், தமிழர் தலைவர்களைச் சிறைப்படுத்தியும், தமிழ் மக்களைச் சொல்லொணுக் கொடுமைகளுக்கு ஆளாக்கியும், இனவெறியின் அடிப்படையில் அடக்குமுறை ஆட்சி நடத்தும் இலங்கை அரசின் போக்கைக் கண்டித்தும், இலங்கைத் தமிழருக்குநீதி வழங்குமாறு கோரியும், தமிழக மக்களின் ஒருமித்த எண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டனக் கூட்டங்கள் நடத்தியும் மாபெரும் ஊர்வலங்கள் நடத்தியும் சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதுவர் மூலம் ஒரு கண்டன அறிவிப்பைத் தந்திருந்தும் மனிதாபிமானத்தையும் சனநாயகத்தையும் மறந்த நிலையில் இலங்கை அரசாங்கம் தமிழரின் உரிமைப் பிரச்சினைக்குத் தக்க தீர்வு காணுது, தமிழ் மக்களைக் கொடுமையான நிலையில் தொடர்ந்து வைத்திருப்பது கண்டு இப்பொது மாநாடு வருந்துவதுடன், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறை காட்டாது இருக்கும் இந்திய அரசாங்கத்தின் மந்த நிலையினைக் கண்டிப்பதுடன், இலங்கைத் தமிழரின் உரிமைகளை மதித்து, காவலில் வைக்கப்கட்டிருக்கும் தமிழர் தலைவர்களை விடுதலை செய்து, தமிழையும் ஆட்சிமொழியாக ஏற்று, தமிழர்க்குற்ற இன்னல்களைக் களைந்து, இலங்கையில் அமைதி நிலவவும், அரசியலில் சனநாயகப்பண்பு நிலை பெறவும் ஆவன செய்ய இலங்கை அரசு முன்வர வேண்டுமென இப்பொது மாநாடு வற்புறுத்துகிறது.

இலங்கையில் பல தலைமுறைகளாகவே வாழ்ந்து வரும் திராவிட மக்களுக்குக் குடியுரிமை மறுக்கப்பட்டு வருவதும், மெல்ல மெல்ல அவர்கள் வெளியேற்றப் படுவதும், தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்கள இனத்தவரை வலிந்து குடியேற்றுவதுமான நடவடிக்கைகளை இலங்கை அரசு கைவிட வேண்டுமென்றும், இந்தப் பிரச்சினையில் நல்லதொரு முடிவு காண இந்திய அரசு உடனடியாக முயலவேண்டும் எனவும் இப்பொது மாநாடு வற்புறுத்துகிறது.

இலங்கையிலிருந்து 'நாடற்றவர்களா'கத் திருப்பி அனுப்பப்படும் தென்னுட்டு மக்களுக்கு உடனடி உதவி தந்து வாழ்வு தர இந்திய அரசினர் தவறி விட்டதைக் கண்டிப்பதுடன், வடதிசை அகதிகளுக்குத் தாராள உதவி அளிக்கும் இந்திய அரசினர் இலங்கையிலிருந்து, அகதிகளாகத் திரும்பும் தென்னுட்டினருக்கும் உரிய உதவி அளிக்க முன்வர வேண்டுமெனவும் இப்பொது மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன் : கோ. செங்குட்டுவன்

வழி : அண்ணுதாசன்

நீ. அன்புச்செழியன் பி.ஏ.

## இந்தி ஆதிக்கம்

இந்தியப் பேரரசில் ஒரு பகுதியாக அடக்கி வைக்கப்பட்டுள்ள திராவிடம் விடுதலை பெற்று திராவிடக் கூட்டாட்சி எனும் தனியரசாக மலரவேண்டும் எனப் பணியாற்றிவரும் திராவிட முன்னேற்றக் கழகம், துணைக்கண்டமாகவும் இந்தியா முழுமைக்கும் ஒரு ஆட்சி மொழி தேவை என்ற தத்துவத்தை மறுப்பதுடன்; அந்தப் போலித் தத்துவத்தை காரணமாகக்காட்டி இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் இந்தி மொழி ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர டெல்லி ஆதிக்கத்தினர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை இப்பொது மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

அரசாங்க நிர்வாகத்திற்குட்பட்ட பல்வேறு துறைகளின் மூலம் குறிப்பாக — வானொலி, திரைப்படம், செய்திப்பிரிவு, தபால்-தந்தி இரயில்வே, நாணயம், கல்வித் துறை, அளவுமுறை, நெடுஞ்சாலைகளில் தரப்படும் ஊர்ப்பெயர்—தொலை தூரம் ஆகிய குறிப்புக்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்தியைப் புகுத்துவதை இப்பொது மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

மாநிலங்களில் ஆட்சித் துறையும் நீதிமன்றத் துறை அலுவல்களும் அந்தந்த மாநில அல்லது வட்டார மொழிகளில் நடைபெறுவதுடன், தொடர்பு மொழியாக ஆங்கிலத்தை இப்போது போலப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் இப்பொது மாநாடு வற்புறுத்துகிறது.

எவ்விதக் காலவரையுமின்றி, 1965க்குப் பிறகும் மத்திய ஆட்சி மொழியாக ஆங்கிலமே நீடிக்க வழி செய்யும் வகையில் முன்னர் வாக்களித்தபடி அரசியல் சட்டத்தின் 17வது பிரிவைத் திருத்த வேண்டும்என்று இப்பொதுமாநாடு வற்புறுத்துகிறது.

இந்தி வழங்காத பகுதிகளில் உள்ள பள்ளி மாணவர்களை மூன்று மொழிகள் படிக்குமாறு கட்டாயப் படுத்தியும், இந்தி பேசும் பகுதிகளில் இரு மொழிகள் மட்டும் பயின்ருல் போதுமென்றும் ஏற்படுத்தியிருக்கும் அரசாங்கக் கல்விக் கொள்கையை இப்பொது மாநாடு கண்டிக்கிறது.

மூன்று மொழிக் கொள்கையின் பேரால், தென்னுட்டில் ஒவ்வொரு பள்ளியிலும் 'இந்தியே' கட்டாயமாக்கப்பட்டு, தேர்விலும் எண்கள் பெறவேண்டுமென விதி ஏற்படுத்தப்பட்டுள்ளதுமான நிலை, இந்தியைத் திணிக்கும் முயற்சியென இப்பொது மாநாடு கண்டிக்கிறது.

அனைத்து இந்தியப் பொதுப் பணித் துறை (Union Public Service) தேர்வு இனி 1963 முதல் இந்தியிலும் எழுதலாம் என்ற முடிவும் மத்திய அரசாங்கத்து ஊழியர்கள் அனைவரும் இந்தியைக் கட்டாயமாகப் படித்தாக வேண்டும் என இந்திய உள்துறை அமைச்சர் இலாகா விடுத்துள்ள உத்திரவும், பாராளுமன்றத்தில் பிரதம மந்திரி தந்த உறுதி மொழிக்கு மாறுபாடாக இருப்பதைச் சுட்டிக் காட்டுவதுடன், இந்தி மொழியினருக்குத் தனிச் சலுகை தரும் இம்முறைகளை மாற்றியமைக்க வேண்டுமெனவும், இந்தி பேசாத மற்ற மொழியினர்—குறிப்பாகதென்னுட்டு மக்கள் இந்த இந்தித் திணிப்பு முறைகளைஏற்றுக்கொள்ள மாட்டார்களெனவும் இப்பொது மாநாடு எச்சரிக்கிறது.

திராவிடத்தின் ஒருமித்த கண்டனத்தையும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், இந்தியைத் திணிக்கும் நடவடிக்கையை இந்தியப் பேரரசு தொடர்ந்து மேற்கொள்ளுமானுல் அவற்றை முறியடித்து. நமது உரிமைகளை நிலைநாட்டப் போராடுவதற்குத் தயாராக இருக்கும்படி திராவிடப் பெருங்குடி மக்களை இப்பொது மாநாடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

முன் : கரிவேங்கடம் பி.ஏ.பி.எல்

வழி : என்.வி.என். சோமு

புலவர் பொன்னி வளவன்

## தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி

(அ) திராவிடத்தைவிட்டுப் பிறமாநிலங்களில் — பம்பாய், கல்கத்தா போன்ற நகர்களில் வாழும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களின் குழந்தைகட்கு—அந்தந்த மாநிலத்தைச் சாராதவர்கள் என்ற காரணத்திஞல்—கல்விச் சலுகைகள் மறுக்கப்படுவது காண இப்பொது மாநாடு வருந்துவதுடன், அவர்கட்கும் நியாயமான உதவிகளைச் செய்யவேண்டும் என இப்பொது மாநாடு வற்புறுத்துகின்றது.

(ஆ) இந்திய அரசியல் சட்டத்தில் தாழ்த்தப்பட்டோருக்கென ஒதுக்கப்பட்டுள்ள கல்வி, உத்தியோகம் முதலிய சலுகைகள். அவர்கள் முற்போக்கு எய்துவதற்கு முழு அளவில் துணையாகி, நிலையாக அதனை நடைமுறையில் நன்கு செயல்படுத்துவதுடன் அதற்கென ஒதுக்கப்படுகிற தொகைகள் முழுவதும் பயன்படுமாறு வழிவகை செய்ய வேண்டுமென இந்தியப் பேரரசை இப்பொது மாநாடு வற்புறுத்துகிறது.

முன் : புலவர் ஆறுமுகம்

வழி : ஜியார்ஜ் (சென்னை), த. மு. பொற்கோ (பம்பாய்). டி. சபாபதி (காஞ்சி).

# பாரதமும் ஒரு பாஸ்டிலே!

"ஆட வரவில்லை...!"

"அப்படிக் கூறவில்லையே, அழைத்து வந்தவர்கள்."

"என்னிடமும் அவர்கள் அப்படிக் கூறவில்லையே!"

"பிறகு, எப்படிக்கூறி, அழைத்து வந்தார்கள்!"

"பசிக்கு ரொட்டி கேட்டேன். கொடுப்பதாகக் கூட்டிவந்தார்கள், இங்கே."

"ஓகோ! குறும்புக்காரன். அப்படிக் கூறி அழைத்துவந்தானோ, உன்னை. என்னிடம் கலையழகு—கைவந்த நாட்டியக்காரியை அழைத்து வந்திருப்பதாக வல்லவா கூறிச்சென்றான்."

"எனக்கு ஏதோ கொஞ்சம் ஆடவரும் அவ்வளவுதான். ஆனால் இப்போது நான் வந்திருப்பதோ ஆடுவதற்காக அல்ல. எனது உயிரே ஊஞ்சலாடும்போது பாவம் பிடித்து ஆடுவதெங்கே?"

"உயிர் ஊஞ்சலாடுகிறதா? வேடிக்கையான பெண்ணாகயிருக்கிறாயே! சொக்கவைக்கும் உனதழகு ஊமையாக்குகிறது--என்னை. இந்த நேரத்தில் விளையாடுகிறாயே."

"இந்த வெளி மயக்கு, போகும் உயிரை நிறுத்திவிடவாபோகிறது."

"மீண்டும் சொன்னதையே திருப்பிக் கொண்டிருக்கிறாயே. இப்போது உனது உயிருக்கு என்ன வந்தது?"

"சரியாகக் கேட்டீர்கள், உயிருக்கு என்ன வந்ததா?...சாப்பிட்டு இரண்டு நாட்களாகின்றன, பிரபு!"

"எனக்கும் அப்படித்தான். இரண்டு நாட்களாக சாப்பிட முடியவில்லையே என்றால். அஜீரணக் கோளாறென்று மருத்துவர் தடை போட்டுவிட்டாரே! நம்மிருவருக்குள் எவ்வளவு ஒற்றுமை பார்த்தாயா!"

"நான் பசி ஏப்பக்காரி பிரபு......"

"அதுதான் பார்த்தாலே தெரிகிறதே!.........வா இப்படி அதோ, மயில்மஞ்சம் காத்திருக்கிறது."

"பிரபு! நான் பட்டினி..."

"அதனாலென்ன, வா, இப்படி. உனது பசி பறந்துவிடும், இங்கே வா!"

"இதோ, ரொட்டி! வேண்டிய அளவு இருக்கிறது பார்த்தாலே சுவை சொட்டுகிறதல்லவா! அத்தனையும் உனக்குத்தான். ரொட்டி மட்டுமல்ல, உனது கன்னங்களின் கவர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியாது வெட்கப்பட்டு உருண்டோடி மூலையிலே தேங்கிக்கிடக்கும் அத்தனை ஆப்பிளும் உனக்குத்தான். வா, இப்படி...முதலில்..."

"இல்லை அது பிறகு!...முதலில் ரொட்டிவேண்டும் ரொட்டி. அந்த அத்தனையும் வேண்டாம். முதலில் ஒன்று......அதிலே பாதியை என் குழந்தைக்குக் கொண்டு போய்த் தந்துவிட்டு, மீதியை அவருக்குத் தந்துவிட்டு..."

"பிறகு வருகிறேனென்று கூறுகிறாயாக்கும். நீ கட்டழகி மட்டுமல்ல, கைகாரியுங்கூட. கட்டழகோடு அதுவும் உடன் பிறந்தது தானே. இந்தச் சீமானின் மாளிகை ரொட்டியை அவ்வளவு இலகுவாக சுவைபார்த்துவிட முடியுமா என்ன! அப்படிப்பட்ட ஏமாளியல்லவே நான்."

"முதலில் ரொட்டியைக் கொடுங்கள், பிரபு!"

"ஹா...ஹா, ரொட்டி...! அதைத்தானே முதலில் தரமாட்டேன். நான் வேண்டியதை நீ முடிக்கா முன்னர் நீ விரும்பியதை நான் செய்து விடுவேனோ? முதலில் உனது பசி தீர்ந்தால்...

"எனது பசியைவிட, குழந்தைக்காகத்தான் இந்த இழிநிலைக்கு வந்திருக்கிறேன்..."

"ஓகோ தாயாகிவிட்டாய்...... பரவாயில்லை. அணில் கடித்த பழங்கள் கசப்பதில்லையே!"

"ஒரே ஒரு ரொட்டி, கை எட்டும் தூரத்திலிருக்கிறதே, அதை எடுத்துக்கொடுங்கள், போனதும் வந்து விடுகிறேன்."

"பசி தீர்ந்தால் வரமாட்டாய் பிறகு. நான் பசியால் துடிக்க வேண்டும். அதனால்தான் சொல்லுகிறேன், முதலில் என் பசி போக வேண்டும்."

"அது வேறு பசி, இது வேறு பசி...பிரபு!"

"வேறு வேறாக இருந்தாலென்ன, பசி பசிதானே. முதலிலே தீர்க்கப்பட வேண்டியது இந்தப் பிரபுவின் பசி. அடுத்து உன்னைப்பற்றி கவனிக்கலாம்."

"கொஞ்சம் கருணை காட்டுங்கள் பிரபு. நீங்கள் ஒளியை விரும்புகிறீர்கள். திரி கருகிக் கொண்டிருக்கிறது, இங்கே. எண்ணை விட்டாலல்லவா அதன் ஜீவன் தங்கும், இருள் விலகும்."

"ஒளி கிளம்புவதற்கு முன்பு கனல் சுட்டெரித்து விட்டால்...... இந்த மாமாளிகை இருந்துதான் என்ன பலன்? அதற்கு நான் சீமானாக இருந்துதான் என்ன சிறப்பு?"

"அப்படியானால் ரொட்டி தரமாட்டீர்கள், இல்லையா?"

"கனிவாகப் பேசும் உனக்கும் இப்படிக் கனலைக் கக்கத் தெரிகிறதே. கோபம்! அது......சீமான்களுக்குரிய தனிச் சிறப்பென்றல்லவா இதுநாள் வரை கருதிவந்தேன். அது இப்போது உங்களுக்கும் கைவந்துவிட்டதா?"

"பசியின் தன்மைக்கு ஒற்றுமை விளக்கம் பேசினீரே, இப்போது இங்கே மட்டும் பேதம் காண்கிறீரே. உங்களது ஓநாய்ப் புத்தியைக் காட்டிவிட்டீர்களே!"

"பெண்ணே! வரம்பு மீறுகிறாய், நீ!"

"எனது செயலிலே தவறில்லையே. உங்களது பேச்சு, நடத்தை, நினைப்பு அத்தனையிலுந்தான் விஷமிருக்கிறது. எதையோ சொல்லி எப்படியோ அழைத்து வந்துவிட்டீர்கள். புள்ளி மானுக்கு வலை விரிக்கும் மனிதர்களைக் காட்டிலேதான் நான் பார்த்திருக்கிறேன். காட்டுக்குணம் படைத்த கனவான்களை இங்கே நாட்டிலும் சந்திக்க முடியுமென்பதை நன்றாக விளக்கிக் காட்டுகிறீர்கள்."

## மா. தங்கவேலர்

"அதிகப் பிரசங்கி..."

நீங்கள் மோசக்காரராயிருக்கும் போது, நான் அதிகப் பிரசங்கியாய் இருப்பதிலே தவறென்ன? உங்களது அகராதி எங்களுக்காக எந்த பட்டத்தைத் தந்த போதிலும் பரிதாபத்திற்குரியவர்களாகிவிட்ட நாங்கள் என்னதான் செய்ய முடியும். மலை உச்சியிலிருக்கும் உங்களோடு படுபாதாளத்திலிருக்கும் எங்களால் போட்டி போட முடியுமா என்ன?

"அப்போதே அந்த முட்டாளிடம் கூறினேன். வீதியில் நிற்கும் இந்தக் கழுதைகளை அழைத்து வராதே என்று! கேட்டானா? இப்போது இந்தக் கர்த்தபத்தின் கதறலைக் கேட்டுத்தானேயாக வேண்டும்!"

"அய்யா சீமானே! வீதியிலே நிற்கும் இந்தக் கழுதைக்காகத் தானே பாகுமொழி பேசி நிற்கிறீர்கள் போகட்டும் நாங்கள் கழுதைகளாகவே யிருந்துவிட்டுப் போகிறோம். அந்தக் கழுதைகளுக்கேனய்யா மாளிகைக்குள்ளே உபசாரம்! ஆப்பிளைக் காட்டி அழகு மொழி பேசியது இந்தக் கழுதைக்காகத்தானே, கோமானே! உனது சுவையான மொழி கேட்டு சொக்கினேன் நாம் கெட்டாலும் குழந்தைக்கு ரொட்டி கிடைக்கிறதே என்ற சபலத்தால் மகிழ்ந்தேன். ஆனால் அந்தச் சுடுமொழி! அதை பாராட்டத்தான் வேண்டும். எனது அறிவுக் கண்களையல்லவா திறந்துவிட்டது. எங்களைக் கழுதைகளாக நாய்களாக மதித்திருக்கும் உங்களுக்கா நாங்கள் இன்மளிப்பது? குழந்தை பசியால் கதறிக் கதறி சாகட்டும் கவலையில்லை வாழும் போதே செத்துவிட்டோமே! இனி ஒரு சாவா? அதைக் கண்டா அச்சம். இந்த அச்சத்தைத் துணிவாக்கிக் கொண்டல்லவா காமக் களியாட்டமாட வருகிறீர்கள் குழந்தைக்கு ரொட்டியில்லையே என்று கதறினேன். நீரோ கட்டியணைத்து காம சுகம் முதலில் பெறுவோம் என்று கூறுகிறீர். இப்படிப்பட்டவர்களால் தரப்படும் ரொட்டியை சாப்பிட்டு எனது குழந்தை உயிர் வாழ்வதைவிட நடுவீதியிலே நீர் குறிப்பிட்ட கழுதைபோல சாவதே மேல். இந்த உண்மையைத் தெளிவாக்கியதற்காக நன்றி...சீமானே! இந்த ரொட்டியோடு உன் கதை முடியட்டும்"

என் கதைக்கு முடிவுரை எழுத சின்னப் பெண்ணே, முடியுமா உன்னால். சக்கரவர்த்திகளும் அழிக்கமுடியாத உயரத்திலல்லவா நாங்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்."

"மேலிருப்பவர்கள் என்றாவது இறங்கி வந்துதானேயாக வேண்டும்."

"முட்டாளே! வா, இப்படி ஓடும் புலிகளைக்கூட துரத்திப் பிடிப்பதிலே சூரன் நான். நீ தப்பிவிட முடியாது. இது எனது ஏவலர்கள். நான் திட்டமிட்டால் யாராலும் மாற்ற முடியாது. ஓடாதே நில்!"

அவனது பிடியிலிருந்து தப்ப அவள் ஓடிக்கொண்டிருந்தாள். சீமான் துரத்தாமலிருப்பாரா? அவர் தான் புலியையே துரத்திச்சென்ற சூரராச்சே! ஆனால் இந்தத் துரத்தும் படலத்தின் முடிவுதான் மாபெரும் பாதகமாக அமைந்துவிட்டது சீமானுக்கு. இந்தப்பெண் புலி தப்பியது மட்டுமல்ல, ரொட்டி நீட்டி வேடிக்கைகாட்டிய சீமானை ரொட்டி வெட்டும் கத்தியால் பதம் பார்த்துவிட்டு ஓடோடி விட்டது. மார்பிலே கத்திக் காயம் பட்டுச் சாய்ந்த சீமான் மஞ்சத்திலே துடித்துக் கொண்டிருந்தார். ஆசை வெள்ளத்திலே மிதந்து வந்தவர். இப்போது ரத்த வெள்ளத்திலே நீந்திக் கொண்டிருந்தார். தேனென்று நினைத்தார் சீமான் குடித்தார்.........ஆனால் கோப்பையிலிருந்ததோ அத்தனையும் விஷம்.

பூக்காட்டின் சுவை நினைத்தார்—வந்தார். ஆனால் இருந்ததோ சாக்காட்டின் அருகில்......!

அதன் விளைவு......

சீமானுக்கு முடிவுரை எழுதிக் கொண்டிருந்தாள் அந்த அழகுப் பெண்ணாள். சீமானுக்காக அவள் எழுதிய முடிவுரை புரட்சிக்கு வித்திட்ட முன்னுரையாகவும் அமைந்து கொண்டிருந்தது. எந்த பிரெஞ்சு சிமானின் மார்புக்கு உயரே அந்த ஏந்திழை கட்டாரி தூக்கினாளோ அப்போதே உரிமை முழக்கமும் கரந் தூக்கிவிட்டது. அந்தச் சின்னப் பெண்ணாளின் கோபக்கனல் கப்பிய அனல் மூச்சிலே 'போர்க்கொடி' சலசலப்போடு அசையத்துவங்கியது. அவளது ஆவேசந்தேங்கிய பேச்சுக்குப் பிறகு முரசொலித்தது. படை பலம் பெற்ற பாரிஸ் பிரபுக்களும் ஆளவந்தவர்களும் தொடை நடுங்கிச் செத்துக் கொண்டிருந்தார்கள். புலியைத் துரத்திய சூரர்கள் பதுங்குமிடந் தேடிக் கொண்டிருந்தனர். துணிந்து கிளம்பினாள் ஒரு

# எழுந்திரு!

எழுந்திரு! நீ எழுந்திரு!
இருள்கிழிக்கும் அறிஞர் அண்ணு
இளம்பரிதி பாசறைக்கே.

இமயம் கண்டு வெற்றிகொண்ட
இனத்தின் ஏறே! சினப் புலியே!

நமையடக்க வரும் வடக்குத்
துடுக்கடக்கத் தோள் குலுக்கி எழுந்திரு!
பகை தூள்! தூள்! தூளாகும்!

தொன்னூலைத் தந்த தமிழ்
அந்நாள் இகழ்ந்த மன்னர்
என்னுனர் நீ வடக்கைக்
கேள்! கேள்! கேள்! — தமிழ்
ஒன்னர் உயிர் குடிக்கும்
வாள்! வாள்! வாள்!

போர்முறையைக் கண்டவர்கள்
பொங்குகடல் வென்றவர்கள்
யார்க்கடிமை? என்றடிமை?
கேள்! கேள்! கேள் — வடக்கை
வெற்றி கொண்டதே தமிழர்
தோள்! தோள்! தோள்!!

- கவிஞர் வாணிதாசன்

வள். அவளைத் தொடர்ந்தே இப்படி ஆயிரமாயிரமாக 'எதையுந் தாங்கும்' இதயத்தினர் கிளம்புவார்களென்று பிரெஞ்சு சர்வாதிகாரிகள் நினைக்கவில்லை. ரொட்டிக்காக அழுத பண்பை விலை கூறும் அளவுக்கு வந்த அதே கூட்டத்தைக் கண்டுதான் விழித்துவிட்ட சிங்கத்தைக் கண்டு நடுநடுங்குவது போல செத்துக் கொண்டிருந்தனர். இப்போது சீமான் கூட்டத்தார் முடியுண்டு, அடிதொழ ஆளுண்டு, கொடியுண்டு கோலுண்டு என்று மகிழ்ந்திருந்த கூட்டம் வெடித்த எரிமலையைக் கண்டு வாய்பிளந்து நின்றது.

புரட்சி புகை கிளம்பிவிட்டது. அந்தப் புகை ஆளவந்தார்களின் இதயத்திலும் குடைந்தது. 'கொடுமைப்படுத்த பாஸ்டிலியிருந்தென்ன? அதையுமல்லவா இந்தப் புதுமைச் சித்தர்கள் தகர்த்துவிட்டார்கள்.' பாஸ்டில் இருந்தபோது ஊமையாகத்தானே இருந்தனர் இந்த ரொட்டி தேடிகள். வாய் திறந்தால் 'வனவாசம்' கிடைக்காமல் தப்புமா என்ன! ஒருமுறை ...வேலைக்காரனின் மனைவியோடு கொஞ்சிய சீமானைப்பார்த்து அந்த வேலைக்காரன் கெஞ்சித் தடுத்தபோது அவனுக்கு என்ன தண்டனை கிடைத்தது தெரியுமா? பாஸ்டிலுக்கு அனுப்பப்பட்டான் அந்தத் 'திமிர்' பிடித்த வேலைக்காரன். இப்படியெல்லாம் வாட்டிட முடிந்ததே இந்த ஏழைகளை. இப்படிப் பட்டவர்களையெல்லாம் சிறைபடுத்திக்கொண்ட அப்படிப்பட்ட பாஸ்டிலல்லவா உடைந்துவிட்டது. பாஸ்டில் உடைந்து விட்டது. அதைத் தொடர்ந்தே சர்வாதிகாரக் கோட்டையுமல்லவா சாய்ந்தது.

பிரெஞ்சின் வரலாற்றுப் பொன்னேட்டிலே ரொட்டி தேடிகள் தீட்டிய புரட்சி வரிகள், உரிமை முழக்கம் கிளப்புவோர் மறந்து போகக் கூடிய பழங்காதையல்ல, அதே போது ஆதிக்க வாதிகளும், ஆளவந்தவர்களும் நினைவிலே என்றென்றும் நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டிய பயந்தரும்—பயன் தரும்—பாடமுமாகும். அத்தகைய வேட்கையை இலட்சிய வாதிகளுக்கும், வேதனை கலந்த விளக்கத்தை வேடதாரிகளுக்கும் விளக்கும் அந்தப் புரட்சி வரிகளை நல்லவர் மறக்கவில்லை. அதன் காரணமாகத்தான் இன்று எங்கெங்கு உரிமை முழக்கம் கிளம்புகிறதோ அங்கெல்லாம் புரட்சி சிந்து பாடப்படுகிறது. ஆனால்...... பரிதாபத்திற்குரிய முறையிலே ரொட்டி காட்டி வேடிக்கை பேசிய கூட்டத்தார்தான் இன்னும் பழைய நிலை மறந்து மக்கள் சக்தியை மட்டமாக மதிக்கத் துவங்கிவருகின்றனர். விழியிருந்தும் பாதை தவறுபவர்களை எப்படித்தான் அழைப்பதோ? அவர்களுக்கான பாடம் முன்னே பரப்பப்பட்டிருந்தும், பாராமுகமாயிருக்கின்றனர். ஆதிக்கம் நிலைக்காது, ஆணவம் பிழைக்காது; சர்வாதிகாரம் ஒழிக்கப்பட்டே தீரும் என்று தெரிந்திருந்தும், நீரோவின் சிரிப்புத்தான் சிறந்தது, ஜாரின் கம்பீரந்தான் பாராட்டக் கூடியது, ஹிட்லரின் வேக நடைதான் லாகவத்திற்குரியது என்ற முடிவுக்கு வந்து அவர்களின் பாதையிலே தாங்களும் நடைபோடுகின்றனரே அதை நினைக்கும் போதுதான் உலகம் சிரிக்கிறது.

அன்று பிரெஞ்சிலே ரொட்டிக்கு அழுதவர்களைப் போலவேதான் இன்று இங்கே, அழகு பாதமென்று வர்ணிக்கிருர்களே இந்த பாரதத்திலும் கஞ்சிக்காகஅலைந்து திரிகிருர்கள். அன்று அவர்களுக்குத் தேவைப்பட்டது ரொட்டி! இன்று இவர்களுக்குத் தேவைப்படுவது கஞ்சி! குழந்தையின் அழுகுரலைக் கேட்கச் சகியாது ஒரே ஒரு ரொட்டிக்காக பண்பு இழக்கத் தயாராகினுள் அன்று ஒரு தாய். இங்கும் மாறவில்லையே இப்போதும் அந்த இழிவான நிலை. 'எனக்கும் கூழில்லை குழந்தைக்குப் பாலில்லை' என்று அழுத தாய் பாலுக்கா, வயிற்றுக்காக பண்பு இழப்பதை யாரும் இங்கே மறுக்க மூடியாதே! நாளிதழ்கள் இந்தச் செய்தியைத்தானே அகிகமாக நமக்களிக்கின்றன.

பண்பு கெட்டவர்களின் வழக்குகள் நீதிமன்றத்திற்கு வரும்போது, அங்கே அவர்களின் பண்பிழப்பிற்கு காரணம் கூறும்போது 'பசியின் கொடுமையைத்தான் படம் பிடித்துக் காட்டுகிருர்கள். இவர்களின் வாழ்வுக்கும் ரொட்டிதேடிச் சென்றவளின் வாழ்வுக்கும் என்ன வித்தியாசம் இருக்க முடியும். நாட்டிலே வறுமையை வளர்த்தவர்களால் அந்த இல்லாமைக் கொடுமையைப் போக்க முடியவில்லை. வீண் பெருமை பேசிக் காலந் தள்ளுகின்றனர். யாராவது தட்டிக் கேட்டால் பட்டாளத்தைக் காட்டுகின்றனர். 'ஆளவந்தவரே மக்களுக்கு நல்வழி காட்டு' என்ருல், 'நீ ,போக்கிரி நாட்டின் துரோகி, வடக்கு தெற்கு இடக்குப் பேசும் துரோகிகள் ஒழிக! பாரதம் வாழ்க! என்று முடிக்கின்றனர் இன்றைய சுகவாசிகள்.

அன்றும் இதுபோலத்தான் லூயி பரம்பரை பேசியது. பேச்சுத்தான் அப்படியிருந்தது. முடிவோ வேறு விதமாக அமைந்தது. ரொட்டி கேட்ட போது புல்லைத் தின்னும் படி கூறியவர்களும், எலும்பை நாய்க்குப் போடு அதற்காக வரிசையாகக் காத்திருக்கும் மனிதப் பதர்களுக்குத் தராதே என்று சொன்னவர்களும்; வேலைக்காரனுக்கு ஆசை நாயகியா என்று பேசியவர்களும்; குழந்தைக்காக ரொட்டி கேட்டு அழுதபோது என்னேடு குலவிடவாவென்று அழைத்தவர்களும் எங்கே அழைத்துச் செல்லப்பட்டிருக்கிருர்கள்? கில்லட்டின் என்ற வெட்டுப் பாறையிலே உருண்ட தலைகள் எத்தனை? முச்சத்தியிலே நிறுத்தப்பட்டு மூக்கறுபட்டவர்கள் எத்தனை பேர்... என்ற பட்டியலைத் தர காத்திருக்கிறதே புரட்சி வரிகளைக் கொண்ட பொன்னேடு. மறந்ததும் ஏனோ?

பாஸ்டிலில் நடந்த கொடுமைகளின் அளவைக் குறைத்துக் காட்டி விடுகிறதே இங்கே நடக்கும் கொடுமை! அன்று அங்கே ஆணவத்தால் கர்ஜிக்கும் அதிகாரியிருந்தான்; லஞ்சம் வாங்கும் பேயனிருந்தான்; திருடும் சீமான் இருந்தான்; மக்களுக்காக யிருந்ததையெல்லாம் தனக்காக ஆக்கிக் கொள்ளும் 'தாராள' மனது படைத்த 'தர்மவான்'களிருந்தார்கள், அவர்களைக் காப்பாற்ற படையிருந்தது பீரங்கியிருந்தது. பரிதாபம்! ஒன்றுகூட அவர்களைக் காத்து விடவில்லையே.

இன்றும் இங்கே அந்த நிலையிலே மாற்றமிருக்கிறதென்று கூறிடமுடியுமா? இன்ன காரணத்துக்காக ஆள்பவர்கள் நல்லவர்கள் என்று எடுத்துக்காட்ட முடியவில்லையே! பெர்மிட் தேடும் பெரிய மனிதர்கள் கொண்ட ஸ்தாபனமாக வல்லவா ஆளுங்கட்சி ஆகிவிட்டது! பாரதத்தின் தலைநகரிலே தான் எத்தனை திருக்கூத்து? 'பெர்மிட் வாங்க பெரிய இடத்தின் தொடர்பை ஏற்படுத்த ஒரு பெரிய கூட்டமே வேலை செய்கிறதே! இப்படி ஒரு கூட்டம் அலைவது, அதை ஆட்சியாளர் விட்டு வைத்திருப்பதும் நாட்டுக்கு அவமானமென்று எத்தனையோ முற்போக்கு ஏடுகள் எழுதியும் இன்னும் நிலைமை சீர்படவில்லையே!

அழகழகான பெண்களை தமது கூட்டத்தின் வேலைக்காக சேர்த்துக்கொண்டு தலைநகரை வலைவீசி வருவதாக ஏடுகள் செய்தி தருகின்றனவே! இதைவிட இவர்களின் சீர்கேடான நிலையை எடுத்துக்காட்ட விளக்கமும் தேவையா என்ன. லஞ்சம் வாங்கும் அதிகாரியைப் பார்க்காமலிருக்க முடிகிறதா என்ன! ஒரு ரூபாயிலிருந்து ஒரு லட்சம் வரை லஞ்சம் வாங்கும் அதிகாரிகளாகவல்லவா அவர்களிருக்கிருர்கள். ஆளவந்த மந்திரிகள் நிலம் வாங்கிக் கொண்டிருப்பதாக வல்லவா செய்திகள் பறந்து வருகின்றன. மந்திரிகளே இப்படி இருக்கும்போது பாவம் அதிகாரிக்கு மட்டும் ஆசை இருக்காதா என்ன! அவரும் பாரதத்தைத்தானே காப்பதாக பிரமாணம் எடுத்திருக்கிருர். இதுதான் இன்றைய பாரதத்தின் நிலை. இப்போது கூறுங்கள் புரட்சி ஏற்படுவதற்கு முன்பிருந்த பிரெஞ்சுப் போல ஏறத்தாழ இந்த பாரதமும் இன்று இருக்கிறதா இல்லையா?

நமது மதிப்பிற்குரிய தலைமுறைத் தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் பிரெஞ்சுப் புரட்சியை சித்தரித்தபோது...

...''போக்கிரிகளை சுட்டுத்தள்ள வேண்டும்; காலாடிகளிடம் நாட்டைவிட்டுவைப்பதா? பிடித்துத் தள்ளவேண்டும் பாஸ்டிலியில்; துருப்புக்களுக்கு உத்திரவு பிறப்பித்தால் வெறி நாய்களைச் சுட்டுத் தள்ளமாட்டார்களா? மன்னனை மதிக்காமல் மமதையோடு கூவும் இந்த மக்களைக் கண்டு நாம் சும்மாயிருப்பதா? மானம் போகிறதே; பரம்பரைக் கௌரவம் பாழாகப் போகிறதே...கிளம்புவோம் சிதறடிப்போம்...சீமான்கள் சிலர் கூடினர் அரண்மனையில். ஆணவத்தை இதுபோல் கக்கினர் கடைசி முறையாக! ஆளத் தெரியாத மன்னன் மக்களின் ஆத்திரக் கடலைக் கடக்க இந்த மண் குதிரை மீது ஏறிக்கொண்டான். மக்களைக் கூட்டிய மன்னன் பிறகு அவர்களைக் கடுமையான முறையினுலே அடக்குவது என்ற விபரீத எண்ணம் கொண்டான். புயலை எதிர்த்தான்! சீறும் நாகத்தின் முன்பு சிறுபிள்ளை யாட்டமாடினுன். மக்கள், மன்னரின் படை கிளம்புவது கண்டனர்.

கையில் கிடைத்ததை எல்லாம் தூக்கினர். 1789—சூலை 14-ந் தேதி போர்க்கோலம் பூண்ட மக்கள் எங்கே பாய்ந்தனர்? பாஸ்டிலி! மன்னன் அடக்குமுறையை துவக்கத் துணிந்தான் என்று தெரிந்தும் மக்கள் மனதிலே தோன்றிய முதல் எண்ணம் பாஸ்டிலி! பாஸ்டிலிதான் நம்மைப்,போன்ற—ஏழைகளைச் சீமான்களின் எதேச்சதிகாரத்தை எதிர்க்கத் துணிந்தவர்களைக் கொடுமை செய்யும் இடம். நாமும் சிக்கிக்கொண்டால் அந்தப் பாழும் சிறைச்சாலைக்கு இழுத்துச் சொல்லப்படுவோம். யாரால் சகிக்க முடியும் இந்த இம்சையை? அந்தோ எவ்வளவு பேரை இம்சித்த இடம், அந்த பாஸ்டிலி! பாஸ்டிலி ஒழிக! ஒழிக கொடுமை! என்று புரட்சி முழக்கமிட்டது! அந்த புரட்சிக் கீதம் எழுப்பிய நாள்தான் சூலை 14! புரட்சிப்புயல் பாஸ்டிலியைத் தூள் தூளாக்கியது! எங்கணும் வெற்றி முழக்கம் கேட்டது. அந்த வெற்றி முழக்கத்தை எழுப்பிய நாள்தான் சூலை 14''......என்று குறிப்பிட்டார்கள்.

அந்த வரலாற்றில் இடம்பெற்ற சூலை 14-ம் நாள் குறிப்பாக, விடுதலை வேண்டி நிற்கும் திராவிடர்கள் மறக்க முடியாத நாளாகும். நாம் குன்றத்திலே போர்க்கொடி உயர்த்திய நான்கு நாட்களிலே ஒரு நாள் அந்த சூலை 14...வரத்தான் செய்தது. அன்ருேர் நாள் வந்த சூலை 14—பாஸ்டிலியைத் தகர்த்தது. இந்த சூலை 14 போர்க்கொடி தூக்கினர் திராவிடத் தீரர்கள். அந்த 14—பாஸ்டிலியை பிழைக்கவிடவில்லை. இந்த 14—பாரதத்தின் ஆணவத்தை நினைத்து மகிழ்ந்திருப்போருக்கு.........சரிந்துவிட்ட தேசீய கொள்கையைத் தாங்கிப் பிடித்திருக்கும் துரோகிகளின் சதித்திட்டத்துக்கு சமாதி கட்டட்டும்.

கோழைகள் விலகட்டும்!

வீரர்கள் பின் தொடரட்டும்!!

# “வென்ருன்” வரலாறு உடையவர்களை “வந்தான்” வரலாற்றினர் ஆள்வதா?

## மதுரை மாநாட்டில் அண்ணு முன்னுரை

அன்புள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் அருங்காவலர்களாகத் திரண்டிருக்கும் தோழர்களே! தாய்மார்களே!

மதுரை — திருப்பரங்குன்றத்தில் நடைபெறும் தி. மு. கழகத்தின் மூன்ருவது பொது மாநாட்டுக்கு நான் தலைமை வகிக்கவேண்டுமென்று கூறி என்னுடைய தம்பிமார்கள் எனக்கு இருக்கவேண்டுமென்று அவர்கள் எண்ணுகின்ற சிறப்பியல்புகளால் புகழ்ந்துகூறி தலைமை ஏற்கும்படி பணித்திருக்கிருர்கள்.

தி. மு. கழகத்தில் இருக்க வேண்டும் நான் என்று விரும்புகிற நல்ல ஜனநாயகப்பண்பின் படிபார்த்தால் இந்தப் பொது மாநாட்டுக்கு நான் தலைவராக இருந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டில் நம்முடைய அருமை நாவலரைத் தலைமை தாங்க அழைத்ததைப் போல் இங்கே தலைமை தாங்க இன்னெருு தம்பியை அழைக்க இருந்தேன். ஆனுல் கழகத்தில் ஏற்பட்ட சூழ்நிலையில் என்னையே மறுபடியும் பொதுச் செயலாளராக வரும்படி செய்து இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கும்படி பணித்திருக்கிருர்கள் அருமைத் தம்பிகள். அவர்களது அன்புக் கட்டளையை மீற முடியாமல் தலைமை வகிக்க ஏற்பட்டது.

நான் தலைமை வகிக்காமல், கீழே வந்து உங்களுடன் கலந்தமர்ந்து இங்கே நடைபெறும் கவின்மிகு நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க வேண்டுமென்பதே என் விருப்பம்.

நாம் எப்படிப்பட்ட நேரத்தில் இந்த மாநாட்டில் கூடியிருக்கிருேம் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு முதலிய மாவட்டங்களும் கேரள கர்னுடகப் பகுதிகளும் வெள்ளக் கொடுமைகளால் பாதிக்கப்பட்டு நாமெல்லாம் கவலை கொள்ளத்தக்க விதத்தில் அந்தப் பகுதி மக்கள் தொல்லைகளுக்காளாகியிருக்கின்றனர். குறிப்பாகத் தஞ்சையிலும் திருச்சியிலும் ஏற்பட்ட வெள்ளவிபத்தின் காரணமாகவழக்கமாக நான் கண்டு வந்த முகங்களை இங்கேகாண முடியவில்லை. இந்த மாநாட்டிலே கூடியிருக்கும் இவ்வளவு பெரிய கூட்டத்தில் ஆறில் ஒரு பகுதிமக்கள் வெள்ளத்தின் காரணமாக வரவில்லை. வீட்டுக்கு பொறுப்பாக இருக்கக்கூடியவர்கள் பெரும்பான்மையோர் இதில் கலந்துகொள்ளமுடியாதஅளவுக்கு வெள்ளம் கொடுமைகளை விளைவித்துவிட்டிருக்கிறது. ஆகையினுலே முதலில் வெள்ளக் கொடுமைகளால் வீடிழந்தும் மாடிழந்தும் நிலங்கள் பாழ்பட்டும் தொல்லையிலாழ்ந்திருக்கும் அந்தப் பகுதி மக்களுக்கு தி. மு. கழகச் சார்பில் நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களுக்குத் துணை நிற்கவும் தி. மு. கழகம் தயாராக இருக்கிறது என்று உறுதி கூறுகிறேன்.

அந்தப் பகுதி மக்களுக்கு உதவும் பொருட்டு, நீங்கள் திருப்பிக் கொடுத்து விடுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் நம்முடைய அழுத்தமான பொருளாளர் கருணுநிதி அவர்களிடமிருந்து ரூ. 2,000 கடனுகப் பெற்றுக் கொண்டு, நாளை வெள்ளப் பகுதிகளுக்குச் சென்றுவர இருக்கிறேன. வெள்ளப் பகுதியில் அல்லலுக்காளாகி இருக்கும் மக்கள் எல்லாம் உங்களை வாழ்த்த இருக்கிருர்கள். நம்முடைய உற்ருர் உறவினர்களான அவர்களுக்கு நாம்தான் உதவ வேண்டும். தஞ்சைக்கு மட்டும் 2,000 ரூபாயும், மற்றப் பகுதிகளுக்குச் சேர்த்து மொத்தத்தில் ஒரு ஐயாயிரம் ரூபாய்களை வட்டியில்லாத கடனுகப் பெற்றுக் கொண்டு போகிறேன்—கழக முன்னணி வீரர்கள் உங்களிடையே உண்டியலேந்தி வரும்போதுஇதை நீங்கள் திருப்பி அளித்துவிடுவீர்கள் என்ற நம்பிக்கையில்.

தமிழகத்திலும் கர்நாடகத்திலும் ஆந்திரத்திலும், கேரளத்திலும் இதைப் போன்ற ஆபத்தான வெள்ள விபத்துக்கள் ஏற்பட்டால் வட அரசு அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருப்பதை நாம் கண்டு வருகிருேம். இந்தியப் பேரரசு தென்னகத்தில் ஏற்படும் இதைப்போன்ற கொடுமையான விபத்துக்களுக்கு தக்க சமயத்தில் தக்க உதவியை தக்க அளவில் தருவதில்லை. இம்முறை ஏற்பட்டுள்ள இந்தப் பயங்கரமான வெள்ளச் சேதத்துக்கு நேரு பண்டிதர் 25000 ரூபாய் நிவாரண நிதியாக அளிந்துள்ளார். இது போதுமானதல்ல. உடனடியாக வெள்ளப் பகுதிகளில் தேவையான உதவிகளைச் செய்துதர வேண்டுமென்று அரசினரை என்னுடைய தலைமை உரையின் மூலம் வேண்டுகோளாகவும்—அந்த வேண்டுகோள் தள்ளப்பட்டால் அதையே எச்சரிக்கையாகவும் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சிவசமுத்திரம் பகுதிகளில்பெய்த மழை மேட்டூர் அணையில் நிரம்பி அது மற்ற மற்ற ஆறுகளுக்குச் சென்று சிற்ருறுகளில் பாய்ந்து கரைபுரண்டு வெள்ளப் பெருக்கெடுத்துவிட்டது.

சீர்காழியிலிருந்து கும்பகோணம் பகுதியும், திருவாரூரிலிருந்து கும்பகோணம் பகுதியும் தண்ணீரால் சூழப்பட்டு, மாடுகளும் கன்றுகளும் நீந்திச் செல்லமுடியாமல் தத்தளித்து, கரையோரமுள்ள மக்கள் கையே தலையணையாகவும்—வானமே கூறையாகவும் கொண்டு வாழ்பவர்கள்—வாட்டமுற்று கலங்கத்தக்க அளவில் வெள்ளம் வேதனையை விளைவித்திருக்கிறது.

நேற்றைய தினம் தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் மன்னை. நாராயணசாமி ஊர்வலத்தை விட்டு உடனடியாகப் புறப்பட்டு வெள்ளக் கொடுமைகளை நிவர்த்திக்கும் பணிகளில் ஈடுபடச் சென்றுவிட்டார்.

அப்படிப்பட்ட ஒரு வெள்ளக் கொடுமையிலிருந்து நம் மக்களை காப்பாற்ற முடியாத நிலையிலேதான் நம்முடைய ஆறுகள் உள்ளன.

காங்கிரஸ் சர்க்கார் ஆறுகளின் பராமரிப்புகளுக்காக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 2500 கோடி ரூபாயும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4,000 கோடி ரூபாயும் செலவிட்டும் பயன் என்ன?

ஒரு ஆறு உடைத்துக்கொண்டால் அதைச் சரிப்படுத்தும் அறிவு நம்முடைய என்ஜினியரிங் இலாகாவுக்கு இல்லை. மாநில அரசுக்கு இல்லை. இந்தியப் பேரரசுக்கு இல்லை.

இராசேந்திர சோழனது காலத்தில் கட்டப்பட்ட அருமையான கல்லணை கசிந்திருக்கிறது. எவ்வளவு காலத்துக்கு முன்னுலே கட்டப்பட்டது அது? ஆற்று வெள்ளத்தைத் தடுப்பதற்காகவும்—கொள்ளிடத்தையும் காவிரியையும் பிரிப்பதற்காகவும் கட்டப்பட்ட அணை அது.

ஆற்று வெள்ளங்களைத் தடுப்பதற்காக அன்றே அணைகளைக்கட்டி வாழ்ந்தவர்கள் நாம். எவ்வளவு சீராக வாழ்ந்தோம்—இதை எண்ணுகிற நேரத்தில் நம்முடைய பழம் பெருமைகளை எடுத்து இந்த அளவுக்கு விளக்க வேண்டிய அளவுக்கு நம்முடையவர்களில் சிலர் வழிதவறியிருக்கிருர்கள். இந்த மதுரைப் பொது மாநாட்டையொட்டி நேற்றைய தினம் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்வலம் வழிதவறியவர்களும் திரும்பி வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன.

வழிதவறியவர்களை மீண்டும் ஏன் அண்ணு திரும்ப அழைக்கிருய் என்று நீங்கள் கேட்கலாம்.

எட்டு குழந்தைகளைப் பெற்ற தாய் திருவிழாவுக்குச் சென்று, வருகையில் ஒரு குழந்தை காணுமல் போய்விட்டால் மற்ற ஏழு குழந்தைகளையும் மூலைக்கு ஒருவராக அனுப்பிதேடச் செய்வாள்.

அவனுக்குச் சாக்லெட் என்ருல் அதிக விருப்பமாயிற்றே எந்தப் பாவி சாக்லெட்டைக் காட்டி கழுத்தில் இருக்கும் தங்கச் சங்கிலியைப் பறித்துக்கொண்டானே—என்று தாய் எப்படிக் கலங்குவாளோ—அப்படிப்பட்ட தாயைப் போல—நான் ஒரு பைத்தியக்காரன்—மறுபடியும் விலகியவர்கள் வரமாட்டார்களா என்று என் பேதை நெஞ்சம் எதிர்பார்க்கிறது. சில குழந்தைகள் திருவிழாவில் காணுமல் போய்விட்டால் சில திருடர்கள் அந்தக் குழந்தையிடம் மிட்டாயைக் காட்டி அதன் நாக்கில் அந்த இனிப்பைத் தடவி கையில் இருக்கும் மோதிரத்தைப் பறித்துக் கொள்வதைப்போல், கொள்கையைக் கழற்றிக் கொள்ளாமல் என் தம்பியை திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாநாட்டில் நீங்கள் பெறுகின்ற மன எழுச்சியை நிச்சயமாக வழி தவறியவர்களை திரும்ப வரவழைக்கப் பயன்படுத்த வேண்டும்.

ஆனுல் திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைய தினம் எத்தனை பெரிய எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் தன்பாதையைமாற்றிக் கொள்ளாது.

நேற்று காலையிலே நீங்கள் எல்லாம் எழிற்கோலம் கொண்டு ஊர்வலம் வந்தபோது என் மனம் இந்த நாட்டிலே இல்லை. அல்ஜீரிய நாட்டிலே உலவிக் கொண்டிருந்தது.

பிரெஞ்சு நாட்டின் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட வேண்டு

### அண்ணுவின் கவலை!

—(—ஃ—)—

நான் எப்போதும் உயரமாக இல்லையே என்று கவலைப்பட்டது இல்லை. இன்று கவலைப்படுகிறேன். இவ்வளவு தூரம் வியாபித்திருக்கின்ற உங்களை—இந்தப் பெருங்கூட்டத்தின் முடிவைப் பார்த்து மகிழ நான உயரமாக இல்லையே என்ற கவலை எனக்கு இன்று ஏற்படுகிறது.

—மதுரைப் பொது மாநாட்டு தலைவர் முன்னுரையில் அண்ணு

# ஒத்திகைக்கே வரமுடியாதவர்கள் . . .
# . . . நாடகத்தில் பங்கேற்க முடியுமா?

மென்று அந்த நாட்டு மக்கள் போராடி வருகிறார்கள். வெள்ளை உடை அணிந்த நீங்களெல்லாம் காக்கி உடை அணிந்த வீரர்களாகவும் உங்கள் கரங்களிலேயிருந்த கொடிகள் துப்பாக்கிகளைப் போலவும் நீங்கள் எழுப்பிய முழக்கங்கள் அணிவகுப்பு ஸ்லோகங்களாகவும் எனக்குத் தோன்றி அல்ஜீரிய விடுதலைக் களத்தை என் நினைவுக்குக் கொண்டுவந்தன. அந்த அல்ஜீரியாவில் நாம் பெற்றிருந்ததைப் போல் மூன்று சங்கங்கள் இல்லை. திருக்குறளைத் தந்த புலவர் இல்லை. 2000 தமிழ்ப் புலவர்கள் இல்லை. அகமும் புறமும் படைத்தவர்களா என்றால் இல்லை. எங்கள் நாடு எங்களுக்குத் தேவை என்னும் அரசியல் அரிச்சுவடி அறிந்தவர்களாகயிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் உங்களுக்குக் கிடைத்ததெல்லாம் நான்தானே என்று வருத்தப்பட்டேன். என்னை விட ஆற்றல் படைத்தவர்கள் போர்ப்படையை நடத்துகிறவர்கள் வரும் வரைதான் நான். அவர்கள் வந்தவுடன் நான் உங்கள் பக்கம் வந்துநின்று போராடுவேன்.

நான் உங்களிலேயே சற்றுவயது மூத்தவன். துணைவியாரை மேடையில் வைத்துக்கொண்டு வயதைக் கூறுவது பொருத்தமாகாது. 52வயதாகிய எனக்கே டேங்கிகளும் பீரங்கிகளும் மனக் கண்முன் தோன்றின என்றால் உங்களுக்கு என்னென்ன எண்ணம் ஏற்பட்டிருக்குமோ. நெடுஞ்செழியனுக்கும் மதியழகனுக்கும் கருணாநிதிக்கும் என்னென்ன படைகள் தோன்றினவோ. என்னென்ன விபரீத எண்ணங்கள் தோன்றினவோ? எனக்கிருக்கின்ற பயமெல்லாம் எங்கே நிலைமை என்னை மீறிச் சென்றுவிடுகிறதோ என்பதுதான்.

நேற்றையத் தினம் ஊர்வலத்திலே நான் அமர்ந்து வந்த நேரத்திலே திருப்பரங்குன்றத்தின் உச்சி மீது ஏறி நின்று சில தோழர்கள் கொடியை அசைத்துக் காட்டினார்கள். முதலில் யாரோ அசைவது போல் மலைமீது தெரிந்ததும் யாரோ பக்தர்கள் என்று எண்ணிக் கொண்டேன். பிறகு, கொடி அசைதது தெரிந்தது. உற்றுப் பார்த்ததில் இரு வண்ணக் கொடி அசைவது தெரிந்தது. மெத்த சிரமப்பட்டு நமது தோழர்கள் குன்றின் மீது ஏறி கொடி காட்டினார்கள். நான் அப்போது எண்ணிக் கொண்டேன். தோழர்களே தோழர்களே நீங்கள் பிடிக்க வேண்டிய குன்றுகள் ஏராளம் உள்ளன. நடத்தவேண்டிய ஒத்திகைகள் அநேகம் உள்ளன. இப்போது நடப்பதெல்லாம் நாடக ஒத்திகைகள். வெறும் ஒத்திகைகளுக்கே அலுத்து விடுபவர்கள் நாடகத்தில் பங்கேற்க முடியாது. ஆகவே இப்போதே அலுத்துப் போய்விட்டவர்கள் அரசியல் இயக்கங்களில் இருக்க இலாயக்கற்றவர்களாவார்கள்.

முன்னர் ஆச்சாரியார் அவர்கள் கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தில் அவருக்கு நாமெல்லாம் கருப்புக் கொடி காட்டிய நேரத்தில் போலீசார் மக்களை துரத்தித்துரத்தி அடித்தார்கள்.

இந்தப் பக்கம் பார்த்தால் ஓடி வரும் ரயில்—மறு பக்கம் முள் வேலி—மறுபக்கம் பலபார் போலீஸ் துரத்தித்துரத்தி மக்களை அடித்தது. சாதாரணமானவர்களை மட்டுமல்ல நமது பன்மொழிப்புலவர் அப்பாதுரையாரையும் அடித்தார்கள். ஏன் என்று கேட்க எனக்கு வக்கில்லை. இரத்தம் சொட்டச் சொட்டத் தோழர்கள் தங்கசாலைத் தெருவிலிருந்த தலைமை நிலையத்துக்கு வந்தபோது அவர்களுக்குக் கட்டுக்கட்ட கூட ஒரு வைத்தியரும் வரவில்லை. போலீசாருக்குப் பயந்துகொண்டு எந்த டாக்டரும் வர மறுத்துவிட்டார்கள். ஒரே ஒரு டாக்டர் நம் தோழர்களுக்குக் கட்டுப்போட வந்தார் — அவரை வேறு நோயாளிகள் யாரும் அணுகாத காரணத்தால்!

இன்று பார்க்கின்றேன் நம் இயக்கத்தில் தடுக்கி விழுந்தால் டாக்டர்கள் மேல்தான் விழவேண்டும் அவ்வளவு டாக்டர்கள் — அவ்வளவு வழக்கறிஞர்கள் நமது இயக்கத்தில் நிறைந்திருக்கிறார்கள்.

இந்த வளர்ச்சி எப்படி ஏற்பட்டது?

அண்ணாதுரைக்கு அரசியல் தெரியவில்லை என்று சிலர் கூறுகிறார்கள்! ஆமாம் ஐயா! அரசியல் தெரியவில்லைதான்!

அரசியல் தெரியாத காலத்திலேயே இவ்வளவு வளர்ச்சி என்றால் இன்னும் அரசியல் தெரிந்தால் எத்தகைய வளர்ச்சி ஏற்படும்?

இத்தகைய வளர்ச்சியைப் பெறுவதற்கு நாம் என்ன தியாகம் செய்தோம்?

முன்னரெல்லாம் கோவில்பட்டி பஞ்சாயத்து தலைவராக இருந்த நண்பர் ஒருவரை—இப்போது நம்மிடம் இல்லை...பெரியார் அவர்கள் கோயில்பட்டி நகரசபைத் தலைவர் என்றே அழைப்பார்—அந்த அளவுக்கு பஞ்சாயத்துத் தலைவரை நகரசபைத் தலைவர் என்று அழைத்த பஞ்ச காலம் அது.

இன்று நம்முடைய மூன்று மேயர்களை நகரசபையில் பார்த்தோம்.

25 ஆண்டுகளுக்கு முன் பெத்துநாயகன் பேட்டையில் சென்னை நகரசபைத் தேர்தலில் நின்று தோற்றவன் நான்.

இன்று நாம் இடம் பெற்றிருக்கும் நகரசபைகள் எத்தனை?

முன்னரெல்லாம் நமது நண்பர்கள் டி. சண்முகம் பிள்ளையும் ஏ. கோவிந்தசாமியும் சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கும்போது சட்டமன்றம் சென்று விவாதங்களைக் கவனிக்க அனுமதி சீட்டு வாங்குவதற்குச் செல்வோம். இப்போது நம்முடைய கட்சி அங்கே வீற்றிருக்கிறது.

இது வளர்ச்சி அல்லவா?

முன்னர் பெரியார் அவர்களின் நிகழ்ச்சிகளையும், நடவடிக்கைகளையும் 2000 அடிகள் படம் எடுக்க வேண்டுமென்று, ஆசைப்பட்டு சேலம் மாடர்ன் தியேட்டர்சுக்குச் சென்று, அங்கே அவர்கள் யாரும் இல்லாத காரணத்தால் சென்னையிலுள்ள ஒரு கிராமபோன்ரிகார்டிங்குகளுக்கு வேண்டிய சாமான்களை விற்கும் ஒரு ஸ்தாபனத்திடம் சென்று பெரியாரின் பேச்சை பிளேட் எடுக்கவேண்டும் என்றேன்.

கடைக்காரர் 'எந்தப் பெரியார்' என்றார்.

நான் 'எங்கள் பெரியார்' என்றேன்.

'ஈரோட்டு ராமசாமி நாயக்கரா' என்று கேட்டார் கடைக்காரர்.

''நாங்கள் அவரை பெரியார் என்றுதான் அழைப்பது. நாட்டு மக்களும் அப்படித்தான் அழைக்கிறார்கள். அவரது பேச்சைத்தான் ரிகார்டிங் செய்யவேண்டும்'' என்றேன். அதற்குக் கடைக்காரர் அப்படிப் பெரியாரது பேச்சை பிளேட் எடுக்க வேண்டுமென்றால் ஆயிரம் பிளேட்டுக்குரிய கட்டணத்தை நாமே முதலில் கொடுத்து விடவேண்டும் என்று சொன்னார்.

இன்று சென்னையிலுள்ள ஒரு நண்பர் மூன்று மாதங்களாக என்னுடைய பேச்சை பிளேட் எடுக்க நாகூர் அனீபா மூலம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார். நான் 'பிகு' செய்து கொண்டிருக்கிறேன்.

இதெல்லாம் பெரிய வளர்ச்சியா என்று கேட்டால் இது எங்களுக்குப் பெரிய வளர்ச்சி. நீ மகா பெரியவனாக இருந்தால் இதைவிடப் பெரிய வளர்ச்சியை ஏற்படுத்திக் காட்டு.

இந்தியத் துணைக்கண்டத்தில் காங்கிரஸ் கட்சி விடுதலை பெறுவதற்கு எவ்வளவு காலம் ஆயின — எந்தெந்த வளர்ச்சிகளுக்குப் பிறகு கிடைத்தன என்பதை உணரவேண்டும்.

1885-ல் காங்கிரஸ் மகாசபை இந்தியத் துணைக்கண்டத்துக்குப் பூரண சுதந்திரம் தேவை என்ற நோக்கத்தோடு துவக்கப்பட்டது.

1947-ல்தான் சுதந்திரம் பெற்றது.

ஆனால் இதற்கு இடையில் எத்தனை தலைவர்கள் எவ்வளவு தியாகங்களைச் செய்திருக்கிறார்கள்.

சிதம்பரனார், திருப்பூர் குமரன், பகத்சிங், சுகதேவ், சுபாஷ்சந்திர போஸ், பாஞ்சாலத்து லாலா லஜபதிராய், மோதிலால் நேரு போன்ற அந்தத் தலைவர்கள் சுயராஜ்பத்தைப் பார்க்காமலே போய் விட்டார்கள்.

மறைந்த அந்தத் தலைமுறையினர் செய்த தியாகங்களும்—கொட்டிய இரத்தங்களும் சுதந்திரத்துக்கு வித்திட்டிருந்தாலும் அவர்கள் சுதந்திரம் மலர்ந்ததைக் காணவில்லை,

அதைப் போல நானோ மற்றவர்களோ விடுதலையைக் காண முடியாமல் போக நேரிடலாம். எங்களுக்குப் பிறகும் திராவிட நாடு கிடைக்கவில்லை யென்றால் அதற்காக அதை விட்டு விடாதீர்கள். அதைத் தொடர்ந்து போராடி தாய்த்திருநாட்டை விடுவித்து வெற்றி காணவேண்டும்.

நீங்களெல்லாம் 500—600 பக்கங்கள் கொண்ட ஆங்கிலப் புத்தகங்களை படிக்காதவர்களாகயிருக்கலாம்.

பல்கலைக்கழகங்களுக்குப் போகாதவர்களாக இருக்கலாம்.

உலகில் உள்ள விடுதலைபெற்ற நாடுகளுக்குப் போய் வராதவர்களாக இருக்கலாம்.

ஆனால் வீர வரலாறு படைத்தவர்கள். ஒரு காலத்தில் ஒளி பெற்றுத் திகழ்ந்தவர்கள்.

இன்னும்கூட நாம் ஆண்டமாட்சியின் அறிகுறிகளை நீங்கள் காணலாம்.

தஞ்சை மாவட்டத்திற்குச் சென்றால் அங்கே கோட்டை,கோட்டை என்று வருகின்ற பெயர்களைக் காணலாம்.

புதுக்கோட்டை, கந்தர்வ கோட்டை, அரவக்கோட்டை என்று இப்படிப் பெயர்கள் உண்டு.

திருநெல்வேலிச் சீமைக்குச் சென்றால் பாளையங்கள் அதிகம், ஊமையன் கோட்டை, சிவகெங்கைச் சீமை, பாஞ்சாலங்குறிச்சி போன்ற பெயர்களைக் காணலாம்.

மதுரையிலே யிருந்து பாண்டியர்கள். ஆண்ட பாங்கினையும்—ஆந்திரத்திலே இருந்து மாபெரும் மன்னன் ஒருவன் அரசு செலுத்தியதையும் காணலாம்.

இந்த மண்ணுக்கு நாம் சொந்தக்காரர்கள்.

வீரத்தோடு பிறந்தவர்கள் — நெஞ்சில் ஈரத்தோடு வாழ்ந்தவர்கள் விவேகத்தோடு திகழ்ந்தவர்கள் இங்கே யிருந்து வெளி நாடுகளுக்கு முத்து அனுப்பியவர்கள். சந்தனம் அனுப்பியவர்கள். அகிலையும் அழகிய பொருட்களையும் அனுப்பியவர்கள்.

(25 ம்பக்கம் பார்க்க)

**மதுரைப் பொது மாநாட்டில்**

**கலைக் கண்காட்சியைக் கண்டு களித்தோர்**

**40,650**

**பேர்கள்.**

# பூகம்பத்தால் உலகமே அழிந்தாலொழிய நம்கழகத்தை எவரும் அசைக்கமுடியாது!

## வரவேற்புக்குழுத் தலைவர் எஸ். முத்து வீர முழக்கம்!

அறிஞர் அண்ணா அவர்களே, திராவிடப்பெருங்குடிமக்களே! உங்கள் அனைவருக்கும் பொது மாநாட்டு வரவேற்புக் குழுவின் சார்பாக என் வணக்கம். திராவிட நாட்டின் நலனில் நீங்காத பற்று கொண்டுள்ள இலட்சோப இலட்சதியாக உள்ளங்களை வரவேற்கும் மகத்தான பேறு கிடைத்தமைக்காக நான் பெருமையும், பூரிப்பும் கொள்கின்றேன். எந்த வல்லரசினாலும் ஆக்ரமிப்புச் செய்ய முடியாத இயற்கை அரண் கொண்ட நாட்டுக்குரிய நாம், மாட்சிமைக்குரிய நமது தலைவர் அண்ணா அவர்களிடமும், கழகத்தின் குறிக்கோளின் பாலும் வைத்துள்ள அசையாத நம்பிக்கையைக் காட்டுவதற்கே இன்று இலட்சக்கணக்கில் பாண்டியன் நகரில் திரண்டிருக்கிறோம். கண்ணீர்த் துளி போல் அரும்பி, கடலலைபோல் பேரோசை கிளப்பும் உங்களில் நானும் ஒருவன் என்பதை நினைக்கும்போது மெய் சிலிர்க்கிறது.

பாண்டியன் நகர்


தென்னாட்டுச் சரித்திரத்தில் பாண்டியனுக்கு முக்கிய இடமுண்டு! மன்னர் காலத்திலிருந்து இன்றைய மக்களாட்சி காலம் வரை பாண்டியனும், பாண்டியன் தலைநகரும் புகழை இழந்ததாகவோ, தோள் வலிமை குன்றியதாகவோ சரித்திரம் இல்லை! பாண்டிய மன்னர்களில் போர்க்குணம் பெற்ற வீர வரிசை மட்டுமல்ல; நியாயத்திற்காகப் போராடி உயிர் நீத்த நீதி வரிசையும் இருந்திருக்கிறது. அதேபோல் நமது இயக்கத்திலும் கட்சிவளர்ச்சிக்குப் போராடி உயிர் நீத்த நீதிவரிசையும் இருந்திருக்கிறது; அதேபோல் நமது இயக்கத்திலும் கட்சி வளர்ச்சிக்குப் போராடி கண்களை மூடிய வீர பாண்டியன்களையும், நீதிக்காக வாதாடிய சௌந்திரபாண்டியன்களையும் பெற்று அவர்களது வலிமையை நாம் நம்முடைய இதயத்தில் தேக்கிக் கொண்டிருக்கிறோம். அப்பேர்ப்பட்ட பாண்டியர்களின் புனிதமான பெயரை நமது மாநாட்டுப் பந்தலின் கோட்டை வாயல் கம்பீரத்துடன் தாங்கி வரவேற்கிறது. நாம் நமது வலிமையினால் திராவிடத்தின் ஒவ்வொரு சிற்றூரையும் வெற்றித் திருநகராக்கி மகிழப் போவதற்கு அறிகுறியாகத்தான் இன்று இந்த வீரத் திருநகரத்தில் நாம் முகாமிட்டிருக்கிறோம்.

வளர்ச்சி

நம்முடைய வளர்ச்சி எளிதானதல்ல! எதிரிகள் நிறைந்தது! நமது பாதை பாதுகாப்பானதுமில்லை; பயங்கரமான காட்டு விலங்குகளைப் போல் நம்மை வீழ்த்த ஆயுதமேந்திகள் உலாவியபடி இருக்கிறார்கள் நாம் நிராயுத பாணிகள்; அண்ணாவைத் தவிர கொள்கையைத் தவிர நம் உள்ளத்தில் வேறு பலம் இல்லை எளியவர்கள் வலியவர்களைத் தோற்கடித்ததாகக் கதைகளைக் கூட நாம் பார்த்ததில்லை. ஆனால் நாம் ஆச்சரியப்படத்தக்க அளவில் நாம் அதைச் செய்துகாட்டி வருகிறோம்.

○

நம்முடைய இயக்கத்திற்கு இது இளம்பிராயம்; இருந்தாலும்நமக்கு ஏற்பட்டிருக்கிற அனுபவம் அதிகம். பனிரெண்டாண்டு காலத்தில், நாம் ஒரு கட்சியின் ஐம்பதாண்டு காலப் பக்குவத்தையும் வளர்ச்சியையும் பெற்றிருக்கிறோம். நம் கட்சியின் உறுப்பினர்கள் ஏறத்தாழ நாலரை இலட்சம் பேர்! தினம் ஒன்றுக்கு 100 பேர் வீதம் கழகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்ந்து வருகிறார்கள் என்பதை இந்தக் கணக்கு நமக்குத் தெரியப்படுத்துகிறது! மக்களுக்கு எப்படி நம்மீது இவ்வளவு நம்பிக்கை ஏற்பட்டது என்பதைத்தான் நாம் இன்றைக்கு எண்ணிப் பார்க்க வேண்டும். சென்ற பொது மாநாட்டில் கழகம் தேர்தலில் நிற்கலாமா என்று உங்களிடம் அனுமதி கேட்டது. நீங்கள் உறுதியளித்தீர்கள். இன்று சட்ட மன்றத்திற்கு 15 பேரை அனுப்பி அங்கு நமது விடுதலை முழக்கத்தை



ஒலிக்கிறோம். டில்லி பாராளுமன்றத்திலே நமது குரல் கேட்கிறது! சென்னை மக்கள் விழிப்புற்று மாநகராட்சி மன்றத்தில் நம்மை வாகை சூட வைத்திருக்கிறார்கள். மூன்று மேயர்களை நாம் கண்டு களித்திருக்கிறோம். இந்த வெற்றிகள் நமக்கு நம்பிக்கை வலியூட்ட வல்லவை. நமது பாதையில் நல்ல திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் நாம் அந்தப் பாதையை ஒரு முறை திரும்பிப் பார்க்கிறோம். பல அடக்குமுறைக் காட்சிகள் தெரிகின்றன. பலரது அங்கங்கள் சிதறிக் கிடக்கின்றன. மார்பிலே அடியோடும், துப்பாக்கித் தோட்டாக்களோடும் திசைக்கு நாலு பிணங்கள் கிடக்கின்றன. சுக துக்கங்களை இழந்தவர்களின் பெருமூச்சுக் கேட்கிறது. இவைகள்தான் நமது உணர்ச்சிக்கு நிரந்தரமாக உயிரூட்டிக் கொண்டிருப்பவை!

1953-54ல் இதே ஜூலை மாதத்தில்தான் நமது அறிவகத்தின் ஒரு சிற்றறையிலிருந்து நான்கு வரிகளைக் கொண்ட ஒரு அறிக்கையை அண்ணா அவர்கள் வெளியிட்டார்கள்.

ரயிலை நிறுத்துங்கள்!

புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து மறியல் செய்யுங்கள்!

டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக்குங்கள்!

அனைத்தையும் வன்முறைக்கு இடமின்றிச் செய்யுங்கள்!

நாடு அதிசயித்தது; டில்லிக்குத் திகில் ஏற்பட்டது! சென்னையிலிருந்து டில்லி வந்து சேரவேண்டிய கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் மூன்று நாட்களாக வராததை அறிந்த நேரு துணுக்குற்றார்.

இங்கே கல்லக்குடியில் பலர் ரயிலின்முன் விழுந்தார்கள். கருணாநிதி அவர்கள் செத்துப் பிழைத்தார்கள்.

சென்னையில் முதலமைச்சர் இல்லத்தின் முன் கல்வித் திட்டத்தை எதிர்த்து அறப்போராட்டம் நடைபெற்றது,

ஒரே நாளில்—ஒரே வேளையில் டில்லியும் சென்னையும் கலகலக்கும் அளவிற்கு நாம் நமது வலிவை வெளிப்படுத்தியிருக்கிறோம். அந்த மும்முனைப் போராட்டத்தினால் இரண்டு மூன்று படி கழகம் உயர்ந்தது என்பதை நாம் மறந்துவிட மாட்டோம். நாட்டில் நமக்கு அதற்குப் பிறகுதான் மரியாதையும் நன்மதிப்பும் ஏற்பட்டது. அதே ஜூலை மாதத்தில் அதே தினத்தில் இன்று நம்முடைய வெற்றியை நினைத்துப் பார்க்கிறோம். மனம் பூரிக்கிறது.

நம்முடைய பலத்தை முறியடிக்க பல கோணங்களிலே இருந்து எதிர்ப்பு கிளம்புவது உண்மைதான். ஆனால் எல்லா எதிர்ப்புகளையும் பொருட்படுத்திக்கொண்டிருப்பதற்கு நேரமில்லை. இந்தியா ஒரே நாடு என்று கூறிக்கொண்டு இந்தியா முழுதும் பிரச்சாரம் செய்யும் பெரிய கட்சிகளைத்தான் நமக்கு கௌரவமான எதிரிகள் என்று நாம் மதிப்பிட்டிருக்கிறோம். எதிர்க்கவேண்டிய பெரிய கட்சிகளை, எதிர்க்க வேண்டிய விதத்தில் எதிர்த்ததால் நாம் இன்று இவ்வளவு பெரிய கட்சியாக வேரூன்ற முடிந்தது. செல்வாக்குப் பெற்றிருந்த இரண்டு பெரிய கட்சிகளை திராவிடத்தில் நாம் விலாசம் தெரியாமல் செய்திருக்கிறோம். சர்வ கட்சி மேடை தவிர தனி மேடை போட்டால் சோபிக்காத அளவுக்கு அவர்களை இறக்கிவிட்டிருக்கிறோம். இன்னும் சில எதிரிகளை நமது தகுதிக்கு அப்பாற்பட்டவர்கள் என்று எண்ணி வாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமலே புறக்கணித்திருக்கிறோம்.

திராவிட கழகத்திலிருந்து பிரிந்த நாள் முதல் இன்றுவரை நமது அண்ணா அவர்கள் பெரியார் அவர்களை புகழ்ந்து பேசியதைத் தவிர குறைத்துப் பேசியதை நாம் கேட்டதில்லை. மற்ற நமது தலைவர்கள் பெரியாரைப் புகழாவிட்டாலும் இகழ்ந்ததில்லை. நாம் அன்றைக்கு பெரியாரையும், திராவிட கழகத்தையும் தாக்கியும், தூற்றியும் வந்திருந்தால் இன்று அந்தக் கட்சி நமக்கு பெருத்த தலைவலியாக பலம் பெற்றிருக்கக்கூடும். எதிர்க்க வேண்டியவர்களை எதிர்த்து, ஒதுக்க வேண்டியவர்களை ஒதுக்கியது நமது வளர்ச்சிக்கு இது ஒரு காரணம்! மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு இந்த ரகசியம் புரியவில்லை அவர்கள் நம்மிடத்தில் வேறு ஏதோ ரகசியம் இருப்பதாக எண்ணுகிறார்கள். அந்த ரகசியத்தை அறிய எதிர்க்கட்சிக்காரர்கள் அனைவரும் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் பல தடவை சொல்லியிருக்கிறார்கள், மனதிலே தூய்மை இருப்பதால் நமது வாக்கிலே ஒளி இருக்கிறது! சுவையும், பயனும் பெற வெள்ளம் போல் மக்கள் நம் பக்கம் வந்து கொண்டிருக்கிறார்கள்! உள்ளத்தில் நம்பிக்கைஇல்லாதவர்களுக்கு உணர்ச்சி பிறப்பதில்லை; உணர்ச்சி இல்லாவிட்டால் பேச்சு அழுகுரலாக இருக்கிறது. இதுதான் நமது இரகசியம்! நமது ரகசியத்தைப் புரிந்துகொண்டு நம்மை அழிக்கப் பலர் முயற்சிக்கிறார்கள். ஆனால் முயன்று கண்டுகொண்டவுடன் அவர்கள் நம் பக்கமே வந்து விடுகிறார்கள். ஏனெனில் தாய் நாடு, தாய் நாட்டு விடுதலை என்று எண்ணுபவர் உள்ளத்தில்தான் வீரமும், விவேகமும் பிறக்கின்றன. இதனால்தான் நமது அண்ணா அவர்கள் நமது ரகசியத்தைப் பகிரங்கமாக பிரகடனப்படுத்தி வருகிறார்கள்! தந்திரத்தால் செய்யும் வேடிக்கைகளைக்கூட மந்திரம் என்று ஊரை ஏமாற்றுவோர் உண்டு! ஆனால் நாம் நமது தந்திரத்தையேகூறிவிட்டோம்! முடிந்தால் பதிலுக்குச் செய்யட்டும்! செய்ய முடிந்தால்தான் நம்முடன் சேர்வதைத் தவிர வேறு மார்க்கமே அவர்களுக்கு இல்லையே!

நம்மிடத்தில் எவ்வகை ஆற்றலிருந்தாலும்—யாரிடத்திலும் இல்லாத—யாருக்கும் கிடைக்காத மற்றொரு சக்தி நம்மிடமிருக்கிறது. அண்ணா என்ற திசை காட்டும் தீபத்தை நாம் ஒவ்வொருவரும் ஏந்தியிருக்கிறோம். இன்று திராவிடத்தில் ஒவ்வொருவர் இல்லத்திலும், உள்ளத்திலும் அண்ணா குடியிருக்கிறார். அண்ணா இல்லாவிட்டால் நீங்களுமில்லை! நானுமில்லை. நாட்டில் எத்தனையோ கட்சிகளையும், தலைவர்களையும் நாம் பார்த்திருக்கிறோம். முதலாளி — தொழிலாளி என்று இருப்பதைப்போல் தலைவர்—தொண்டர் என்று ஸ்தாபனங்களாகத்தான் அந்தக் கட்சித் தலைவர்கள் உருவாக்கி வந்திருக்கிறார்கள். உலகத்திலேயே நாம் தான் அண்ணன்-தம்பி முறையில் ஒரு விடுதலை இயக்கத்தைக் கண்டிருக்கிறோம்- வளர்த்திருக்கிறோம். என்னுடைய வாழ்நாளில் நான் இரண்டு, மூன்று தலைவர்களிடம் நெருங்கிப் பழகியிருக்கிறேன்—மற்றவர்களைப்பற்றி அறிந்திருக்கிறேன் அவர்களிடமெல்லாம் இல்லாத பெருங்குணத்தை நமது அண்ணாவிடத்தில் நான் காணுகின்றேன். அண்ணா அவர்கள் பிறரது வளர்ச்சிக்குத் தடையாக இருந்ததில்லை. உதவியிருக்கிறார். யாரையும் கெடுத்து அழித்துவிட்டுப் புகழ் பெற்ற

வருமல்ல! தனக்கு மீறி ஒரு ஆற்றல் எங்கோ உருவெடுக்கிறது என்பதை அறிந்தால் தன்னுடைய ஆற்றலை மென்மேலும் உயர்த்திக் கொண்டு வளர்ந்தாரே தவிர— சதி, சூழ்ச்சி என்பதே அவர் அறியாத ஒன்று! பெரியாருக்கும் அண்ணுவுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு இதுதான்! பெரியார் மற்றவர்களை அழுத்தி வைத்துக்கொண்டு கட்சி நடத்துபவர்— அண்ணு மற்றவர்களையும்வளர்த்து தன்னையும் வளர்த்துக் கொண்டவர். நாம் வெளியேறி வந்த 12 ஆண்டுகளில் பெரியார், தனக்குப் பிறகு யார் என்று சொல்லக்கூடிய வகையில் யாரையாவது தயார்ப்படுத்தியதுண்டா? யாருக்காவது பெரியாரைத் தவிர திராவிட கழகத்திலுள்ள மற்றவருடைய பெயர் தெரியுமா? ஆனல் திராவிட முன்னேற்றக் கழகத்தில் அந்தப் பஞ்சமில்லை! வால்களைப்போல் விவேகிகளும் நாள்தோறும் தயாராகிக் கொண்டிருக்கிருர்கள். அண்ணுவுக்கு இன்று நாட்டிலிருக்கிற உன்னதமான புகழில் சரிபகுதி, அவருடைய பெருங் குணத்தாலும், அடக்கத்திலும் கிடைத்தவை என்று நாம் எண்ணிப் பெருமைப் படக் கடமைப்பட்டிருக்கிறேம்.

காங்கிரசை விட்டு எத்தனையோ தலைவர்கள் விலகினர்கள். அவர்களால் காங்கிரசை அடியோடு ஒழிக்க முடியவில்லை. நமது அண்ணு அவர்கள் திராவிடர் கழகத்தைவிட்டு விலகினர் — கொள்கையிலிருந்து தவறிய பெரியாரை மட்டும் தனிமையாக்கி விட்டு கட்சியையே உடனழைத்து வந்துவிட்டார். பலாத்காரமின்றி அரசியல் விவேகத்துடன் இவ்வித சாதனையைச் செய்த தலைவர் உலகத்திலேயே அண்ணு ஒருவராகத்தான் இருக்க முடியும். அத்தகைய அறிவாற்றல் பெற்றவர் நமக்கு வழிகாட்டியாக கிடைத்திருக்கிருர். எந்தப் பயனையும் கருதாமல் அவரது அன்னையார் அண்ணுவை நாட்டுக்குத் தந்தார்கள். அதைப்போல் எந்தப் பயனையும் கருதாமல் வலிமையுள்ள கட்சியைத் தயாரித்து, அண்ணு அவர்கள் பொது மக்கள் கையில் கொடுத்திருக்கிருர்கள். இன்று நமது கழகம் நமக்குச் சொந்தமல்ல. பொதுமக்களுக்குச் சொந்தம் நமக்குக் கோளாறு என்ருல் வீட்டுக்கு வீடு இன்று அழுகுரல் கேட்கிறது. இவர்கள் நம் கட்சி என்று இன்றைக்குத்தானே தெரிகிறது என்கிற அளவுக்கு நாட்டுக் கட்சியாகவும், வீட்டுக் கட்சியாகவும் நமது கழகம் வளர்ந்துவிட்டது. பெரும் பூகம்பம் எழும்பி உலகமே அழிந்தாலொழிய வேறு எவராலும் நமது இயக்கத்தை அழிக்க முடியாது. நமது கொடிக் கம்பத்தை அசைக்க உலகத்தில் யாருக்கும் திராணியில்லை! ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் இதை உணராமலில்லை; நேற்றுவரை உணராதவர்கள் இன்று உணர்ந்திருப்பார்கள்; மிகுதிப் பேர் நாளை உணருவார்கள்.

### வட நாட்டு ஆதிக்கம்

நாம் எடுத்துக் கொண்டுள்ள குறிக்கோளும், அதற்கு உயிர் கொடுக்கும் பிரச்னைகளும் நியாயமானவை! இருநூறு ஆண்டு காலமாக வெள்ளையர் காலத்தில் படாத தொல்லைகளையும், துயரங்களையும் கடந்த பன்னிரெண்டு ஆண்டு காலத்தில் நாம் அனுபவித்து விட்டோம். அதற்கு உரிய காரணத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். பழமையான ஒரு கலாச்சாரத்தை வலிவில்லாத உளுத்துப்போன இன்னெரு கலாச்சாரத்தைவெற்றிகொள்வதாகஅரசியல் ஆதிக்கத்தைப் பயன்படுத்துகிறதுஎன்பதையும்—அந்த ஆதிக்கம் வடக்கே இருந்து கிளம்புகிறது என்பதையும் எல்லா மக்களுக்கும் உணர்த்திவிட்டோம். அப்பேர்ப்பட்ட கொடிய அடக்குமுறையை வடநாட்டு ஆதிக்கம் என்று சொல்லப் பயப்படுபவர்கள் இருட்டு நோத்தில் இனத்துரோகம் செய்பவர்களாக இருக்கவேண்டும்; அல்லது சொத்து சுகத்திற்கு சுயமரியாதையை இழக்கக் கூச்சமில்லாதவர்களாக இருக்கவேண்டும்.

### வெளிநாட்டுத் தமிழர்

நமக்கு எப்படி இவ்வளவு பெரிய ஆதரவு கிடைத்தது. பூமிக்கடியிலே அல்லல்படும் தொழிலாளர்களுக்காக வாதாடுகிறேம்; மலைமுகட்டில் அபாயகரமான சூழ்நிலையில் தத்தளிக்கும் பாட்டாளிகளின் நலனுக்காகவும் பாடுபடுகிறேம்.

அலைகடலுக்கப்பால் மண்ணையும் மலைகளையும் பொன்னுக்கிவிட்டு தன்னுட்டுக்கு வரமுடியாமல் கண்ணீர் வடிக்கும் வெளிநாட்டுத் தமிழர்களுக்கு அன்று முதல் இன்று வரை நாம்தான் ஊன்றுகோல்! இலங்கையானுலும், பர்மாவானுலும், மாலாய் நாடானுலும், தென்னுப்பிரிக்கா என்ருலும் — தமிழர் வாழும் இடமெல்லாம் தி. மு. கழகம் என்று கிளை விடுவதற்கு இதைத் தவிர வேறு காரணம் இருக்கமுடியும் என்று எந்த எதிர்க் கட்சிக்காரர்களும் சொல்லிவிட முடியாது.

### வேலையில்லாத் திண்டாட்டம்

இந்த இந்திய துணைக்கண்டத்திற்கு விடுதலை கிடைத்துவிட்டதாகப் பேசப்படுகிறது! ஆனல், விடுதலை வாழ்க்கையைவிட அடிமைத்தனமுள்ள வாழ்க்கையில் நிம்மதி இருந்தது என்று மக்கள் எண்ணுமளவிற்கு விடுதலைத் தத்துவத்தை காங்கிரஸ் ஆட்சி பாழ்படுத்திவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு போகிறது! அதுவும் வேலையில்லாமல் அலைபவர்கள் அனைவரும் தென்னுட்டுக்காரர்களாகத்தான் இருக்கிருர்கள். தெற்கே மார்வாடிகள் முதலாளிகளாகவும், வடக்கே தென்னுட்டுக்காரர்கள் பிச்சைக்காரர்களாகவும் இருக்கக்கூடிய நிரந்தரமான அநீதியை இனி தி. மு. கழகம் ஒரு நாளும் சகித்துக் கொண்டிருக்கப் போவதில்லை.

இதுபோல்--மானத்தோடுகூடிய எல்லா வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் விடைதரக் கூடிய திராவிட சக்திதான் இன்று மதுரை—பாண்டியன் நகரில் கூடியிருக்கிறது. இவ்வளவு கீர்த்தியும் செல்வாக்கும் பெற்றுள்ள மாபெரும் விடுதலை இயக்கத்தின் பொது மாநாட்டிற்கு வந்துள்ள உங்களை வரவேற்கும் பேறு பெற்ற நான்—சாதாரணமானவன். கட்சியும் அண்ணுவும் இல்லையென்ருல், எனது அடுத்த வீட்டுக்குக்கூட அறிமுகமாகாத ஒரு மனிதனுகப் போயிருப்பேன். இன்று இத்தனை இலட்சம் பேரை வரவேற்கும் அரிய பெரிய பேற்றினைப் பெற்றிருக்கிறேன். இதற்கெல்லாம் கழகம்தான் காரணம்! என்னுடைய வாழ்நாளில் திராவிட முன்னேற்றக் கழக ஊழியனுக இருந்திருக்கிறேன் என்ற பெருமையுடனும், அண்ணு அவர்களின் கட்சியில் இருந்தேன் என்ற பெருமையுடனும் மடிவதற்குத் தயாராக இருக்கிறேன். அந்தப் பெருமையுடன்— உணர்ச்சியுடன் உங்களை மனமார வரவேற்கிறேன்.

# கலைக் கண்காட்சி

மாநாட்டின் சிறப்புகளில் கலைக் கண்காட்சியும் குறிப்பிடத்தக்கதாகும். வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் எஸ், முத்து நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"கலைக் கண்காட்சி அமைப்பைப்பற்றி நான் இது என்ன பெரிய தொல்லையாய்ப் போச்சே என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தேன். கண்காட்சியை நான் பார்த்த பிறகுதான் எனது தவறை உணர்ந்தேன். அவ்வளவு சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் கண்காட்சி அமைந்திருக்கிறது. இன்னும் 15 நாட்கள்வரை மதுரையில் தனியிடம் பார்த்து இக்கண்காட்சியை நடத்தலாமென்று எண்ணியிருக்கிறேன். இவ்வித அரும்பணியில் ஈடுபட்ட கண்காட்சி அமைப்பாளர்கள் டி.எம். பார்த்தசாரதி, இரா. செழியன், மற்றும் சேலம் க. இராசாராம் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்"—என்று வரவேற்புக் குழுத் தலைவர் கூறினர்.

வரவேற்புக்குழுத் தலைவரின் இப்பேச்சிலிருந்தே கண்காட்சியின் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் பெற்ற அரசியல் விளக்கம் எத்தகையது என்பது நன்கு விளங்கும்.

கண்காட்சி அமைப்பில் ஈடுபட்ட தோழர்கள் டி, எம். பார்த்தசாரதி, இரா. செழியன், க. இராசாராம் ஆகியோர் சில பல நேரங்களில் மனச்சோர்வு அடையக்கூடிய நிலை ஏற்பட்டாலும் அவர்களது பணியின் காரணமாக மக்கள் அடைந்த மனநிறைவு அவர்களுக்குப் பெருமிதமும் ஆறுதலும் உண்டாக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இம்மூவருடன், தோழர்கள் இளமுருகு பொற்செல்வி, சுந்தரேசன் ஆகியோரும், மாணவர்கழகப்பொதுச்செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம், மற்றும் மாணவ மணிகளும், அது போன்றே ஓவியச் செல்வங்கள் கருணு, ஒளிஓவியம் ஆகியோரது தொண்டும் பாராட்டத்தக்கதாகும்.

மாநாட்டில் அண்ணு அவர்களுக்கு உற்சாகத்தை அளித்த நிகழ்ச்சிகளில் கலைக் கண்காட்சியும் குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில் அண்ணு அவர்களின் அரிய ஆலோசனை, வழிவகைகளே கலைக் கண்காட்சி அமைவதற்கு பெருந்துணையாய் இருந்துவந்தது.

-என். வி. என்.

19-ம் பக்கத் தொடர்ச்சி

பண்டாரநாயகாவுக்கு அனுப்பினர் என்று செய்தி வருகிறது. அது கேட்டு வெட்கப்படுவதா? வேதனைப்படுவதா? விம்மி விம்மி அழுதுச்சாவதா?

'இந்திவரவில்லை' என்கிருர்கள்; மெல்ல மெல்லத் திணிக்கிருர்கள்; 'சர்வீஸ் கமிஷன்' தேர்வுகளில் இந்தி இடம்பெறும் என்று இப்போது அறிவித்துவிட்டார்கள்!

20 ஆண்டுகளுக்கு முன், தட்சிண பாரத இந்தி பிரச்சாரசபை ஏற்பட்ட நேரத்தில், காந்தியார் வடக்கே உள்ள மக்களும் தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினர். அதற்காக ரூ. 20,000 பேங்கில் போட்டு, ஆவனச்செய்ய ஆணையிட்டார்.

ஆனல், 20 ஆண்டுகளாக அந்தத் தொகையை எதற்கும் பயன்படுத்தவில்லை; இப்போது தான் வடக்கே தமிழைப் பரப்ப அமைப்பு ஒன்றை டாக்டர் சுப்பராயன் தலைமையில் அமைத்திருக்கிருர்கள்.

இப்படி தமிழை இகழ்பவர்களுடன் இனியும் ஒட்டி வாழலாம் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமையாகாது!

### அண்ணுவின் அன்புக் கட்டளை

கழகப் பணியாற்ற நம்மிடையே இப்போது புதுத் தெம்பும், ஆர்வமும் ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்க சுதந்திரப்போரில் பெண்மணிகள்கூட தீவிரப் பங்கேற்ருர்கள். தேநீர் குடிப்பதால், அமெரிக்கப் பணம் இங்கிலாந்திற்குச் செல்கிறது. என்கிற காரணத்தால், அந்தப் பழக்கத்தையே நிறுத்திஞர்கள்; வேறு ஒரு விதையைக் கொண்டு ஒருவித பானம் தயாரித்து அருந்திஞர்கள்!

அத்தகைய தியாக உணர்ச்சி இன்று நம் நாட்டில் ஆண்கள். பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்று வேறு பாடின்றி வளர்ந்துவிட்டது. தென்னகத்தின் மானம் காக்கும் போரில் குதிக்க அத்தனை பேரும் அண்ணுவின் கட்டளையை எதிர்நோக்கி நிற்கிருர்கள்,

இந்தத் திருநாடு 'சுவர்க்க'மாக இருந்தது. ஒரு காலத்தில் இந்த நாட்டிலே பிறக்கவில்லையே என்று ஏங்கிய வெளிநாட்டாரும் உண்டு.

நம் வாழ்நாளிலேயே விடுதலையைக் காணவேண்டும் என்ற உணர்ச்சி இன்று கொழுந்துவிட்டு எரிகிறது.

இப்போது நாம் மூன்று கேள்விகளைத்தான் கேட்டுக்கொள்ள வேண்டும், நமக்கு நாமே!

எந்த எதிர்ப்பையும் துச்சமாக மதிக்கும் சுபாவம் நமக்கு வந்துவிட்டதா?

எத்தனை இடுக்கண்கள்—இடையூறுகள்—ஆபத்துகள் வந்தாலும் தாங்கத் தயாராகிவிட்டோமா?

நம்மிடம் உள்ளஎதையும், உயிர் உடல், உடைமை—எல்லாவற்றையுமே இழக்க ஆயத்தமாகிவிட்டோமா?

இந்த மூன்று விஞக்களுக்கும், 'ஆம்' என்ற விடை கிடைத்துவிட்டது.

ஆகவே, இனி அண்ணுவின் ஆணைதான் மிகுதியாக இருக்கிறது, அவர் நாட்டு விடுதலைக்கு வழிகாட்ட வேண்டும் என்று வேண்டி, இந்த மாநாட்டை பெருமையுடனும் பூரிப்புடனும் துவக்கி வைக்கிறேன்.

# வழிகாட்டும் அண்ணாவை வழிமொழிந்த மாண்பு!

மதுரையில் நடைபெற்ற சழகப் பொது மாநாட்டுக்கு அண்ணா அவர்களைத் தலைமை ஏற்று நடத்தித் தருமாறு கேட்டுக்கொண்டு வரவேற்புக்குழுத் தலைவர் எஸ். முத்து அவர்கள் முன்மொழிந்தார். மதுரைப் பொது மாநாட்டின் சிறப்புக்கு அண்ணாவின் தலைமை மற்றுமோர் சிறப்பு அம்சமாகும் என்று எடுத்துக்கூறி அவரைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து பல தோழர்கள் தத்தம் மாவட்டங்கள்—அமைப்புக்களின் சார்பாக வழிமொழிந்து பேசினர்.

ஃ

**ஜி. பி. சோமசுந்தரம்**

(கழகத்தின் முதுபெருந்தலைவர்)

அறிஞர் அண்ணா அவர்கள்தான் நமக்குத் தனிப்பெரும் தலைவர்—வழிகாட்டி, அவரை இந்தப் பொது மாநாட்டுக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி வழி மொழிகிறேன்.

ஃ

**நீலநாராயணன்**

(சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர்)

அறிஞர் அண்ணா அவர்களின் தலைமை நமக்கு விடுதலையை வாங்கிக் கொடுக்கும் என்ற பெருமிதத்தோடு இந்தப் பொது மாநாட்டுக்கு அவரைத் தலைமை தாங்கும்படி, சென்னை மாவட்ட தி. மு. க. சார்பிலும், நகர மக்களின் சார்பிலும், கேட்டுக்கொள்கிறேன்.

ஃ

**சி. வி. எம். அண்ணாமலை**

(செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளர்)

அண்ணா அவர்கள் சார்ந்திருக்கும் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. சார்பாக நான் அவரை இந்தப் பொது மாநாட்டுக்குத் தலைமை ஏற்கும்படி அழைக்கிறேன்.

ஃ

**பி. எஸ். சந்தானம் எம்.எல்.ஏ.**

(வ. ஆ. மா. தி. மு. க. சார்பாக)

திராவிட திருவிளக்காம் அறிஞர் அண்ணா அவர்கள் ஏழை எளியவர்களிடம் அன்புடன் பழகுபவர்கள். அவர்களது துயர்துடைக்க இந்த மாநாட்டுத் தலைவராக அவரை நான் வழிமொழிகிறேன்.

ஃ

**இரா. சாம்பசிவம்**

(தெ. ஆ. மாவட்ட தி. மு. க. செயலாளர்)

பெரு மதிப்பிற்குரிய அண்ணா அவர்களை தெ. ஆ. மாவட்ட சார்பாக தலைமை ஏற்று நம்மை வழி நடத்திச்செல்ல வழிமொழிகிறேன்.

ஃ

**வை. சுப்ரமண்யம்**

(தஞ்சை மாவட்ட தி. மு. க. அவைத்தலைவர்)

அண்ணா அவர்களைப் போன்ற பெருந்தலைவரை நாம் இனி எக்காலத்திலும் பெறமுடியாது. அவர் என்ன ஆணையிட்டாலும் அதன் வழி நடக்க தஞ்சை மாவட்டம் தயார் என்று கூறி அண்ணா அவர்களை வழி மொழிகிறேன்.

ஃ

**எஸ். ஜே. சாதிக்பாட்சா**

(கோவை மாவட்ட தி. மு. க. சார்பாக)

கோவை மாட்டத்தில் தி. மு. கழகம் இருக்குமோ இருக்காதோ என்று மாற்றார் கூறியதை பொய்ப்பித்து விட்டிருக்கிறது கோவை மாவட்டம். அறிஞர் அண்ணா அவர்கள் தி. மு. கழகத்தின் தலைவர் மட்டுமல்ல — தென்னகத்திலுள்ள திராவிடக் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலைவர் ஆவார்கள்.

ஜின்னா பாக்கிஸ்தானைப் பெற்றுக் கொடுத்ததுபோல் அண்ணா அவர்கள் திராவிடநாட்டை மீட்டுத் தருவார்கள் என்று கூறி அவரை நான் வழிமொழிகிறேன்.


ஃ

**என். எஸ். தென்னரசு**

(இராமநாதபுர மாவட்ட தி. மு. க. செயலாளர்)

சென்னையிலே 1951-ம் ஆண்டில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டில் அண்ணா அவர்கள் "கண்ணீர்த் துளிகளே! நாட்டின் கண்மணிகளே காணிக்கை தாருங்கள்" என்று அழைத்தார். அந்தக் கண்ணீர்த் துளிகள் கடலலைகளைப் போல் பேரோசைக் கிளப்பி இங்கே கூடியிருக்கின்றன. அத்தகைய ஆற்றல் மிகு வீரர்களின் சார்பாகக் கூறுகிறேன், அண்ணா அவர்கள் என்ன கட்டளையிட்டாலும் அதை நிறைவேற்ற இராமநாதபுர மாவட்டம் தயாராக இருக்கிறது என்று கூறி வழி மொழிகிறேன்,

ஃ



**எம். எஸ். சிவசாமி**

(நெல்லை மாவட்ட தி. மு. க. செயலாளர்)

நம்முடைய ஒரே ஒரு வழிகாட்டி அறிஞர் அண்ணா அவர்கள்தான். அண்ணா அவர்கள் கட்டளையிட்டு நாங்கள் எதையுமே செய்யாமல் இருந்ததில்லை. அவர் ஒன்று சொன்னால் நாங்கள் பத்து செய்திருக்கிறோம். அந்தப் பெருமைமிகு மாவட்டத்து சார்பில் நான் வழி மொழிகிறேன்.

ஃ

**பி. எம். கண்ணு**

(குமரி மாவட்ட தி. மு, க. செயலாளர்)

அண்ணா அவர்கள் எந்த ஆணையிட்டாலும் அதை நிறைவேற்றித் தருவோம் என்று உறுதி கூறி வழி மொழிகிறேன்.

ஃ

**எச். எல். முருகேசன்**

(சேலம் மாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர்)

நமது ஒப்பற்றத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் ஆணைக்குக் கீழ்ப் பணிந்து நடப்போம் என்று உறுதி கூறி அவரை வழி மொழிகிறேன்.

ஃ

**வே. நரசிம்மலு (தெலுங்கில்)**

(ஆந்திர மாநில தி. மு. க. அமைப்பாளர்)

அகில இந்தியாவிலேயே அறிஞர் அண்ணா ஒருவர்தான் திராவிடரின் இரத்த பாசத்தை மறந்து விடாமல் திராவிட நாட்டின் விடுதலைக்கு போராடி வருகிறார்.

"ஆந்திர ராஜ்யமுலு திரரவிட மகாசபை உண்டா லேதான்னு இக்கட உண்ண கபோதிகள் அடுகுதாரு. வாளந்துரு ஆந்திர ராஜ்யம் ஒச்சி சூடவாலா" (ஆந்திர மாநிலத்தில் தி மு. கழகம் உண்டா இல்லையா என்று இங்கே உள்ள சில கபோதிகள் கேட்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஆந்திராவுக்கு வந்து தி. மு, கழகத்தின் மலர்ச்சியைக் காணவேண்டும்)

மேலும் அண்ணா அவர்கள் ஆந்திரத்துக்கு வருகை தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு வழி மொழிகிறேன்,

ஃ

**கே. எச். எம். சுபேர்**

(மலையாளத்தில்)

(கேரள மாநில தி. மு. க. அமைப்புக் குழுவின் சார்பாக)

கேரளத்தில் நாங்கள் அண்ணா அவர்கள் தலைமையில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்கிறோம். மற்ற தலைவர்கள் எல்லாம் வடநாட்டுக்கு அடிமைகளாக வாழ எண்ணும்போது அண்ணா அவர்கள் மட்டும் விடுதலைக்கு வழி வகுக்கும் மாபெரும் தலைவராகப் பணி யாற்றுகிறார். அறிஞர் அண்ணா அவர்கள் ஏழை எளியவர்களுக்காகப் பாடுபடும் தலைவர். அப்படிப்பட்ட தலைவரை நான் மாநாட்டுத் தலைவராக வழி மொழிவதில் பெருமைப்படுகிறேன்.

ஃ

**வேணுகோபால்**

(கன்னடத்தில்)

(கருநாடக மாநில தி. மு. க. அமைப்புக்குழு சார்பாக)

திராவிட அன்னையின் விலங்கொடிக்க அறிஞர் அண்ணா அவர்களுக்கு நாங்கள் துணை நிற்போம்.

மந்திரி பதவி போய்விடும் என்பதாலேயே காமராசர் திராவிட விடுதலையை ஆதரிக்க அஞ்சுகிறார். திராவிட விடுதலைக்கு கர்நாடக ஆதரவு எப்போதும் உண்டு என்று கூறி அண்ணா அவர்களைத் தலைவராக வழி மொழிகிறேன்.

ஃ

**புத்தாசு**

(பம்பாய் தி. மு. க. பொதுச் செயலாளர்)

பம்பாய் தி. மு, கழக சார்பாக அண்ணா அவர்களை இந்த

மாநாட்டுத் தலைவராக வழி மொழிகிறேன்.

ஃ

பொற்செல்வி இளமுருகு

(மகளிர் மன்றத்தின் சார்பாக)

பெண்ணுரிமைக்குப் போராடிய இயக்கமும் போராடி வருகின்ற இயக்கமும் தி. மு. கழகம் ஒன்று தான். அதிலும் பெண்ணுரிமைக்காகப் பாடுபட்ட அண்ணு அவர்களை திராவிடத் தாய்மார்கள் சார்பில் வழி மொழிவதில் பெருமைப் படுகிறேன்.

ஃ

எஸ். டி. சோமசுந்தரம்

(தி. மா. மு. க. பொதுச் செயலாளர்)

தமிழகத்திலேயே மாணவர்களை பற்றி—மற்ற தலைவர்களை விட அண்ணு அவர்கள்தான் நன்கு அறிந்திருக்கிருர்கள். மாணவர்களுக்கும் அண்ணு அவர்களுக்கும் இருக்கும் தொடர்பைப் போல் வேறெந்தக் கட்சித் தலைவருக்கும் இருந்ததில்லை. மாணவர் இதயங் கலந்த அத்தகைய மாபெரும் அண்ணு அவர்களை நான் மாநாட்டுத் தலைவராக தி. மா. மு. க. சார்பில் வழி மொழிகிறேன்.

ஃ

திருச்சி எஸ். ஏ. ஜி. ராபி

(தி. மு. க. சார்புடைய தொழிற்சங்கங்கள் சார்பாக)

தொண்டர்களுடன் சரிசமமாக அன்புடன் பழகுகின்ற தலைவர் நமது அண்ணு ஒருவர்தான், வேறு எந்த இயக்கத்திலும் இல்லாத இந்த குடும்பப் பாசத்துக்கு உரிய என் அண்ணுவை நான் வழிமொழிகிறேன்.

ஃ

நடிகமணி டி. வி. நாராயணசாமி

(கலைஞர்கள் சார்பில்)

கலைஞர்களை ஒரு காலத்தில் சமுதாயம் இழிவான முறையில் கருதிக் கொண்டிருந்தது. அதை மாற்றி கலைஞர்களுக்கு மக்கள் மத்தியில் மதிப்பைத் தேடித் தந்தது மனிதர்களாக நடமாட வைத்தது அறிஞர் அவர்களேயாகும். நான் முதன் முதலில் ஈரோட்டில் பெரியார் அவர்களது இல்லத்தில் அண்ணு அவர்களை சந்தித்தேன். அன்றே அவரை என் தலைவராக ஏற்றுக் கொண்டேன். அந்த நல்ல வழிகாட்டியை இந்த மாநாட்டுத் தலைவராக வழிமொழிகிறேன்.

ஃ

நாவலர். **நெடுஞ்செழியன்**

(அவைத்தலைவர்)

அண்ணு அவர்களைப் பாராட்டிப் போற்றி வாழ்த்துவதில் நமக்குப் பெருமை தோன்றுகிறது. பூரிப்பு ஏற்படுகிறது. அண்ணு அவர்களின் சீரிய தலைமைக்கு ஒரு எடுத்துக்காட்டு வேண்டுமெனின், அவர் மீது வீணுன குறைகளைக் கூறி நானூற்றுச்சில்லரை பேர் வெளியேறினுர்கள். ஆனுல் அண்ணுவின் ஆற்றலில் நம்பிக்கை வைத்து ஒன்பதினுயிரத்துச் சில்லரைபேர் உள்ளே வந்துள்ளார்கள். அண்ணுவின் தலைமையை எடைபோட்டுப் பார்க்கவேண்டுமென்ருல் மற்ற கட்சிகளின் தன்மையையும் நம் கட்சியையும் ஒப்பிட்டு நோக்கவேண்டும்.

மற்ற கட்சிகளில் இல்லாத பெருந்தன்மையும் அரசியல் பண்பும் நமது கட்சியில்தான் உள்ளது.

திராவிடர் கழகத்தைவிட்டு நாம் வெளியேறியபோது கூட அறிஞர் அண்ணு அவர்கள் உலகிலே எந்தத் தலைவரும் கையாளாத அரசியல் நாகரிகத்தைக் கையாண்டார்கள். சிறுபான்மையோரிடம் இயக்கத்தை விட்டுவிட்டு பெரும்பான்மையோரை வெளியே அழைத்துவந்து தனி இயக்கங் கண்ட தனிப்பெருந் தலைவர் அண்ணு அவர்கள்.

மிகச் சிறந்த பேச்சாளர்

மிகச் சிறந்த எழுத்தாளர்

மிகச் சிறந்த கதையாசிரியர்

மிகச் சிறந்த நாடக ஆசிரியர்.

திரைப்பட உலகிலும், நடிப்புத் துறையிலும் மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் அறிஞர் அண்ணு அவர்கள் ஆவார்கள்.

சில அரசியல் தலைவர்கள் இருப்பார்கள்—அவர்களுக்குப் பேசவே தெரியாது. பேசத் தெரிந்தாலும் பலர் வந்து விரும்பிக் கேட்கும் வண்ணம் இருக்காது. அப்படியே சிறந்த பேச்சாளராக இருந்தாலும் எழுதவராது. அப்படியே எழுத்தாளராகயிருந்தாலும் கதை எழுதும் ஆற்றல் இருக்காது. கதை எழுதுவது என்பது எல்லோராலும் முடிகின்ற காரியம் அல்ல. அப்படியே கதை எழுதினுலும், சினிமாவுக்கு கதை, வசனம் எழுதி அதில் ஒரு குறிப்பிடத்தக்க மறுமலர்ச்சியை உண்டுபண்ணும் ஆற்றல் இருக்காது. அப்படியே சினிமாவுக்கு கதை எழுதினுலும் நாடகம் அமைக்கின்ற ஆற்றல்சில தலைவர்களுக்கு இருக்காது. அப்படியே நாடகம் அமைத்து எழுதினுலும் சிலருக்கு அதில் நடிக்கத் தெரிந்திருக்காது. அப்படியே நடிக்கத் தெரிந்திருந்தாலும் நடிப்பில் தேர்ச்சி பெற்ற பல முன்னணி நடிகர்களே பார்த்து வியந்து நடித்தால் இதைப்போல் நடிக்கவேண்டும் என்று எண்ணுகிற அளவுக்கு உயர்ந்த தன்மையில் நடிக்க முடியாது. இவ்வளவு திறமைகள் இருந்தாலும் சில அரசியல் தலைவர்களுக்கு அரசியலை ஒழுங்காக நடத்தத் தெரியாது.

அப்படியே பல தலைவர்களுக்கு அரசியல் கட்சி நடத்தத் தெரிந்திருந்தாலும் விடுதலை இயக்கங்களை வழி நடத்திச் செல்லத் தெரியாது. அப்படியே விடுதலை இயக்கத்தை வழி நடத்திச் சென்ருலும், தான் என்ற அகங்காரம் இல்லாமல் பண்புடன் நடத்தத் தெரியாது. அப்படியே பண்புடன் நடத்தத் தெரிந்தாலும் பொறுமையை கைவிடாமல், எதையும் தாங்கும் இதயத்தோடு நடத்தும் ஆற்றல் இருக்காது.

இத்தனை ஆற்றலும் ஒருங்கே அமைந்து ஒளி வீசுபவர்தான் நமது அறிஞர் அண்ணு அவர்கள்,

சிலபேர் நான்தான் தலைவன் என்று கூறிக் கொண்டு நீங்கள் எல்லாம் என்னைத்தான் தலைவராக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று பிடிவாதத்துடன் தலைமைப் பதவியைக் கைப்பற்றுவதைப் போல் அண்ணு அவர்கள் தலைவராகவில்லை, நாமெல்லாம் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டதால் தான் அண்ணு அவர்கள் தலைமை ஏற்க ஒப்புக்கொண்டார்கள்,

சிசரோவின் எழுத்தில் எப்படி ரோம் நாட்டின் பண்பும் கலாசாரமும் தெரிந்ததோ அதே போன்று அண்ணுவின் எழுத்தில் தென்னகத்தின் பெருமை மிக்க வரலாறும் பண்பாடும் தெரிந்தது.

அத்தகைய நமது அண்ணு அவர்களை இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி கேட்டு கொள்வதில் நாம் அனைவரும் பெருமைப் படுகிருேம்.

ஃ

சென்னை மேயர் வி. முனுசாமி

நமெக்கெல்லாம் எப்போதுமே அறிஞர் அண்ணு அவர்கள்தான் தலைவர். வேறெந்த நாட்டிலும் காணமுடியாத தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள். அப்பேர்ப்பட்ட ஒப்பற்ற தலைவரை இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தொகுத்தது :

**என். வி. என். சோமு**

## கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

இலட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்த இம் மாநாட்டில் யாதொரு அசம்பாவிதமும் நடைபெறவில்லை யென்பது மட்டுமல்ல மாநாட்டுக்கு வருகை தந்த மக்கள் எவ்வளவு கட்டுப்பாடுடன் நடந்து கொண்டார்கள் என்பதைக் கண்டு காங்கிரஸ் தோழர்களே பாராட்டினர். எனவே, அண்ணு அவர்கள் தந்துள்ள கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பது வெறும் சொல்லல்ல. உயிரோட்டமுள்ள மகத்தான சக்திகள் என்பது மதுரை மாநாட்டின் வாயிலாக உலகுக்கு எடுத்துக் காட்டப்பட்டிருப்பது கண்டு பெருமிதம் கொள்கிருேம்.

# யாருக்காக மணி ஒலிக்கிறது ?

"சாவின் மணியோசை யாருக்காக முழங்குகிறது என்று நீங்கள் சிந்திக்க வேண்டாம்; அது உங்களுக்காகத்தான்! ஒவ்வொரு மனிதனும் சாவு என்னை 'சிறிது' செய்கின்றன. ஏனென்ருல் என் வாழ்வு மனித இனத்தோடு பின்னிப் பிணைந்து கிடக்கிறது!"

இத்தகு பொருள் படிந்த பாடலை எழுதினுன், முன்னுளைய ஆங்கிலக் கவிஞனுன ஜோண் டோண்.

சாவைப் பற்றி கேட்டதும் மனிதனின் மனதில் கணநேர விரக்தி உணர்ச்சி பளீரிடுகிறதே அதன் பொழிப்புரையை கவிப்பொருளில் காண்கிருேம்.

கேரளக் கவிஞன் குமாரன் ஆசான் படகில் யாத்திரை செய்யும்போது 'மணி முழக்கம் கேட்கிறது!' என்ற பாடல் வரியை எழுதினுன். அது முடிவதற்கு முன்னுலேயே படகு கவிழ்ந்து காயலோடு கவிஞன் வாழ்வும் முடிந்தது.

நம் தலைமுறையின் புகழ்பெற்ற நாவலாசிரியனுன ஏனஸ்ட்ஹெமிங்வே 'யாருக்காக மணி ஒலிக்கிறது?' என்ற பெருங் கதையை எழுதினுன். ஸ்பெயின் நாட்டு ஏழை எளியோர்களை அனுதாபத்தோடு ஹெமிங்வே தனது நாவலில் சித்தரித்தான்.

தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனின் மரணமும் மனித சமுசாயத்தின் பெரும் இழப்பாக நினைத்த ஹெமிங்வே, தனது ஏடுகளிலே அத்தகு அனுதாப உணர்வுகளை தவழவிட்ட ஹெமிங்வே, குழந்தை பொம்மையோடு விளையாடியதைப் போல, துப்பாக்கியை பழுது பார்த்துக்கொண்டிருக்கும்போது, எதிர் பாராத முறையில் குண்டு தெறித்து உயிரிழந்தார் என்ற சேதி கேட்டு உலகம் திகைத்துத்தான்விட்டது!

அவர் எழுத்துக்கள் போலவே அவரும் துணிச்சலானவர். போர்க்களங்களின் அபாயப் பகுதிகளில் உலவி செய்திகளை சேகரிக்கும் போது மரணம் அவரை எத்தனையோ முறை பயமுறுத்தியிருக்கிறது. வேட்டையாடுவதும், படகோட்டுவதும் அவரது வழக்கமான பொழுதுபோக்குகள்,

சரித்திரகால வீர கதாநாயகன் போல, பரபரப்பான வாழ்க்கைச் சூழலை தனக்கென உருவாக்கிக் கொண்டவர் ஹெமிங்வே.

அவர் எழுதிய 'கிழவனும் கடலும்' நவீனம் அதில் விவாதிக்கப்பட்ட விஷயத்திற்காக நோபல் பரிசு பெற்றது. சமுதாயத்தின் அடித்தட்டுவரை உழன்றுவளர்ந்ததினுல் அவர் உலகத்தை நன்ருக உணர்ந்து கொண்டிருந்தார்.

பழைய தலைமுறையினரைப் போல ஹெமிங்வே சாம்ராஜ்ய பித்துபிடித்தவரல்ல. கியூபா நாட்டு விடுதலையை இதயபூர்வமாக வரவேற்ருர்.

சாதாரண மனிதனின் சாவையே சமுதாயத்தின் பெரு இழப்பாக எண்ணிய ஹெமிங்வேயின் எதிர் பாராத மறைவு அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே ஒரு இழப்பு என்றுதான் சொல்லவேண்டும்.

ஹெமிங்வேயின் கருத்துக்களையும், செயலையும் சீர்தூக்கிப்பார்த்து தீர்ப்பு வழங்கும் வாய்ப்பு இப்போதுதான் உலகத்திற்கு கிடைத்திருக்கிறது.

மரண பயங்கரங்களை அள்ளிப் போட்டு சாகசங்கள் புரிந்த ஹெமிங்வே மரணத்தைப்பற்றிய நிறைய, விதவிதமாக எழுதியிருக்கிருர். மறைந்திருந்த கள்வன் போல, எளிதாக மரணம் அவரை எடுத்துக்கொண்டது. உலகத்தைப் போலவே அவரும் இதனை எதிர் பார்த்திருக்கமாட்டார்!

ஆர அமர இருந்து உலகத்திற்கு தன் கடைசி செய்தியை அவர் சொல்லவில்லை என்று எண்ணும் போது அனுதாப உணர்ச்சி இயல்பாகவே நம்முள் எழுகிறது.

**- சேரன்தம்பி**

# செயலாற்றிய செம்மல்களே வாழி! வாழி!

பந்தல்

மிகக் குறுகிய காலத்தில் ஒரு நகரையே நிர்மாணித்த பெருமை பந்தல் அமைத்த அத்தனை பேருக்கும் உரியதாகும். மாநாட்டுத் தேதி நெருங்க நெருங்க பந்தல் வேலை முடியுமோ, முடியாதோ யென்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த வரவேற்புத் தலைவர் முத்துவும் மற்ற நிர்வாகிகளும் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய வகையில் இயந்திரம் போன்று பந்தலை அமைத்த தோழர்களை நாம் என்றும் மறப்பதற்கில்லை பார்வையாளர்கள் அமரும் இடத்தில் பந்தலைச் சற்று உயர்த்தியிருந்தால் சிறுகுறையும் சொல்லுவதற்கு இடமில்லாத வகையில் அப்பணி நிறைவு பெற்றிருக்கும். என்றாலும் பொதுவாக பந்தல் அமைக்கும் பணியில் ஈடுபட்ட அனைவரும் கடமை உணர்ச்சியுடன், குறித்த காலத்திற்குள் தங்களின் பணியினை இனிதே நிறைவேற்றித் தந்தது பெருமைக்குரியதாகும்.

திராவிடத் தாய்!

தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய மாநிலங்களை குழந்தைகளைப் போன்று அன்புடன் அணைத்துநிற்கும் திராவிடத் தாயைப் போன்ற சிலைகளை உருவாக்கிய மதுரை சிற்பிகளின் கைவண்ணத்தையும், மதி நுட்பத்தையும் கண்டு மாநாட்டுக்கு வருகை தந்த ஒவ்வொருவரும் வியந்தனர்.

கொடிமேடை

மாநாட்டின் நுழைவு வாயிலுக்கு முன்னதாக 52 அடி உயரத்தில் பட்டொளி வீசிப் பறக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த கொடிக் கம்பமும், மேடையும், மற்ற அலங்காரமும் தனிச் சிறப்பைப் பெற்றது!

முகப்பு!

மாநாட்டின் வெளிவாயில் முகப்பினை அலங்கரித்த மாயவரம் தோழர்களின் திறமையை, இது வரை நடைபெற்ற கழக மாநாடுகளின் மூலம் நாடு நன்கு அறிந்திருக்கிறது. மதுரை மாநாட்டில் மாயவரம் தோழர்களின் அக் கை வண்ணம் மேலும் சிறப்புற்றிருந்தது.

உள் முகப்பு

உள்முகப்பின் அமைப்பு மூர்த்தி சிறிது—கீர்த்தி பெரிது என்ற அளவில் அழகுற அமைந்திருந்தது. உள்முகப்பினை அமைத்த மதுரைத் தோழர்களை மக்கள் மனமாரப் பாராட்டினர்.

மேடை அமைப்பு!

மாநாட்டின் மேடை பெரிய அளவில் இருந்ததால், உறுதியாக அமைக்கப் பட்டிருக்குமோ என்ற ஐயப்பாடு நிலவி வந்தது. ஆனால் எவ்வித குறைவுக்கும் இடமின்றி மேடை பயன்பட்டது பெருமைப் படத்தக்கதாகும்.

ஒலி

ஒலியைப் பொருத்தவரை மிகப் பிரமாதம்! பேச்சாளர்களுக்குப் பெருந்துணை புரிந்தது ஒலிபெருக்கி தான்! பேச்சாளர்கள் அனைவரும் ஒலி பெருக்கியாளருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களாவர்.

ஒளி

ஒளி அலங்காரம் அனைத்தும் போதுமானவைகளாக யிருப்பினும், மாநாட்டின் முகப்பில் போதிய ஒளி அலங்காரம் இல்லாதது பெருங் குறையாய்த் தெரிந்தது, நூற்றுக் கணக்கான பஸ்கள், கார்கள், வண்டிகள், பல்லாயிரக் கணக்கான மக்கள் இரவெல்லாம் நடமாடிக் கொண்டிருந்த முகப்பு வாயலில் போதிய ஒளி அமைப்பு இல்லாதது முகப்பின் அழகையும் எடுத்துக் காட்டத் தவறிவிட்டது. என்றாலும் இடையிடையே யாதொரு அசம்பாவிதமுமின்றி ஒளி அமைப்பாளர்கள் தொடர்ந்து தங்களது பணியினை இனிது நிறைவேற்றியது பாராட்டக்கூடியதாகும்.

* * *

கலையரங்கம்

கலையரங்க அமைப்பும் எழில் மிக்கதாயிருந்தது. நாடகங்கள் அனைத்தும் சிறப்புற நடைபெறுவதற்கு உறுதுணையாயும் இந்த மேடை உருவாக்கப்பட்டிருந்தது பாராட்டுக்குரியதாகும்.

உணவு விடுதிகள்

அண்ணா பத்தி நிறுவனத்தாரும் மற்றும் சிலரும் உணவு விடுதிகள் அமைத்து மாநாட்டுக்கு வருகை தந்த மக்களுக்குப் பேருதவி புரிந்தனர். பரிமாறுபவர்கள் எண்ணிக்கையைச்சற்று அதிகப்படுத்தியிருந்தால் உணவு விடுதியாளரின் தொண்டில் குறையேதும் சொல்வதற்கு இடமிருந்திருக்காது, எனினும் இலட்சக் கணக்கான மக்களுக்கு அவ்வப்போது உணவு அளிக்கும் பணியினைக் கூடுமான வரை ஒழுங்குறச் செய்த அனைவரையும் பாராட்டுகிறோம்.

மற்ற கடைகள்

சிற்றுண்டி ஜவுளி, சலவை நிலையம், முடி திருத்தகம், விளையாட்டுச் சாமான்கள். பத்திரிகைகள் உள்ளிட்ட ஏராளமானஸ்டால்களை அமைத்துப் பொது மக்களுக்கு உதவியாயிருந்தவர்களையும் மக்கள் மறப்பதற்கில்லை.

அஞ்சல் நிலையம்

மாநாட்டில் திறக்கப்பட்டிருந்த தனி அஞ்சல் நிலையத்தார் அவ்வப்போது தந்தி—கடிதங்கள் அனைத்தையும் தட்டுத் தடங்கலின்றி வழங்கி வந்தது மிகப் பயனுள்ள தொண்டாகும்.

காவல் துறையினர்

காவல் (போலீஸ்) துறையினரும் தக்க நடவடிக்கை எடுத்து போக்குவரத்துக்கும் அமைதிக்கும் பெருந்துணை புரிந்தனர்.

நகராட்சி மன்றத்தினர்

குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதி ஆகியவைகளை ஒழுங்குற கவனித்து வந்த மதுரை நகராட்சி மன்றத்தின் உதவியும் பாராட்டக் கூடியதாகும்.

டி. வி. எஸ். நிறுவனம்

எல்லாவற்றிர்க்கும் மேலாக போக்கு வரத்துக்கு பேருதவி புரிந்த டி. வி. எஸ். பஸ் நிறுவனத்தாரின் தொண்டு மாநாட்டுக்கு வருகை தந்த எல்லோராலும் மறக்க முடியாததாகும்.

நிமிடத்திற்கு ஒரு பஸ் என்ற முறையில் மதுரைக்கும்—திருப்பரங் குன்றத்துக்கும் இடையே இரவும் பகலுமாக பஸ்களை ஓடச் செய்து பெருந்துணை புரிந்தனர்.

— என், வி. என்.

# தி. மு. க. மத்திய செயற்குழு பொதுக்குழுக் கூட்டங்கள்

11—7—61 காலை 11-30 மணிக்கு தி. மு. க. மத்திய செயற்குழுக் கூட்டம் மதுரை-திருப்பரங் குன்றம் நகரத்தார் விடுதியில் துவங்கி, இரவு 8-மணிக்கு முடிவுற்றது.

தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல்.ஏ. தலைமை வகித்தார்.

சென்ற கூட்ட விவரங்களை அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் விளக்கினார்.

அடுத்து, தலைமைக் கழக நிர்வாகம், 30—6—61 முடிய வரவு-செலவு விவரங்கள், தணிக்கைக் குழுவின் விமர்சனம் ஆகியவைகளைக் குறித்து விவாதித்து அதற்கான முடிவுகளை பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டன.

## பொதுக்குழுக் கூட்டம்

12—7—61 காலை 11-மணிக்கு தோழர். எ. கோவிந்தசாமி எம். எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. சென்ற கூட்டத்தின் விவரங்களை தோழர் என். வி.என். விளக்கினார்.

முதலாவதாக 8—7—61 அன்று ஏழு மாவட்டங்களில் நடைபெற்ற கழக இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற புதிய பொதுக்குழு உறுப்பினர்களையும் செயலாளர்களையும் அமைப்புச்செயலாளர் என். வி. என். அனைவருக்கும் அறிமுகம் செய்துவைத்தார்.

பொதுச்செயலாளர் அண்ணா அவர்கள் சென்ற பொதுக்குழுவிற்குப்பிறகு இதுவரை நடைபெற்ற கழகத்தின் முக்கிய நிகழ்ச்சிகளை விளக்கியதுடன், அவைத்தலைவர், ஆட்சி மன்றக்குழு, சொத்து பாதுகாப்புக்குழு ஆகிய பதவிகளுக்கு முறையே ஒவ்வொருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய இடைத் தேர்தலை நடத்தித்தருமாறு அவைத்தலைவரைக் கேட்டுக் கொண்டார்.

அவைத்தலைவர்:-

நாவலர் நெடுஞ்செழியன்

தோழர் எ. கோவிந்தசாமி எம். எல்.எ. முன்மொழிய, தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.எ. வழிமொழிய நாவலர் நெடுஞ்செழியன் அவைத்தலைவராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கொள்கைபரப்புச் செயலாளர் :-

சத்தியவாணிமுத்து

நாவலர் நெடுஞ்செழியன் இது நாள்வரை வகித்துவந்த கொள்கை பரப்புச் செயலாளர் பதவிக்கு டாக்டர் சத்தியவாணிமுத்து, பொதுச்செயலாளரால் நியமிக்கப் பட்டார்.

தொழிற்சங்கச் செயலாளர்:-

எ. கோவிந்தசாமி

பேராசிரியர் அன்பழகன் எம். எல்.எ. தாம் வகித்துவந்த தொழிற் சங்கச் செயலாளர் பதவியிலிருந்து விலகிக்கொள்ள விரும்பியதைப் பொதுச்செயலாளர் ஏற்றுக் கொண்டு, தோழர் எ. கோவிந்தசாமி எம்.எம்.எ. அவர்களை தொழிற்சங்கச் செயலாளராக நியமித்தார்.

அன்பில் தருமலிங்கம்:

ஆட்சி மன்றக்குழு உறுப்பினராகத் தோழர் அன்பில் தருமலிங்கம் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பி. எ, சாமிநாதன் :

சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினர் தேர்தலில், தோழர்கள் சென்னை கே. எம். கண்ணபிரான், பொன்மலை பராங்குசம், கோவை புஞ்சம்புளியம்பட்டி சாமிநாதன் ஆகியோர் போட்டியிட்டனர். பின்னர் மூவரும் கலந்து பேசியதால், கண்ணபிரானும், பராங்குசமும் போட்டியிலிருந்து விலகிக்கொள்ள தோழர் சாமிநாதன் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இத்தேர்தல்கள் முடிந்தவுடன் அவைத் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் தலைமை வகித்தார்.

பொதுச்செயலாளர் 10 பொதுக் குழு உறுப்பினர்களை நியமிக்கலாம் என்றிருப்பதை 15 பேரை நியமிக்கலாம் என்ற திருத்தத்தை பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் முன்மொழிய அமைப்புச் செய[...] ளர் என். வி. என். வழிமொ[...] பொதுக்குழு ஒருமனதாக ஏ[...] கொண்டது.

பொதுக்குழு உறுப்பினர்கள்:

நெல்லை இரத்தினவேலு பாண்டியன். கூனூர் முருகேசன், சொக்கநாதபுரம் சேதுராமன், சென்னை வேதாசலம் எம்.சி. ஆகியோரைப் பொதுக்குழு உறுப்பினர்களாகப் பொதுச்செயலாளர் நியமித்தார்.

செயற்குழு உறுப்பினர்கள்:

நாஞ்சில் கி. மனோகரன், உடுமலை ப. நாராயணன், சேலம் க. இராசாராம் ஆகியோரை செயற்குழு உறுப்பினர்களாக பொதுச் செயலாளர் நியமித்தார்.

ஜி. பி. எஸ்—கே. கே. என்.

இயக்கத்தின் முதுபெருந் தலை[...]களான குடந்தை கே. கே. நீலமேகம், சேலம் ஜி. பி. சோமசுந்தரம் ஆகியோரின் அருந்தொண்டினைப் பாராட்டி கழகச் சார்பில் மதுரை மாநாட்டின் கடைசி நாளன்று அறிஞர் அண்ணா அவர்களால் வீரகேடயம் வழங்குவ[...]தென்ற தீர்மானத்தை, தோழிய[...] சத்தியவாணிமுத்து முன்மொழி[...] தோழர் என். வி. என். வழிமொழி[...] ஒருமனதாகவும் உற்சாகத்துடனு[...] பொதுக்குழு உறுப்பினர்களால் ஒ[...]புதல் அளிக்கப்பட்டது.

அடுத்து மாநாட்டின் தீர்மான[...]களை பொதுக்குழு ஆராய்ந்த[...] கழக வரவு-செலவு கணக்குகளை[...] பற்றியும் தணிக்கைக்குழுவின் சி[...]ரிசுகளைப் பற்றியும் நிர்வாகம் பற்[...] பிரச்சினைகளைப் பற்றியும் விவா[...]கப்பட்டது.

இறுதியாக அண்ணா அ[...] பத்திரிகை நிருபர்களுக்[...]யளித்தார்.

மாநாட்டு விமர்சனம்:

# மாட்சிமைமிக்க மதுரை மாநகரில்

○

1939-ம் ஆண்டு இறுதி இந்தி எதிர்ப்பு அறப்போர் முடிவுற்ற கட்டம் — நீதிக்கட்சியின் பணியினை மீண்டும் தீவிரப் படுத்தவேண்டும் என்ற திட்டத்தில் முதன்முதலாக சென்னை மாவட்ட நீதிக்கட்சி மாநாடு சவுந்தர்ய மகாலில் நடைபெற்றது.

முதலாவதாக சவுந்தர்ய மகால் என்ற அம்மண்டபத்தின் நிலையை விவரிப்பது அவசியமாகும். சென்னை கோவிந்தப்ப நாயக்கன் வீதியிலுள்ள ஒரு கம்பெனியின் மேல் மாடிதான் சவுந்தர்ய மகால் என்பது. அந்த மண்டபத்தில் மிக நெருக்கமாக மக்கள் கூட்டம் திரண்டால்கூட 850 பேர்தான் இடம் பெறக்கூடும். அதற்குமேல் திரண்டால், மாடி இடிந்துவிழ வேண்டியதுதான்! எனவே காவல் துறையினரின் கண்டிப்பு சொல்லி முடியாது.

இந்தமண்டபத்தில்தான்சென்னை மாவட்ட நீதிக்கட்சி மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் வரவேற்புத் தலைவர் தோழர் டி. சண்முகம் அவர்கள்; செயலாளர்கள் டி. எம். பார்த்தசாரதி, கே. சிவஞானம் ஆகியோரும் நானும்!

மாநாட்டுத் தலைவர் யார் தெரியுமா? நமது அண்ணா அவர்கள் தான்! அதுமட்டுமா! பெரியார், ...மாரராசா சர். முத்தையா (இப்... ராசா சர்.) சி. டி. நாயகம்; ...ணி பாலசுப்ரமணயம், ... தி. பொ. வேதாசலம், ...தம் குருசாமி ஆகியோர்! நுழைவுக் கட்டணம் எவ்வளவு தெரியுமா? ரூ. 1. அணா 8 தான்!

இவ்வளவிருந்தும் அந்த மண்டபத்தில் முக்கால் பகுதிகூட மக்கள் நிரைவில்லை. அதாவது சுமார் 300 பேர்தான் அந்த மாவட்ட மாநாட்டிற்கு வந்திருந்தனர்!—இத்தனைக்கும் பெரியார் — அண்ணா ஆகியோர் கலந்து கொள்ளும் மாநாட்டிற்கு!

இதற்குப் பிறகுதான் சிறுகச் சிறுக இயக்கப்பணி நிதானமாகவும் ஆனால் உறுதிப்பாடாகவும் நடத்தப்பெற்று, நீதிக்கட்சி, திராவிட...மாக வளர்ந்து பின்னர் திரா... முன்னேற்றக் கழகமாக ...து இன்று நாட்டின் மகத்... சக்தியாகத் திகழ்கிறது.

ஃ

மதுரைப் பொது மாநாட்டில் ...ண்ட மக்கள் வெள்ளத்தை ...ன் கண்டு பெருமிதம் கொண்ட ...ரத்தில், மேலே குறிப்பிட்ட ...939-ம் ஆண்டு சென்னை ...வட்ட நீதிக்கட்சி மாநாடு என் ...வுக்கு வந்தது. சென்னை சவுந்... மகால் இப்போது நம் கழகத்... கமிட்டிக் கூட்டத்திற்குக்கூட ...காது!

...வித மகத்தான வளர்ச்சிக்... பாடுபட்ட முன்னுள் தலைவர்... தொண்டர்களையும் அவர் ... பணியினையும் எண்ணி ...களுக்கெல்லாம் என் மன...யே வணக்கம் செலுத்தி

இவ்வித வளர்ச்சிக்கு மூல காரணமாயிருந்து அண்ணா அவர்களின் தலைமையில் பணியாற்றிய தோழர்களில் சிலர் இன்று இந்த அணிவகுப்பில் இல்லையேயென்று பெரிதும் வருந்தினேன்.

ஃ

மதுரையில் நடைபெற்ற பொது மாநாட்டின் ஏற்பாடுகள் அனைத்தும் ஒரு திங்களுக்குள்ளாகவே தான் செய்து முடிக்கப்பட்டது. போதிய கால மில்லாததால் மாநாட்டை ஒத்திவைக்கலாமா யென்று யோசிக்கும் நிலையும் உண்டாயிற்று. எனினும் மலைபோல குவிந்திருந்த மாநாட்டு ஏற்பாடு களனைத்தும் மாநாட்டின் நிர்வாகிகளது உணர்ச்சி உற்சாகம் ஆகிய வைகள் இரவென்றும் பகலென்றும் பாராமல் ஒழுங்குற நிறைவேற்றப் பட்டது.

ஃ

மாநாட்டை நடத்த மதுரை நகரிலுள்ள குதிரைப் பந்தயத் திடலை அரசினர் கொடுக்க மறுத்து விட்டனர். எனவே வைகை ஆற்றுக்கு ஒரு மைல் தொலைவிலுள்ள திடலில் மாநாட்டை நடத்தலாமென்று மாநாட்டு நிர்வாகிகள் திட்டமிட்டனர். அத்திடலை அண்ணா அவர்கள் பார்வையிட்டு, அந்த இடம் போதாதென்று நிலைமையை விளக்கிய பிறகே திருப்பரங்குன்றத்தில் நடத்துவதென்ற முடிவுக்கு வரப்பட்டது. ஆக எந்தத் திடலில் மாநாட்டை நடத்துவதென்ற முடிவுக்கு வரவே நாட்கள் கடந்துவிட்டன.

ஃ

மாநாட்டின் துவக்கப் பணியில் வரவேற்புத் தலைவர் தோழர் எஸ். முத்து அவர்களும், மற்ற நிர்வாகிகளும் பம்பரம் போலச் சுற்றிச் செயலாற்றினர். இவர்களுக்குத் துணையாகவும் ஆலோசனை கூறவும் மாநாட்டுப் பொருளாளர் மு. கருணாநிதியும், தலைமைக் கழகச் செயலாளர்களும் அவ்வப்போது மதுரை சென்று துணை புரிந்துவந்தனர். மற்றும் மதுரை மாவட்ட தி.மு. கழகத்தின் தோழர்களும் வரவேற்புத் தலைவர் எஸ். முத்து அவர்களுக்குப் பக்க துணையாயிருந்தனர். என்றாலும் ஒவ்வொரு காரியத்தையும் தோழர் முத்து தாமே உடனிருந்து கவனித்த பிறகே மன அமைதி கொள்வார். இவ்வாறு தோழர். முத்து அவர்களும், மாநாட்டுச் செயலாளர்களான அன்பில் தருமலிங்கம், த. ஆவுடையப்பன், பி. எஸ். மணியம், தொண்டர்படைத் தலைவர்கள், காதர்கனி, சீனிவாசன் மற்றும் தோழர்கள் பாண்டி, இராமநாதன், நடராசன், பவுல்ஸ், இராமச்சந்திரன், கூடலூர் இராமசாமி, முனியப்பா, பிச்சை, சவுந்திரம், ராமு, உள்ளிட்ட பலதோழர்களும், வரவேற்புக் குழுவினரும் தங்களாலியன்றபணியினை இனிது நிறைவேற்றினர். அதுபோன்றே மதுரை மாவட்ட தி. மு. கழகத் தோழர்களும் வட்டச் செயலாளர்களும், பொதுக்குழு உறுப்பினர்களும், வரவேற்புத் தலைவர் இட்ட பணியை நிறைவேற்றித் தந்தனர்.

தோழர். துரையரசு அவர்களின் அருந்தொண்டு மாநாட்டின் வெற்றிக்கு பக்கதுணையாயிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொண்டர்படையினருக்கு போதிய பயிற்சியை முன்னதாகவே அளித்திருந்தால். மாநாட்டுப் பிரதிநிதிகளில் சிலருக்கு ஏற்பட்ட மனச் சோர்வுக்கும் அதிருப்திக்கும் இடமிருந்திருக்காது. என்றாலும் தென்னக வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத மக்கள் வெள்ளம் கொண்ட மாநாட்டினை சீரும் சிறப்புமாக நடத்தித்தந்ததற்கு ஊன்றுகோல்போன்று விளங்கிய தொண்டர்களின் பணியை நாம் மறப்பதற்கில்லை.

ஃ

மாநாட்டுத் தலைவர் வருகை!

11—7—61-ம் நாள் காலை 8 மணிக்கு, திருவனந்தபுரம் துரித வண்டியில் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் மதுரை வந்து சேர்ந்தார்கள். மாநாட்டுத் திறப்பாளர் கே. ஏ. மதியழகன், கண்காட்சித் திறப்பாளர் தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., சென்னை மேயர் முனுசாமி ஆகியோரும் சென்னையிலிருந்து அண்ணா அவர்களுடன் வந்தனர். மதுரை ரயில்வே நிலையம் என்றுமில்லாதபடி எழில் மிகுந்து காட்சியளித்தது! ஆயிரக் கணக்கான மக்கள் ரயில்வே நிலையம் உள்ளும் புறமும் திரண்டிருந்தனர். வரவேற்புத் தலைவர், செயலாளர், பொருளாளர், தலைமைக் கழகச் செயலாளர்கள் மாநில அமைப்பாளர்கள், மாவட்ட செயலாளர்கள் ஆகியோர் வரிசையாக நின்று அண்ணா அவர்களுக்கு மாலைகளை அணிவித்துவரவேற்றனர்ரயில்வே நிலையமே அதிரும்படி வாழ்த்தொலிகள் எழும்பின.

ரயில்வே நிலையத்திற்குவெளியே அணிவகுத்து நின்ற மதுரை நகர தி. மு. க. 'கிளைகளின் நிர்வாகிகள் சார்பு மன்ற நிர்வாகிகள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள், மாணவர் கழக நிர்வாகிகள், நகர பிரமுகர்கள் அண்ணா அவர்களுக்கு மலர் மாலைகளையும் கைத்தறி ஆடைகளையும் அணிவித்து வரவேற்றனர்.

பின்னர் அண்ணா, தொண்டர் படைத் தலைவர்கள் அணிவகுத்து நின்று செலுத்திய வணக்கத்தை கைகூப்பி ஏற்றுக்கொண்ட காட்சி வீரமிக்க போர் படையினை நினைவூட்டியது.

சுதந்திரப் புறு

அடுத்து சுதந்திரத் திராவிடம் அடைந்தே தீருவோம் என்று மக்கள் முழக்கமிட அண்ணா அவர்கள் புறுவைப் பறக்கவிட்டார்கள். தொடர்ந்து சிறிது தூரம் திறந்த ஜீப் காரில் அண்ணா அவர்கள் முன்னணி வீரர்கள் புடைசூழ ஊர்வலமாகச் சென்று, எல்லோருக்கும் வணக்கம் செலுத்திவிட்டு பொதுக்குழு நடைபெறும் முகாமுக்குத் தலைமைக் கழகச் செயலாளர்கள், பொருளாளருடன் சென்றார்.

ரயில்வே நிலையத்தில் அளிக்கப்பட்ட இந்த வரவேற்பு போல இதுவரை எந்தத் தலைவருக்கும் மதுரையில் அளிக்கப்பட்டதில்லை யென்று காங்கிரஸ்காரர்களே பெருமூச்சு விடும் அளவுக்கு சிறப்புப் பெற்றது.

செயற்குழு—பொதுக்குழு கூட்டங்கள்

11-7-61—12-7-61 ஆகிய நாட்களில் நடைபெற்ற மத்திய செயற்குழு பொதுக்குழுக்கூட்டங்களிலும் தீர்மான ஆய்வுக்குழு, கலைக்கண் காட்சிக்குழு கூட்டங்களிலும் அண்ணா அவர்கள் கலந்து கொண்டார்கள். இடையே பத்திரிகை நிருபர்களுக்கும் பேட்டியளித்தார்கள்.

ஊர்வலம்!

கழக வரலாற்றில் மட்டுமின்றி தென்னக அரசியல் வரலாற்றிலேயே சென்னையில் நடைபெற்ற இலங்கை சர்க்கார் அடக்குமுறை கண்டன ஊர்வலம்தான் முதன்மையானது என்று நாடே தீர்ப்பளித்தது. ஆனால் மதுரை மாநாட்டு ஊர்வலம் அதையும் மிஞ்சி விட்டது!

ஊர்வலத்திற்காக பெரிய படகு போன்று அலங்கரிக்கப் பட்டிருந்த காட்சியை எவ்வளவு புகழ்ந்தாலும் ஈடாகாது. அந்த கம்பீரமான படகில், அமைக்கப்பட்டிருந்த பிரத்யேக இடத்தில் அண்ணா அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவருடன், மாநாட்டுத் திறப்பாளர்,

## மாநாட்டுத் தீர்மானங்கள்

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் தீர்மான ஆய்வுக் குழுவிலும், பொதுக்குழுக் கூட்டத்திலும் மாநாட்டுப் பிரதிநிதிகள் கூட்டத்திலும் விரிவாக விவாதிக்கப் பட்டன. 13—7—61 இரவு நடைபெற்ற மாநாட்டுப் பிரதிநிதிகள் கூட்டத்தில் இறுதியாக விவாதித்து உருவாக்கப்பட்டன. இக்கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்களும் கலந்து கொண்டு அரிய யோசனைகளை வழங்கினார்கள். தீர்மானங்களைத் திரட்டித் தொகுக்கும் பணியில் நாவலர் நெடுஞ்செழியன், தோழர்கள் என். வி. என்., க. அன்பழகன், இரா. செழியன், ஆகியோர் பெரிதும் ஈடுபாடு கொண்டனர்.

# திரண்டனர் திராவிட வீரர்கள்!

# அணிவகுத்தனர் அடிமைவிலங்கொடிக்க!

கே. ஏ. மதியழகன், கண்காட்சித் திறப்பாளர், தோழியர் சத்திய வாணிமுத்து எம். எல். ஏ. வரவேற்புத் தலைவர் எஸ். முத்து. பொருளாளார் கலைஞர் கருணாநிதி, செயலாளர்கள் அன்பில் தருமலிங்கம், த. ஆவுடையப்பன், தொண்டர் படைத் தலைவர் சீனிவாசன், காதற்கனி, அவைத் தலைவர் நாவலர்நெடுஞ்செழியன், தலைமைகழகச் செயலாளர்கள் என்.வி. நடராசன், எ. கோவிந்தசாமி சட்டசபை தி. மு. க. கட்சி துணைத் தலைவர் அன்பழகன் சென்னை மேயர் வி. முனுசாமி, தோழர்கள் ஜி. பி. சோமசுந்தரம், ப. உ. சண்முகம் எம். எல். ஏ., டி. கே. சீனிவாசன், தில்லை வில்லாளன், மாவட்டச் செயலாளர்கள் இரா. தருமலிங்கம் எம். பி., உடுமலை நாராயணன், இரா. சாம்பசிவம், அலமேலு அப்பாதுரை எம். சி., இலட்சிய நடிகர் இராசேந்திரன், நடிகமணி டி. வி, நாராயணசாமி ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

மதுரை நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. நகரிலுள்ள எல்லா தி. மு. க. கிளைகளும், சார்பு மன்றங்களும், தொழிற் சங்கங்களும், பொது மக்களும் மலர் மாலைகளைத் தலைவர்கள் மீது தூவி தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

மூன்றடுக்கு மாடிகளின் உச்சியில் தாய்மார்களும் குழந்தைகளும் திரண்டிருந்து வரவேற்பளித்தனர். இதுபோன்ற ஊர்வலத்தையும், மக்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியையும் மதுரை நகர வரலாற்றில் இதுவரை கண்டதில்லை யென்பது மதுரை நகர மக்களின் ஒருமித்த தீர்ப்பாகும்.

ஒவ்வொரு மாவட்ட சார்பில் லாரிகள் அலங்கரிக்கப்பட்டு வாழ்த்தொலிமுழங்கி வந்தனர். அதுபோன்றே ஆந்திர. கருநாடக, கேரள மாநிலப் பிரதிநிதிகள், அலங்கரிக்கப்பட்ட வண்டிகளில் அந்தந்த மொழிகளில் ஒலி முழக்கம் செய்த காட்சி, போருக்குப் புறப்படும் வீரர்களின் அணி வகுப்பைப் போன்று மக்கள் உள்ளத்தில் உற்சாகமும், உணர்ச்சியும் உண்டாகிற்றென்று கூறின் மிகையாகாது.

வளைவுகளும், தோரணங்களும் அலங்கரிக்கப்படாத வீதிகளே யில்லையென்று கூறு மளவுக்குத் தாய்த்திருநாட்டை மீட்கும் பெரும் பணியை மேற்கொண்டுள்ள அறிஞர் அண்ணா அவர்களை மதுரையம்பதியே வரவேற்றது என்றே கூறலாம்.

காலை 10-மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம், மாலை 4-மணிக்குத்தான் மாநாட்டுத் திடலை வந்து சேர்ந்தது.

**தாயின் மணிக்கொடி பாரீர்!**

மாநாட்டின்தலைவாயிலில்அமைக்கப்பட்டிருந்த கழகக் கொடியை அண்ணா அவர்கள் ஏற்றிவைக்கும்போது அதிர் வேட்டுகளும், அவ்வேட்டுகளை மிஞ்சும் மக்களின் கையொலியும், ஒலி முழக்கமும் கோழையைக்கூட நிமிர்ந்து நிற்கும் மகத்தான எழுச்சியை உண்டாக்கிற்று.

**கண்காட்சித் திறப்பு!**

மாலை 5—30-மணி அளவில், கலைக் கண்காட்சியைத் திறந்து வைத்து, தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர். துணிமணிகளை நிறப்பிய கடைவீதிக் காட்சியாகயில்லாமல் சிந்தனையைக் கிளறும் சிறப்புக் கூடமாக விளங்கிற்று!

**எஸ். எஸ். ஆர்., டி. வி. என்.**

இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். அவர்களும் அவரது குழுவினரும் "தென்பாண்டி வீரன்" நாடகம் மூலம் அளித்த விருந்துடன் முதல் நாள் நிகழ்ச்சி முடிவுற்றது.

**வருக! வருக! திராவிட வீரர்களே வருக!**

14—7—61 அன்று காலை 9-30 மணிக்கெல்லாம் மாநாட்டுக்கொட்டகையில் மக்கள் திரண்டுவிட்டனர். கழக இசைவாணர்கள் இயக்கப் பாடல்களை இசைக்க முன்னணி வீரர்கள் ஒருவர் பின் ஒருவராய் மேடைமீது வந்தமர்ந்தனர். முதன் முதலாக வரவேற்புத் தலைவர் எஸ். முத்து அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசியது அனைவரின் மனதையும் உருகச் செய்தது.

**இடிமுழக்கம்**

அடுத்து, மாநாட்டைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவாற்றிய தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் இடிமுழக்கம்போல எதிரிகளுக்கு எச்சரிக்கை செய்து, இன்பத் திராவிடத்தைப் பெறுவோம் என்று சூளுரைத்தார்.

**நாம் கண்ட தனிப்பெருந் தலைவர்**

இடைவேளைக்குப் பிறகு, மாவட்டச் செயலாளர்களும். மாநில அமைப்பாளர்களும். மகளிர் மன்றம். தொழிற்சங்கங்கள், மாணவர் கழகம் ஆகியவைகளின் பிரதிநிதிகளும், அவைத் தலைவர் இரா. நெடுஞ்செழியன், சென்னை மேயர் வி. முனுசாமி ஆகியோரும் வரவேற்புத் தலைவர் முன்மொழிந்ததைத் தொடர்ந்து அண்ணா அவர்களின் அரிய சேவையை விளக்கிக் காட்டி மாநாட்டுக்குத் தலைமை வகிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். பின்னர் பலத்த ஆரவாரத்துக்கிடையே அண்ணா அவர்கள் தலைமையுரையாற்ற எழுந்தபோது மாவட்ட—மாநிலங்கள் சார்பில் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

**சொற்போர்!**

அண்ணா அவர்கள் 100 நிமிடங்கள்வரை நாட்டின் எல்லா பிரச்சினைகளையும் விளக்கியதுடன் அடுத்துவரயிருக்கும் பொதுத்தேர்தலில் கழகத்திற்கு பேராதரவு தருமாறு கேட்டுக்கொண்டார். மற்றும் வெள்ளக் கொடுமையால் அவதியுறும் மக்களுக்கு உதவி அளிக்குமாறும், வேண்டிக்கொண்டார்.

சுதந்திரத் திராவிடம் நமது பிறப்புரிமை என்பதை விளக்கிக் காட்டியபோது மாநாட்டில் திரண்டிருந்த லட்சக்கணக்கான மக்கள் புத்துணர்ச்சி பெற்று திராவிடநாடு திராவிடருக்கே என்று முழங்கினர்.

**மணிமகுடம்!**

இரவு 10-மணிக்கு எஸ். எஸ். ஆர். குழுவினரால் மணிமகுடம் நாடகம் சிறப்புற நடைபெற்றது.

**கருத்துப்படையலும் - தீர்மானங்களும்!**

15-7-61 அன்று காலை 9-30 மணிக்கு மூன்ளும் நாள் நிகழ்ச்சி துவங்கிற்று. அறிஞர் அண்ணா அவர்கள் வெள்ளக் கொடுமையால் தவிக்கும் மக்களுக்கு ஆறுதல்கூற தஞ்சை—திருச்சி சென்றமையால் அவைத் தலைவர் நெடுஞ்செழியன் தலைமை வகித்தார். சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. இடைவேளைக்குப் பிறகு தீர்மானங்கள் பல தொடர்ந்து நிறைவேற்றப்பட்டன. கடைசியாக சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழப்பெற்றது.

**கே. ஆர். ஆர்.**

இரவு 10 மணிக்கு நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, அவர்களும் அவரது குழுவினரும் 'தமிழ் வாழத் தலை கொடுத்தான்" என்ற சிறந்த நாடக விருந்தினை வழங்கினர்.

**மேடப்பா வருகை.**

நான்காவது நாள் 16-7-61 அன்று இத்தனை நாள் இருந்ததைவிட இரட்டிப்பு மகிழ்ச்சி மக்களிடையே காணப்பட்டது. கருநாடக மாநில முன்னாள் தலைமை நீதிபதியும் முதுபெருந் தலைவருமான மேடப்பா அவர்கள் மாநாட்டுக்கு வருகை தந்தது அம் மகிழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும். மேடப்பா அவர்களை அண்ணா அவர்கள் அன்புடன் வரவேற்ருர்கள். அது சமயம் மாநாட்டுத் திடலே அதிரும்படி கையொலி எழுப்பினர்!

பின்னர் பெரியார் மேடப்பா அவர்களை, தோழர் க. ராசாராம், கழக முன்னணித் தோழர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அடுத்துத் தொடர்ந்து தீர்மானங்கள் மீது கருத்துரையும், சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன

பின்னர் உயர்திரு மேடப்பா அவர்கள் உணர்ச்சிமிக்க சொற்பொழிவினையாற்றுகையில் திராவிட நாட்டைப் பெற வாதமே தேவையில்லை. நமக்கு அந்த உரிமை உண்டு என்று வீராவேசத்துடன் குறிப்பிட்டார்.

இடைவேளைக்குப் பிறகு தீர்மானங்கள்மீது பல தோழர்கள் பேசினர். எல்லா தீர்மானங்களும் இத்துடன் முடிந்தன. பின்னர் தொடர்ந்து சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

சிறப்புச் சொற்பொழிவுகள் அனைத்தும் சுருக்கமாகவும் ஆனால் உணர்ச்சியூட்டக் கூடியதாகவும் அமைந்திருந்தன.

**வீரகேடயம்**

பொதுக்குழுவில் நிறைவேறிய தீர்மானத்திற்கேற்ப இயக்கத்தின் முதுபெருந்தலைவரான ஜி.பி. சோமசுந்தரம் அவர்களின் தொண்டினைப் பாராட்டி அண்ணா வீரகேடயம் வழங்கினர். மாநாட்டில்திரண்டிருந்த மக்களும் ஜி. பி. சோமசுந்தரம் வாழ்க வாழ்க என்று முழங்கினர் மற்ருெரு முதுபெருந்தலைவரான குடந்தை கே. கே. நீலமேகம் அவர்கள் உடல்நலக் குறைவா[illegible] மாநாட்டிற்கு வர இயலாததால் அவருக்குரிபகேடயத்தை அண்ணா அவர்களே குடந்தை சென்று நேரில்வழங்குவதாகக்கூறினர்கள்.

தமது தொண்டினைப் பாராட்டி வீரகேடயம் அளித்தமைக்கு முதியவர் ஜி. பி. எஸ். அவர்கள் நன்[illegible] தெரிவித்தார்.

**நன்றி கூறல்**

வரவேற்புத் தலைவர் தோழ[illegible] எஸ். முத்து அவர்கள் மாநாட்டின் சிறப்புக்குக் காரணமான ஒவ்வொரு துறையினருக்கும் அறிஞர் அண்ணா அவர்களுக்கும், சொற்பொழிவாளர்களுக்கும், தலைமைக் கழகத்திற்கும், பொதுமக்களுக்கும் விரிவாக நன்றி நவின்ருர்.

**சுதந்திரத் திராவிடம் பெறுவோம்**

திராவிட நாட்டுரிமையை இன[illegible] கேட்டுப் பெறப் போவதில்லை[illegible] நாமே நமது நாட்டை ஆளும் உ[illegible]மையை எடுத்துக் கொள்வோம்[illegible] டெல்லி ஏகாதிபத்தியம் மேலு[illegible] பிடிவாதம் காட்டினல் — என்[illegible] அண்ணா அவர்கள் தமது முடிவுரையில் கூறும்போது எவ்வித[illegible] தியாகத்திற்கும் நாங்கள் தயா[illegible] தயார் என்று மக்கள் வீரமுழக்[illegible]மிட்டனர்.

டெல்லி ஏகாதிபத்தியத்தி[illegible] ஆணவத்தை அடக்க, அடுத்[illegible] முதற்பணியாக பொதுத்தேர்தலி[illegible] அனைவரும் அக்கறைகாட்டவேண்டும் என்றும், கழகத்திற்குப் பே[illegible]தரவு தரவேண்டும் என்று அண்ணா அவர்கள் முடிவுரை[illegible] குறிப்பிட்டார்கள்.

**எம். ஜி. ஆர்.**

இரவு 11 மணிக்கு, புரட்சி[illegible]கர் எம். ஜி. ஆர். அவர்களும் [illegible]ரது குழுவினரும் அளித்த இ[illegible]யற்ற சுமைதாங்கி நாடக [illegible]துடன் மாநாடு இனிது [illegible]வுற்றது.

என்.

## மிச்சம் ஒரு லட்சம்

தி. மு. பொது மாநாட்டின் வாயிலாக மீதப்பட்ட தொகை ரூபாய் ஒரு இலட்சம் என்றும், மேலும் சற்று கூடுதலான தொகை மிச்சப்படுமேயன்றி குறையாதென்றும் மாநாட்டுப் பொருளாளர் கலைஞர் மு. கருணாநிதி தெருவித்தார். இச்செய்தியை மக்கள் உற்சாகமுடன் வரவேற்றனர்.

# மறைந்தும் மறையாத மாவீரர்கள் மனதில் நிலைத்துவிட்ட கண்மணிகள் !

## உயிர் கொடுத்த உத்தமர்களுக்கு சி. பி. சிற்றரசு, அலமேலு அம்மையார் வீரவணக்கம்

**இன்று இங்கு இம்மாபெரும் மாநாடு சீரும் சிறப்புமாக நடைபெறுகிறதென்றால் இந்த வளர்ச்சிக்குக் காரணம் இதற்கு முன்னால் கல்லடியும்; சொல்லடியும் பட்டு அடக்குமுறை வெறிக்கு ஆளாகி உயிரிழந்த நமது வீரர்களின் மகத்தான பணியேயாகும். எனவே அவர்களின் உணர்ச்சியையும் எண்ணத்தையும் நடைமுறையில் கொண்டுவர எவ்விதத்தியாகத்திற்கும் நம்மை ஆட்படுத்திக் கொண்டோம் என்ற உறுதிப்பாடுடன் மறைந்த மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவோமாக— என்று சிந்தனைச் சிற்பி சிற்றரசு கூறினார்.**

**வீரத் தியாகிகளின் வழிநின்று சுதந்திரத் திராவிடத்தைப் பெறுவோம் இது உறுதி! என்று தோழியர் அலமேலு அப்பாதுரை எம். சி. அவர்கள் வீர வணக்கம் செலுத்திப் பேசினார்.**

மதுரையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொது மாநாட்டில் இரண்டாவது நாளன்று கழகக் கொள்கைகளுக்கு உயிரீந்த மாவீரர்களின் படம் மேடையில் அலங்கரித்து வைக்கப்பட்டு அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

அந்த நிகழ்ச்சியில் முதலில் பேசிய திருமதி அலமேலு அப்பாதுரை அவர்கள், "திராவிட நாடு விடுதலைப் பெறுவதற்கு நாம் மட்டுமல்ல; நமக்குப் பக்கத்திலேயே- ...க்குத் தெரியாமல் — இந்தத் ...யாகிகளும் இருந்து போராடுவார் ...ள்" என்று குறிப்பிட்டார்.

"இந்த மாவீரர்களுக்கு இன்று நாம் செலுத்துகின்ற வீரவணக்கத்தின் மேல் ஆணை வைத்துச் சொல்கிறேன். விரைவில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலே நம் கொடி ...க்கத்தான் போகிறது" — என்று அம்மையார் உணர்ச்சியுடன் குறிப்...ட்டார்.

அம்மையார் மேடையிலிருந்து "வீரம்" என்று ஒலி எழுப்ப, ...நாட்டுப் பந்தலில் அமர்ந்திருந்த இலட்சக் கணக்கான பிரதிநிதிகள் "வணக்கம்" என்று விண்முட்ட ...லி எழுப்பிய காட்சி மறக்கமுடி...த நிகழ்ச்சியாகிவிட்டது,

ஃ

### ...பி. சிற்றரசு

இரண்டாவதாகப் பேசிய வெளி...ட்டுச் செயலாளர் சி, பி. சிற்றரசு ...வர்கள் குறிப்பிட்டதாவது:-

அறிஞர் அண்ணா அவர்கள் ...நற்றைய தினம் ஏற்றிவைத்த ...காடி, கழகத்தின் வீரத்தியாகி...ளின் சவங்கள் புதைக்கப்பட்ட ...ண்ணிலிருந்து பறப்பதால்தான் ...தற்கு அத்தனை வேகமும், கவர்ச்...யும் இருக்கிறது! யாருடைய ...யிர்கள் இந்த இயக்கத்தை ...ளர்த்ததோ, யார் சிந்திய இரத்... உறைவதற்கு முன இந்த ...யக்கம் இத்தனை செல்வாக்கைப் ...ற்றதோ—அவர்களை நாம் எக்...லமும் மறக்க மாட்டோம் என்...தத்தான் இந்த வீர வணக்க ...ழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

...னிதனாக பிறந்த எவனும் ...த்தே தீரவேண்டும்! பிறந்த ...தன் இறப்பதில்லை என்று கரு...கொண்டிருந்த ஒரே ஒரு சீரா... இருந்தான், அந்த புத்தனும் ...ாள் உலகத்தைப் பார்த்து ...யைத் தெரிந்து கொண்

மனிதர்களுக்கு நோய் என்று ஒன்று வருகிறது—அதனால் சாவு என்று ஒன்று நேர்கிறது—என்ற உண்மையைத் தெரிந்தவுடன், அரண்மனை, அரசபோகம், செல்வம், சிறப்பு, ஏன், மனைவியையும் மகனையும் கூடத் துறந்து காடேகினான்.

மனிதன் சாவுக்குக் காரணம் கண்டான் கௌதம புத்தன்; சாவதற்கு முன் வாழவேண்டிய முறை பற்றி கருத்துக்கள் சொன்னான், அந்த 'எப்படி வாழவேண்டும்' என்ற தத்துவத்தைத்தான் இந்த மாவீரர்கள் செய்துகாட்டி இன்று பிணங்களாக நம் முன்னால் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள்,

இந்த மாவீரர்கள் ஏன் இறந்தார்கள்? எதிரிகளுக்குத் தெரிய வேண்டாம்; நமக்குத் தெரிந்தாலே போதுமானது, ஏனென்றால் எதிர் காலத்தில் நம்மில் எத்தனை பேர் இப்படிப் படங்களாகத் தொங்கப்போகிறோமோ—எத்தனை பேருடைய குடும்பங்களிலே அழுகுரல் எழும்பப்போகிறதோ-யார் கண்டார்கள் ?

இவர்களை கொன்றவர்களைக் கேட்க ஆள் இல்லை இந்த நாட்டில் !

நெல்லிக்குப்பம் மஜீதை பட்டப் பகலில், நடுத்தெருவில் குத்திக் கொன்றான் ஒரு மாற்றான். குத்தியவன் நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று சரணடைந்தான்! "நான்தான் குத்திக்கொன்றேன்" என்று வாக்கு மூலம் தந்தான். ஆனால், வழக்கு மன்றமோ அவனை விடுதலை செய்தது. 'அவனே ஒப்புக்கொண்டாலும் கூட, கண்ணால் பார்த்த சாட்சி கிடையாது, என்று தீர்ப்பு சொல்லி, சட்டம் வேடிக்கையான முறையில் காப்பாற்றிவிட்டது அவனை !

அதைப்போல் குடந்தை இராமலிங்கம் என்ற தோழர், கூட்டத்திலே கேள்வி கேட்டார் என்ற காரணத்தினால் போலீஸ் ஸடேஷனிலே அடித்துக் கொல்லப்பட்டார் என்ற வதந்தி உலவியது.

ஆனால், இந்த மாநிலத்தின் போலீஸ் மந்திரி பக்தவத்சலம், மனிதாபிமானமற்ற மிருகவுணர்ச்சியுடன் "மூட்டைப் பூச்சி மருந்தைத் தின்று செத்திருப்பான்" என்று சட்டமன்றத்திலே குறிப்பிட்டார்.

இவர்களை 1962-க்குப் பின்னும் அனுமதித்தால், "மூட்டைப் பூச்சி மருந்லதயல்ல; கிளாஸ்கோ பிஸ்கட்டைத் தின்று செத்தார்கள்" என்று நீண்டதொரு மரணப் பட்டியலைப் படித்தாலும் அதிலே ஆச்சரியப்படுவதற்கில்லை!

இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்தபோது ஹிட்லரின் போர் வெறிக்கு பிரிட்டனின் சர்ச்சில் இப்படி ஒரு பதிலைத் தந்தார்.

பிரிட்டன் மக்கள் ஹிட்லருக்கு எதையாவது தருவர் என்றால், அது நாடாக இருக்காது, வியர்வை —கண்ணீர்—செந்நீர் - இவைதான் என்றார்.

அதுபோல் தி. மு, கழகம் அதன் எதிரிகளுக்கு எதையாவது தரவேண்டுமென்றால் அது உயிர்களே — என்பதைத்தான் வீர மரணங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இந்த நாட்டின் அரசினர் "ஏன் செத்தாய்?" என்று கேட்கிறார்கள்; "யார் கொன்றார்கள்?" என்று கேட்பது கிடையாது.

விஷக் கோப்பையைக் கையிலே எடுத்துக்கொண்டு மரணத்தை நோக்கி அடிவைத்துச் சென்று கொண்டிருந்த சாக்ரடீசிடம் நண்பன் கேட்டான். "நீ ஏன் சாக வேண்டும்? மன்னிப்புக் கேட்டுக் கொண்டு பிழைத்து விடு!" என்று!

சாக்ரடீஸ் சிரித்துக்கொண்டே, "என்னைச் சேர்ந்த என் நாட்டின் தோழர்களுக்கு நான் உயிரோடிருந்து சொல்வதால் பலனில்லை; செத்த பிறகாவது என் கருத்தை ஏற்றுக் கொள்கிறார்களா என்று பார்க்கவேண்டும்! அதுவுமின்றி, புராணிகர்கள் செல்கிற மேல் உலகம் என்று ஒன்று இருந்தால், அருகே இருக்கிற பண்டா, ஹோமர், ஜூனோ முதலியோரிடம் என் கொள்கையை எடுத்துச் சொல்வேன்!" என்று பதில் சொன்னாராம்.

சாவுக்கு விளக்கம் தந்தான் சாக்ரடீஸ்: அந்த விளக்கத்தை செத்து நிரூபித்துக் காட்டி விட்டார்கள் நம் தியாகிகள் !

இன்று இவர்கள் பெயரால் எண்ணற்ற மன்றங்கள் நாட்டில் இருக்கின்றன. அதன் மூலம் இவர்களின் கொள்கையை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்றுதானே பொருள்?

54 வயதுடைய நான் 24 வயது வாலிபனான மஜீதின் மரணத்தைப் பற்றிப் பேசுகிறேன்! நான் வீர மரணம் அடைந்து வாலிபர்களாகிய நீங்களல்லவா என்னைப்பற்றிப் பேசவேண்டும்? அந்தச் சமயம் வருமென்றால் நான் மிகவும் மகிழ்வேன்.

ஆனால் அத்தகைய வாய்ப்பை இந்த நாட்டு அரசு இதுவரை ஏற்படுத்தியதுபோலவே இனியும் ஏற்படுத்தும் என்று நிச்சயமாக நம்பலாம்.

இவர்களுடைய துப்பாக்கி கம்யூனிஸ்ட்காரர்களைச் சுடும்! தொழிலாள நண்பர்களைச் சுடும்! தி. மு. கழகத்தாரைச் சுடும்! ஆனால், நாட்டைப் பிடித்துக் கொண்ட சீனாக்காரனைச் சுடாது!

விடுதலை வீரர்களுக்குச் சாவு என்பது விடுதலைப் போராட்ட நேரத்தில் மட்டும்தான் வரும் என்று கணக்கில்லை! விடுதலை கிடைத்த பிறகும்கூட மக்கள் பாராட்டிய பின்னரும்கூட அந்த மரணம் வரலாம் !

இந்திய விடுதலைப் போரிலே வெற்றியைக் கண்ட பிறகுதான் காந்தியைக் கொல்ல கோட்சே வந்தான்!

அடிமை விலங்கை ஒடித்து அமெரிக்க நாட்டிலே இலட்சிய வாழ்வை ஏற்படுத்திய பின்னர் தான், ஆபிரகாம் லிங்கனைச் சுட்டுக் கொல்ல வில்லியம்பூக் வந்தான்!

விடுதலை பெற்ற பாகிஸ்தானிலே தான், லியாகத் அலிகான் கொலை செய்யப்பட்டார்!

ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் விடுதலைப் போரில் மட்டுமல்ல; நாடு கிடைத்த பின்னரும் சாகத் தயாராகுங்கள் என்று சொல்லி இந்த வீரர்களை வணங்குகிறேன்.

மாநாட்டுத் திடலில் இருந்த இலட்சக்கணக்கான மக்கள் எழுத்து ஒரு நிமிடம் மௌனமாக நின்று மறைந்த மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தினர்.

---

## பொதுமக்களுக்கு பவானி சர்வ கட்சியின் வேண்டுகோள்

ஃ

பவானியில் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு நிவாரணம் தேடும் பொருட்டு சர்வகட்சிகளும் கொண்ட ஒரு "வெள்ள நிவாரணக் கமிட்டி" அமைக்கப்பட்டிருக்கிறது. கோவை ஜில்லா கலெக்டர் அவர்களால் கமிட்டி அங்கீகாரம் பெற்றிருக்கிறது. பொதுமக்கள் முன்வந்து தாராளமாகப் பண உதவி செய்யுமாறு வேண்டுகிறோம். பண உதவி செய்ய விரும்புவோர்,

பொருளாளர்,

பவானி டவுன் வெள்ள நிவாரணக் கமிட்டி,
பவானி அஞ்சல், ஈரோடுவழி,
கோவை ஜில்லா.

என்ற முகவரிக்கு அனுப்பவேண்டுகிறோம். அனுப்பிய பணத்திற்கு ரசீது அனுப்பப்படும் என்று கமிட்டித் தலைவர் தோழர் டி. எஸ். பி. எஸ். பெருமாள் அவர்கள் தெரிவித்துக்கொள்கிறார்.

# மாணவர் பாசறை

## தேர்தல் நிதிக்கு ரூ. 10,000

15—7—61 சனிக்கிழமை இரவு 12 மணியிருக்கும்! மதுரையில் நடைபெற்ற கழகப்பொதுமாநாட்டு மேடையில், தி. மா. மு. க. நிர்வாகிகள் கூட்டம் பொதுச்செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் மாநாட்டுப் பந்தலில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

திடீரென்று அண்ணு அவர்கள் வந்துவிட்டார். மாநாட்டுத் தலைமையுரையை யாற்றிவிட்டு தஞ்சை வெள்ளப் பகுதிகளைப் பார்க்கச் சென்றிருந்த அண்ணு அவர்கள் தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் மன்னை நாராயணசாமி தி. மு. க. தொழிற்சங்கச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. ஆகியோருடன் மேடைக்கு வந்து விட்டார். அண்ணு அவர்களுக்கு எல்லா மாணவர்களும் எழுந்து நின்று தங்கள் மரியாதையைச் செலுத்திக் கொண்டனர்.

ஏறத்தாழ நூறுக்கு குறையாத மாணவர்கள் ஒன்று கூடி அந்த நள்ளிரவிலும் தங்களது அமைப்பு சம்மந்தமாக ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தது கண்டு அண்ணு அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

பின்னர் தி. மா. மு. க. பொதுச் செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம், உ. கணபதி, என். வி. என். சோமு, நீ.அன்புச்செழியன் மற்றும் பல மாணவர்கள் வெள்ள நிலைமைகள் குறித்து அண்ணு அவர்களிடமும் தஞ்சை மாவட்டச் செயலாளரிடமும் கவலையோடு விசாரித்தனர்.

நான்கு நாட்கள் நடைபெறும் பொது மாநாட்டில் ஏன் மாணவர்களெல்லாம் ஒரு நாடகம் நடத்தக் கூடாது என்று அண்ணு அவர்கள் கேட்டார்கள். அதற்கு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் நேரமும் வசதியும் போதுமானதாக இல்லாத காரணத்தால் மாணவர்கள் அந்த வாய்ப்பை இழக்க நேரிட்டது என்று அண்ணு அவர்களிடம் கூறினர்.

பிறகு வ. கு. தலைவர் எஸ், முத்து அவர்கள் அண்ணு அவர்களை உணவருந்த அழைத்துச் சென்ருர்கள்.

தி. மா. மு. க. அமைப்புக் கூட்டத்துக்கு திரு எஸ். டி, சோமசுந்தரம் அவர்களைத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி தி. மா. மு. க. பொதுக்குழு உறுப்பினர் மதுரை கு, இளஞ்சேரன் அவர்கள் கேட்டுக்கொண்டார். மற்ெருரு பொதுக்குழு உறுப்பினர் விருதை ச. அமுதன் வழிமொழிந்தார். பின்னர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் மாணவர் கூட்டம் துவங்கியது.

முதலில் மாவட்ட வாரியாக தி. மா. மு. க. பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை மாவட்டம் — என். வி, என், சோமு.

கோவை மாவட்டம் — கே. ஏ. கிருஷ்ணசாமி.

மதுரை மாவட்டம்—கு. இளஞ்சேரன்.

தஞ்சை மாவட்டம்—அ. இளங்கோவன்.

தெ.ஆ. மாவட்டம்—இரா. இளவரசு.

ஆகியோரை உறுதிப் படுத்தியும், பொதுக்குழு நியமிக்கப்பட வேண்டிய மாவட்டங்களுக்குப் பின்கண்டவர்கள் புதிய உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

வ.ஆ. மாவட்டம் — தோப்பூர். திருவேங்கடம்.

செங்கற்பட்டு மாவட்டம்—எஸ். அப்பர்சுந்தரம்.

சேலம் மாவட்டம்—முருகேசன்.

நீலகிரி மாவட்டம் —க. பெள்ளி.

திருச்சி மாவட்டம்—எம். எஸ். வெங்கடாசலம்.

இராமநாதபுர மாவட்டம்—எஸ். அமுதன்.

நெல்லை 'மாவட்டம் — ஆலடி. அருணு,

அண்ணுமலைப் பல்கலைக் கழகம்- கோ. சோமசுந்தரம்.

கேரள மாநிலம் — எம். ஏ. மசூத்,

அந்தந்த மாவட்டத்தைச்சார்ந்த பொதுக்குழு உறுப்பினர்கள் தத்தம் மாவட்ட மாணவர் கழகப் பணிகளுக்காக மூன்று அமைப்பாளர்களை பொதுச்செயலாளரின் அனுமதியுடன் நியமித்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது.

பின்னர் மாணவர் கழகச் சார்பில் தாய்க் கழகத் தேர்தல் நிதியாக ரூபாய் பத்தாயிரம் அளிப்பதென்று முடிவு செய்யப்பட்டு, அந்தந்த மாவட்ட மாணவர் கழகங்கள் அளிக்க வேண்டிய பங்கீட்டுத் தொகையும் நிர்ணயிக்கப்பட்டன.

பின்னர் ஏற்கனவே தீர்மானித்த படி தி.மா.மு.க. பொது மாநாட்டை அடுத்த ஆண்டு சனவரித் திங்கள் வாக்கில் சிதம்பரம் நகரில் நடத்த வேண்டும் என்ற முடிவை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்,

பின்னர் மாணவர் கழகக் கிளைகளை நிறுவுவது குறித்தும்—பதிவு செய்வது குறித்தும் தி. மா, மு. க. பொதுச் செயலாளர் அவர்கள் உரையாற்றினுர்.

இறுதியாகத் தோழர் என், வி. என். சோமு, கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி நவின்றதுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

ஃ

## மதுரை மாநாட்டில் மாணவர் பங்கு

மதுரையில் நடைபெற்ற தி. மு. க. பொது மாநாட்டில் மாணவர்களது பணியினைக் கண்டு அனைவருமே பாராட்டினர்.

13—7—61 அன்று காலை நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் ஊர்வலத்தில் தி. மா.மு. கழகத்தினர் முன்னணியில் நின்று ஆங்கில முழக்கங்களை எழுப்பிச் சென்றனர். Long Live Anna, We Want Dravidanad, North Indian Imperialism Down! Down! என்பன போன்ற முழக்கங்களை எழுப்பி முன்னணியில் ஏறுநடை போட்டனர்.

அதோடன்றி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களை மாணவத் தோழர்கள் முன்மொழிந்தும் வழிமொழிந்தும் பேசினர். குறிப்பாக தி. மா மு க. மாணவர் மாநாடுகளில் பேசிவந்த கேரள மாணவத் தோழர் மசூத் மதுரை மாநாட்டில் மலையாளத்தில் உரையாற்றினுர். அதோடன்றி சிறப்புச் சொற்பொழிவுகளிலும் தி.மா. மு.க.வினர் பங்கு பெற்றனர்.

மாநாட்டின் சிறப்புக்கு மகுடம் அமைத்த கலைக் கண்காட்சியிலும் தி. மா. மு. க.வினர் பெரும் பங்கு கொண்டு பணியாற்றினர்.

## சிறப்புச் சொற்பொழிவுகள் !

——(*)——

தோழர்கள்: எம். எஸ். சிவசாமி 'தென்னகத் துறைமுகங்கள்' பற்றியும் கருநாடக மாநிலத்தைச்சேர்ந்த சம்பங்கி கே. இராமையா, 'கருநாடகத்தில் தி. மு. கழகம்' என்ற பொருள் குறித்தும் (கன்னட மொழியில்); காஞ்சி. கல்யாணசுந்தரம், 'தென்ஞட்டின் முப்பதாண்டின் அரசியல் வரலாறு' குறித்தும்; டி. கே. சீனிவாசன் 'புது வாழ்வு' என்ற பொருள் குறித்தும்; காட்டூர் கோபால் 'திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் நிலை' என்பது குறித்தும்; பெங்களூர் கி. சோழன் 'வளரும் சிந்தனை' என்பது குறித்தும்; வி. எஸ். கோவிந்தராசன் எம்.சி. 'எந்த வழி' என்பது பற்றியும்; அறிவுடை நம்பி 'மொழிச் சிக்கல்' என்பது குறித்தும்; மதுரை கே. எஸ். சந்தானம் எம்.சி. 'இலங்கைத் தமிழர் நிலை' என்பது குறித்தும் வளையாபதி முத்துக்கிருஷ்ணன் 'அரசியலும் கலைஞர்களும்' என்ற பொருள் பற்றியும்; இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், 'கலையும் வாழ்வும்' என்ற பொருள் குறித்தும்; அவைத்தலைவர் இரா. நெடுஞ்செழியன் 'மொழிவழியும் இனவழியும்' என்ற பொருள் குறித்தும்; சேலம் க. இராசாராம் பி.ஏ. 'விடுதலை பெற்ற சிறிய நாடுகள்' பற்றியும்; இரா. செழியன் எம்.எ. 'வடக்கும் தெற்கும்' பற்றியும்; நாஞ்சில் கி. மனேகரன் எம்.எ. 'அயர்லாந்து விடுதலை வரலாறு' குறித்தும்; க. அன்பழகன் எம்.எ., எம்.எல்.எ. 'உலக அரங்கில் நாம்' என்ற தலைப்பிலும், இரெ. இளம்வழுதி எம்.எ., பி.எல். 'திராவிடத்தின் தொழில்களும் வாணிபமும்' என்ற தலைப்பிலும், தோழியர் எஸ். டி. வேலம்மையார் எம்.எ. 'பழங் காலத்து மகளிர்' என்ற பொருளிலும், தோழர்கள் இரத்தினவேல் பாண்டியன் பி.எ.,பி.எல் 'உழவர் பிரச்சினை' குறித்தும், தோழியர் எஸ். பி. சற்குணம் 'அரசியலும் மகளிரும்' என்ற தலைப்பில்ரம், தோழர் கே.ஏ. கிருட்டிணசாமி 'விடுதலை அணியில் மாணவர்' குறித்தும், மேயர் வி.முனுசாமி 'நான்கண்ட வெளிநாடுகள்' என்ற தலைப்பிலும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி எம்.எல்.சி. 'கலைத் துறையும் மறுமலர்ச்சியும்' என்பது குறித்தும் தில்லைவில்லாளன் எம்,எ., பி.எல். 'சட்டமும் சமுதாயமும்' என்ற பொருள் குறித்தும்; மசூத் 'கேரளத்தில் தி. மு. க.' என்ற பொருள் குறித்து மலையாளத்திலும்; இராம. அரங்கண்ணல் 'தாழ்த்தப்பட்டோர் நிலை' குறித்தும்; புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் 'கலையின் மூலம் கழகப் பணி' என்ற தலைப்பிலும், வெ. கிருஷ்ணமூர்த்தி 'இலங்கைத் தமிழர் நிலை' குறித்தும், பாராளுமன்ற உறுப்பினர் இரா. தர்மலிங்கம் 'ஐந்தாண்டுத் திட்டங்களும் திராவிடமும்' என்பது பற்றியும்; முன்ஞள் மேயர் அ. பொ. அரசு மாநகராட்சியில் நாம்' என்ற தலைப்பிலும்' தோழர்கள் டி. கே. பொன்னுவேலு 'ஜனநாயகத்தில் மந்திரிகள்' என்ற தலைப்பிலும்; க. அறிவழகன் 'திராவிடத்தின் வளங்கள்' பற்றியும்; ப. உ. சண்முகம் எம்.எல்.எ. 'ஆட்சியாளரும் ஊழல்களும்' என்ற பொருள் குறித்தும்; அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி 'கைத்தறியாளரின் எதிர்காலம் குறித்தும்; அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் 'இலட்சியப் போராட்டங்களை' விளக்கியும், தொழிற்சங்கச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.எ. 'சட்டமன்றத்தில் நமது பணிகள்' குறித்தும், பொருளாளர் மு. கருணநிதி 'விடுதலை வேட்கை' என்ற பொருள் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

# சிந்தனைக்கு விருந்தளிக்கும் சிற்பக்கூடம் நமது கலைக் கண்காட்சி !

## டாக்டர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. திறப்புரை !

'நாம் நடத்தும் கலைக்கண்காட்சி சிந்தனையைக் கிளறும் சிற்பக்கூடமாக அமைந்திருக்கிறது. காங்கிரசார் நடத்துகிற கண்காட்சி அறிவுக்குப் புறம்பான பொழுதுபோக்காக யிருக்கிறது. நம் கொள்கையில் நாம் கொண்டுள்ள உறுதிப்பாட்டினையும், காங்கிரசாருக்கு கொள்கையிலுள்ள தளர்ச்சியுமே இந்த வித்தியாசத்தைக் காட்டுகிறது'—என்று கலைக் கண்காட்சியைத் திறந்துவைத்த டாக்டர் சத்தியவாணி குறிப்பிட்டார்,



அறிவுக் கருவூலமான கண்காட்சியைத் திறந்து வைப்பதின் மூலம், நாம் நல்ல அரசியல் நாகரிகத்தை—அரசியல் மேம்பாட்டை வளர்த்து வருகிறோம்.

மிருகக் கண்காட்சியை அவர்கள் திறந்துவைத்து சந்தோஷம் கொண்டாடுவதன் மூலம், எத்தகைய அரசியல் நாகரிகத்தைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதை நிரூபிக்கிறார்கள்.

இங்கு திறந்து வைக்கப்பட விருக்கும் கண்காட்சியில் நாம் கூறிய கருத்துக்களைவிட, மாற்றார் கூறும் கருத்துக்களுக்கே அதிக இடமளித்து, சிறப்பு செய்திருக்கிறோம்.

ஏனெனில், உண்மைகளை நாம் எடுத்தோதும்போது மாற்றார் கிண்டலும் கேலியும் செய்கிறார்கள். ஆனால் அவர்களே மதிக்கும் மனிதர்கள் உதிர்த்த உண்மைகளை எடுத்துக்கூறும்போது மாற்றாரின் இதயத்தை தொடவும் வாய்ப்பேற்படுகிறது.

ஆந்திர, கேரள, கன்னடருடன் சேர்ந்து ஒன்றாக வாழமுடியும்—என்று தி. மு. கழகத்தார் கூறுகிறார்களே; ஏன் மற்ற 14 மாநிலங்களுடனும் சேர்ந்து வாழக்கூடாது என காமராசர் சென்றவிடமெல்லாம் சொல்லி வருகிறார்.

உணவு, உடையில் சிறிது வேறுபட்டாலும், முரண்பட்ட நாகரிகமில்லாத திராவிடர்கள் ஒற்றுமையாக வாழமுடியும், இவர்கள் இணைந்து வாழவேண்டிய வாய்ப்புகள் ஏராளமாய் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இதே காங்கிரஸ்காரர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

தென்னக மாநிலங்களில் நிலவும் உணவுப் பற்றாக் குறையைப் போக்க தென் மண்டல கவுன்சில் அமைக்கும்படி இப்போதைய காங்கிரஸ் தலைவர் சஞ்சீவி ரெட்டியாரே கூறியுள்ளார்.

தென் மாநிலங்களின் நன்மையை முன்னிட்டு தென் மண்டலத்திற்கென தனி மின்சார அமைப்பை நிறுவவேண்டுமென தமிழக மின்சார அமைச்சர் ராமையா கூறியுள்ளார்.

தென் மாநிலங்களுக்கென போலீசுத் துறையில் தனி அமைப்புத் தேவையெனவும் அதிகார வட்டாரங்களில் வலியுறுத்தப்படுகிறது.

பாலாறு, சிறுவாணி நீர்ப்பங்கீட்டில் ஏற்படும் தகராறுகள், ஒரு கூட்டமைப்பால் தீரலாம் — என இருதரப்பிலும் கருத்து நிலவுகிறது.

உணவுக்கு, மின்சாரத்திற்கு போலீசுக்கு, தண்ணீருக்கு 4 மாநிலங்களும் ஒன்றாக இருக்க வேண்டுமெனில் பாதுகாப்பிற்கு, ரயிலுக்கு, தபால்—தந்திக்கு ஒற்றுமையாக ஏன் இருக்கக்கூடாது—என இக்கலைக் கண்காட்சி மூலம் காங்கிரஸ்காரர்களைக் கேட்கிறோம். இக்கேள்விக்கு, அவர்கள் ஆம்—என்று பதில் தந்தால் அதுதான் நாம் கேட்கும் திராவிடநாடு.

# "டெல்லியின் டன்கர்க்"

மதுரையில் நடைபெற்ற தி. மு. க. 3-பொது மாநாட்டில் "திபெத் அகதிகளுக்கு தென்னகத்தில் இடம் அளிப்பது கூடாதென்றும், அதை வன்மையாகக் கண்டிப்பதாகவும், இந்தியப் பேரரசும், மாநில அரசுகளும் விவேகத்துடன் நடந்து கொள்ளவேண்டுமென்றும் இல்லையெனில் தி.மு.கழகம் தீவிரமாக எதிர்க்குமென்றும்" தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. மாநாட்டின் முக்கிய தீர்மானங்களில் இதுவும் ஒன்றாகும்.

இலங்கை அரசினரின் அடக்கு முறைக்கொடுமையாலும், அநீதியாலும் வெளியேறிவரும் திராவிட மக்களுக்கு உதவியளிக்கும் மனவளமற்ற இந்தியப் பேரரசும், அந்த அக்கிரமத்தைத் தட்டிக் கேட்கத் துணிவற்ற மாநில அரசும் திபெத் அகதிகளுக்கு இங்கு இடமளிக்க ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருப்பதாகச் செய்திகள் வெளிவந்தன.

ஆனால் கழகப் பொது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் எதிரொலியாக, ஆளவந்தார்கள் தங்களது திட்டத்திலிருந்து 'டன்கர்க்' ஆகிவிட்டதாக செய்திகள் கூறுகின்றன.

அதாவது தீபெத் அகதிகளுக்கு தமிழ்நாட்டில் இடமளிக்க வசதியில்லையென்று தமிழ் மாநில அரசினர் தங்களின் எசமானர்களாகிய இந்தியப் பேரரசுக்குத் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்களாம் !

டெல்லியும் முணுமுணுத்துக்கொண்டு தலையசைத்துவிட்டதாம் !

மதுரையில் நடைபெற்ற பொதுமாநாட்டின் முதல் வெற்றியைக் கண்டு கழகத் தோழர்களும் பொதுமக்களும் பெருமிதம் கொள்வார்களாக !

## அண்ணா தலைமையேற்பு !

——(0)——

அண்ணா அவர்கள், கூடியிருந்த இலட்சோப இலட்சம் மக்களின் கையொலி ஆரவாரத்துக்கிடையே தலைமையுரையாற்ற எழுந்தார்கள். கையொலி ஓய 5 நிமிடங்கள் ஆயின.

உடன் வ. கு. தலைவர் முத்து அவர்கள் மாநாட்டு வரவேற்புக்குழு சார்பில் அண்ணா அவர்கட்கு கைத்தறி சரிகை வேட்டியும், துண்டும் அணிவித்தார்.

அடுத்து முறையே, சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை, திருச்சி மாவட்டச் சார்பில் ஜி. பராங்குசம், கோவை மாவட்டச் செயலாளர் ப. நாராயணன், தஞ்சை மாவட்டச் சார்பில் வை. சுப்பிரமணியம், வ, ஆ. மாவட்ட செயலாளர் இரா. தர்மலிங்கம் எம். பி., சேலம் மாவட்டச்செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன், நெல்லைமாவட்டச் செயலாளர் எம். எஸ். சிவசாமி, இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு, ஆந்திர மாநில அமைப்பாளர் சித்தூர் நரசிம்மன், கருநாடக மாநிலச் சார்பில் வேணுகோபால், பம்பாய் மாநிலச் செயலாளர் புத்தரசு, மகளிர் மன்றச் சார்பில் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., மதுரை சௌந்திரபாண்டியன் படிப்பகத்தார் ஆகியோர் கைத்தறியாடைகளும், சால்வைகளும் மலர்மாலைகளும் அணிவித்தனர்.

கலைஞர்கள் சார்பில் டி. வி. நாராயணசாமி, கைத்தறியாடை யணிவித்து, 'திராவிடப் பரணி' என்ற நூலை அளித்தார். போடி ஏலக்காய் வணிகர்கள் சார்பில் ஏலக்காய் மாலையொன்றும் அணிவித்தனர்.

மாணவர் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம், அண்ணா அவர்கட்கும், மாநாட்டுத் திறப்பாளர் மதியழகன் அவர்கட்கும் இருபெரும் புத்தக மூட்டைகளை அளித்தார்.

## இசையமுது வழங்கியவர்கள்

——()——

இசைமுரசு நாகூர் அனீபாவும் அவரது குழுவினரும் !

திருச்சி இராமசாமி குழுவினர் !

டேப் இராதாமாணிக்கம் - குமாரி லட்சுமி குழுவினர் !

இராணி கரிகாலன் குழுவினர் !

கோயில்பட்டி தேவராஜ்-கௌரி குழுவினர் !

குடந்தை சீனுவாசன்

மன்னை அறிவழகன்

உளுந்தூர்ப்பேட்டை கே. டி. நித்யானந்தம்

அறந்தாங்கி மஜீது

# திராவிட மக்களின் எதிர்காலம் நம் கழகத்தையே நம்பியிருக்கிறது!

## அண்ணாவின் தலைமையில் அதை நிறைவேற்ற முயல்வோம்!

### மாநாட்டுத் திறப்பாளர் மதியழகன் ஆணித்தரமான பேச்சு!

"ஒரு பக்கம் சமூக சீர்திருத்தம் பேசும் நேரு பண்டிதர் இன்னொரு பக்கம் சாதிபேதத்தை வளர்க்கிறார். சமதர்மம் தன் இலட்சியம் என்கிறார் — ஆனால் அவரது ஆட்சியோ பணத்திமிங்கிலங்களின் காலடியில் வீழ்ந்துகிடக்கிறது"

என்று தலைமை நிலையச் செயலாளர் கே. ஏ. மதியழகன் அவர்கள், 14-7-61 அன்று மதுரைப் பொது மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவரைத் துவக்கிவைக்கும்படி வரவேற்புக் குழுத் தலைவர் மதுரை முத்து கேட்டுக் கொண்டார்.

பின் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கமாவது :—

மாநாடு துவங்கும் இந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் முகத்தில் பொலிவிழந்து அமர்ந்திருக்கிற காட்சியைக் காணுகிறோம். அதற்குக் காரணம், கேரளத்திலும் கர்நாடகத்திலும், தமிழகத்திலும், நமது சகோதரர்கள் வெள்ளக் கொடுமையால் இப்போது அவதிப்படுகிற தொல்லைகள்தான்! ஆகவே தி. மு. கழகம் இந்த மாநாட்டுப் பந்தலில் நிதிவசூலித்துத்தர முடிவு செய்கிறது. நீங்கள் நமது உடன் பிறந்தார்களின் தொல்லைகளைத் தீர்க்க நிதி உதவிதர வேண்டுகிறேன்.

வெள்ளத்தை நம்மால் தடுக்க முடியாது; ஆனால் அரசினர் செய்திருக்க வேண்டியவை நிறைய இருந்திருக்கலாம்.

நேற்றைய தினம் அறிஞர் அண்ணா அவர்கள் கருப்பும் சிவப்பும் கலந்த நமது கழகக் கொடியை ஏற்றிவைத்தபோது 'அண்ணா வாழ்க!' என்று முழக்கமிட்டீர்கள். அதன் உட்பொருள் கருத்துக் குருடர்களுக்கு—நம்மை ஏசும் எத்தர்களுக்கு நிச்சயம் புரியாது.

நாட்டிலே தலைவர்கள் மக்களிடம் கையேந்தினால் சிலர் ஓட்டுக்களைக் கொடுப்பார்கள்! சிலர் நோட்டுக்களைக் கொடுப்பார்கள்! ஆனால், அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் நமது உயிர்ச்சீட்டுக்களைக் கொடுக்கவே நாம் இன்று தயாராகிவிட்டோம்!

அறிஞர் அண்ணா அவர்கள் அதிகாரம், ஐசுவரியம், புகழ் இந்த போதைகளில் எதிலுமே மயங்கியதில்லை. ஆகவேதான் அவரது ஒப்பற்ற தலைமையில் இந்த விடுதலைச் சேனை இன்று தயாராகிவிட்டது!

#### விடுதலை பெற்ற 24 நாடுகள்

மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே உலக அரங்கில் 24 சிறு நாடுகள் விடுதலை பெற்று, தனிக் கொடி போட்டு வாழுகின்ற காட்சியை நம் கண்களாலேயே காணுகிறோம்.

அந்த நாடுகளுக்கு நாம் கேட்கும் திராவிடம் எந்தவிதத்திலும் இளைத்ததல்ல என்பதை நாம் ஆதாரங்கள் பலவற்றோடு எடுத்துக்காட்டித்தான் வந்திருக்கிறோம்.

1947-ம் ஆண்டில் விடுதலை பெற்றதற்குப் பிறகு, இந்த நாடு முன்னுக்கு வருவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருந்தன.

உலகிலே போர்க் குழப்பங்கள் இல்லை; திடீர் அபாயங்கள் இல்லை சுமுகமான உறவு நிலையே அரும்பியிருந்தது. இருந்தும் அதைப் பயன்படுத்திக் கொள்ள இந்திய அரசு தவறிவிட்டது.

இங்கே ஏழை ஏழையாகவே இருக்கிறான்; பணக்கார—வாணிப வர்க்கம்தான் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே செல்கிற நிலையை நாம் பார்க்கிறோம்.

இந்த ஆண்டு நடைபெற்ற மேதின விழாவிலே அண்ணா அவர்கள் அழகாகக் குறிப்பிட்டார்கள். இந்த அரசு நமக்கு என்ன கொடுத்தது என்பதற்குப் பதிலை!

அதை மூன்றே வார்த்தைகளில் சொல்வதானால், கடனாளி—நோயாளி—தொழிலாளி—என்பவை தான்!

இந்த நாட்டு காங்கிரசார் மட்டும் சிறப்புடன் வாழ, ஏழைச் சமுதாயம் மட்டும் மேற்கண்ட பட்டங்களைச் சுமந்து வறுமைப் படுகுழியில் வீழ்கின்ற நிலையை வரப்பிரசாதமாகப் பெற்றிருக்கிறது.

பண்டித நேரு இன்று இரட்டை வேடங்களில் வாழ்கிற விசித்திரமான நிலைமை அரும்பிவிட்டது.

சமீபத்தில் ஜபல்பூர் பல்கலைக் கழக மாணவர்களிடையே அவர் பேசும்போது, "மாணவர்களே! நீங்கள் உங்களையும் அறியாது ஒரு மாயையில் சிக்கிக் கிடக்கிறீர்கள்! ஜாதிக் கொடுமையெனும் அதனின்று நீங்கள் விடுதலை பெற்றாக வேண்டும்!" என்று சமூக சீர்திருத்தவாதியாகப் பேசுகிறார்; ஆனால், தேர்தலுக்கு ஆள் நிறுத்தும் போதோ, இடத்திற்குத் தகுந்தாற்போல், தேவர், நாடார், முதலியார் என்ற ஜாதிப் பாகுபாட்டை ஏற்படுத்துகிறார்.



ஆங்கிலத்தை ஒழித்து இந்தியைத் திணிப்பதுதான் அரசினரின் மறைமுக எண்ணம் என்று நன்கு புரிகிறது; ஆனால் பண்டிதரோ, ஆங்கிலம் அவசியம் தேவையே என்றும் சொல்லத் தயங்கவில்லை.

டெல்லி சர்வாதிகாரமாகவே நடக்கவேண்டும் என்று அவர் சொல்லாவிட்டாலும், செயலில் காட்டி வருகிறார்! ஆனால் அவரது வாயே, மாநிலங்களுக்கு அதிக அதிகாம் தருவதை வரவேற்பதைப் போல முணுமுணுக்கிறது!

சமதர்மமே தன் இலட்சியம் என்று வாய்ப்பறையடிக்கிறார். ஆனால், அவர் ஆட்சி பணத்திமிங்கிலங்களின் காலடியில்—இரும்புப் பெட்டிகளின் பாதத்திலே கிடக்கிற காட்சியைக் காணுகிறோம்.

மூஸ்லீம் லீக் ஒரு வகுப்பு வாத இயக்கம் என்று கண்டிக்கிறார். ஆனால் அந்த வகுப்பு வாதத்தை ஆதரிப்பவராக முகம்மது கோயா என்பவரை கேரளத்தில் சபாநாயகராக்குகிறார்!

மொழிவழி மாநிலத்தை ஆதரித்து மராட்டியத்தையும், குஜராத்தையும் பிரிக்கிறார். ஆனால், தமிழென்றும் தெலுங்கென்றும் கன்னடமென்றும் மலையாளமென்றும் மொழி வளர்ச்சிக்காகப் பேசக் கூடாதென்று கூறுகிறார்.

நிலச் சீர்திருத்தம் கொண்டு வருவதில் தீவிரமாக இருப்பவரைப் போல நடிக்கிறார்; அதே நேரம் நிலத்திலிருந்து உழவர்களை வெளியேற்றுவதற்கு சட்டத்தைப் போடுகிறார்!

சோசலிச சமுதாயம் என்றும், தொழிலாளர்களே இந்த நாட்டின் கண்கள் என்றும் பேசுகிறது வாய்! ஆனால், உரிமைக்காக அந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதை அழிக்க நீட்டுகிறார் சட்டத்தை!

இப்படிப்பட்ட முரண்பட்ட போக்கிலே நின்று தத்தளிக்கிறார் நேரு! காரணம், அவரிடமோ அவரை அண்டிக் கிடக்கும் கூட்டத்திடமோ நிர்வாகத் திறனும் நேர்மைச் சுத்தமும் இல்லாத பண்புதான்!

நேருவைப்பற்றி ஒரிசாவின் முன்னாள் முதலமைச்சர் ஹரிகிருஷ்ண மேதாப் ஒரு கட்டுரை தீட்டியுள்ளார் "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" என்ற ஏட்டில்!

"நேருவின் ஆட்சிபீடத்தைச் சுற்றி பதவிச் 'சூதாடிகள் மொய்த்துக் கிடக்கிறார்கள்! அவர் தன் சொந்த செல்வாக்கை இழந்தார். பணமும் செல்வமும்தான் ஆட்சியை நடத்தும் கருவிகளாகிவிட்டன! ஏழை வாழும் நம்பிக்கையை இழந்துவிட்டான்!

"தென்னகத்தைப் பொறுத்தவரை வரிக்கொடுமையாலும், கவனிப்பற்ற தன்மையாலும், மானத்தையே பறிக்கும் கேடுகெட்டச் செயல்களாலும் பண்டிதரின் தர்பார் சதி செய்திருக்கிறது!"

—என்று அதில் காணப்படுகிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில், அவர் கடைப் பிடித்துவருகிற மௌன நிலைமையைக் கண்டு உலகமே கவலைப்படுகிறது.

லண்டனிலிருந்து வருகிற 'டெய்லி டெலிகிராப்' என்ற ஏடு இலங்கை சர்க்கார் நடத்தும் கொடுமையைப் பற்றித் தீட்டியது. இலங்கை புத்தபிச்சுகள் 1000, 2000 தமிழர்களைக் கொலைசெய்தார்கள்; குண்டுகளை வீசி இராணுவத்தினர் வெறியாட்டம் போட்டார்கள்-என்று எழுதிக் காட்டியது.

"மான்செஸ்டர் கார்டியன்" என்ற ஏடு, பண்டாரநாயகா சிங்களவருக்குச் சாதகமாக தமிழர்களை வதைக்கிறார்—என்று எழுதியது.

உலகத்தின் ஏடுகள் இப்படி எழுதிய நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் ஐ. நா.வின் பொதுக்காரியதரிசி ஹாமர்ஷீல்டுக்குத் தந்தி கொடுத்தார், இலங்கைத் தமிழர் அறப்போர் பற்றி!

ஆனால், பண்டித நேருவோ ஒரு கூடை மாம்பழத்தை திருமதி

(10ம் பக்கம் பார்க்க)

# அரசியல் —|— பைத்தியம் —— 'கவிஞர் !'

கவிதை வேறு, அரசியல் வேறு, இந்த இரண்டின் இடையே புதிதாக ஒன்று புகுந்துகொண்டு இப்போது இல்லாத குழப்பங்கள் 'இழுபறி' படுகின்றன.

சுண்ணாம்பு ஒரு பொருள்; பாக்கு பிரிதொரு பொருள், இந்த இரண்டும் சேர்ந்தால் புதிய ஒரு பொருள் சேர்கிறது. அதுதான் சிவப்பு: சிவப்பு என்றால் நல்ல சிவப்பும் அல்ல. அதாவது சிவப்பு மாதிரி, இல்லையா?

அதுபோல்தான் இதுவும்.

வர வர நிலைமை முற்றுகிறது. வாய் கண்டபடி பேசுகிறது; கை வந்தபடி எழுதுகிறது. எங்கும் இல்லாத கட்சியை கண்டு விட்டாற்போல 'முகப்பு எழுத்து' போடுவதிலிருந்து 'முகாரி' பாடுவது வரை, எல்லாவற்றையும் மேலே இழுத்துப் போட்டுக் கொண்டு 'சூறுவளி சுற்றுப் பிரயாணம்' நடத்துகிறார். **'சொந்தத் திறமையுள்ள'** கண்ணதாசன்!

தடித்த எழுத்துக்களில் போட்டிருப்பதற்கு பொறுப்பு வேறு எவருமல்ல—திருவாளர் கண்ணதாசனேதான்!

தென்றல் பத்திரிகையிலேயே 'சொந்தமான திறமையிருந்ததால் தான் கண்ணதாசன் கவிஞரானார்' என்ற சேதியை 'பார்டர்' கட்டி போடுவதென்றால் அது வேறு யாராக இருக்க முடியும்? தூக்கி விட கை இல்லாதபோது 'தன் கைதானே தனக்கு உதவி?'

நடிப்புக்கு இலக்கணம் வகுத்தால் திராவிட நாடு கிடைத்து விடுமா என்று கேட்கிறது திருவாளர் சொந்தத் திறமை! ஆனால் கருப்புக் கொடி காட்டுகிறேன் என்று பெங்களூருக்குச் சென்று விட்டால் நிச்சயமாக திராவிட நாடு ஏன், தன்னாட்சி தமிழகம் கூட கிடைக்காது!

அண்ணா நடிகரும்கூட. நடிப்பு பற்றி அவர் சொல்வார். நீ யார் அதைக் கேட்க? என்ன தகுதி இருக்கிறது உனக்கு? அப்படி நீ என்ன தனி அரசியல் ஞான வெள்ளமா? பத்மினியை அழைத்து வைத்து, நெளிந்து நெளிந்து அரை மணி நேரம் பாராட்டிப் பேசினாயே, அது மட்டும் என்ன? 'கலை அரசி' என்று பட்டம் வழங்கினாயே அது தன்னாட்சி தமிழகத்தின் அந்த நாள் திட்டமா?

அதற்குள் 'இல்லற ஜோதி' நாட்களை நாங்கள் மறந்தா விடுவோம்? நீ மறக்கலாம், அடிக்கடி சபல புத்திக்கு ஆளாவதால்!

கவிஞனுக்கு நிதானம் வேண்டாம் என்று கூட நீ பேசலாம்! ஒன்பது பிள்ளை 'பெற்ற' ஒரு தகப்பனுக்கு நிதானம் வேண்டாமா! ஐயோ பரிதாபமே!

சினிமா தயாரித்து விட்டு அரசியல் பேசலாமா? திரைப்பட பாட்டு எழுதிவிட்டு அரசியல் பேசலாமா? எம். ஜி. ஆரின் படத்தைப் போட்டு 'நம் குடும்பத்தின் திடமான பிள்ளை' என்று புகழ்ந்து எழுதிவிட்டு, இன்று நீ கோழையாகி விட்டாய் என்றால் இயக்கம் என்ன செய்யும்?

'சத்தம் போட்டால் நடிப்பாகி விடுமா? புரட்சி நடிகரைப் பாருங்கள்! என்ன புன்சிரிப்பு, என்ன லாவகம்! என்ன நளினம்!' என்று கை வலிக்க எழுதிவிட்டு, 'உன்னை குழியிலே வைக்க' என்று சிவாஜியை படம் போட்டுக்காட்டி 'பாதுகாபட்டாபிஷேகம்' வாங்கிக் கொண்டு, இன்று 'சிவாஜி கணேசன் எங்கள் கட்சி, என்று மேடையிலே முழங்குகிறாயே, அவர் சொல்லாமலேயே நீயே சொல்கிறாய்! அந்தரங்க காரியதரிசியா நீ? அவர் புத்திசாலி. அந்த மோதலை நாடு மறந்திருக்காது என்பது சிவாஜிக்கு தெரியும்!

அப்படியே சிவாஜி உன் கட்சியாகி விட்டால் 'தன்னாட்சி தமிழகம்' கிடைத்துவிடுமா? அரசியல் மேடையிலே நீ எப்படி இதைச் சொல்லலாம்! இந்த லட்சணத்தில் அண்ணாவை குறை சொல்கிறாய்!

உன்னை நினைத்தால் சில சமயம் பரிதாப உணர்ச்சிகூட மேலிடுகிறது! மனிதனுக்கு அநியாயமாக புத்தி வளர்ந்துவிட்டது! இப்போது கூட எங்களுக்கு அதிசயம் ஒன்று எஞ்சியிருக்கிறது!

உன்னைப் போன்ற பிரமாண்டமான புத்திசாலியை எப்படித்தான் இயக்கம் இத்தனை நாட்கள் தாங்கியிருந்ததோ, தெரியவில்லை.

பாவம் சம்பத்!

**-சேரன்தம்பி**

---

## தொழிற்சங்க இயக்கத்திலே நமது பணி . . .

பல ஆண்டுகளாக பாதுகாப்பற்ற பெட்டித் தொழிலாளர்களுக்கு, மறியல் போராட்டம் — நடவடிக்கைகள் மேற்கொண்டு லீவ் வசதி — தொழில் நிரந்தரம் — போனஸ் பெறும் தகுதி இவைகளைப் பெற்றுத் தந்துள்ளோம்.

ஆட்டோ ரிக்சா தொழிற்சங்க சார்பில், சங்கத்தின் உறுப்பினரான இரண்டு டிரைவர்கள் மீது இருந்த வழக்குகளை வெற்றிபெறச் செய்ததும்—தொழில் சுமுகமாக நடைபெற டிரைவர்கள் கட்டுப்பாடாக ஒற்றுமையுடன் அந்தந்த தங்கும் நிலையங்களில் ஒருவர் பின் ஒருவராக நின்று தொழிலை மேற்கொள்வதற்கான வகைகளை கட்டுப்பாட்டுணர்விற்கு கொண்டு வந்து போட்டா போட்டியைத் தடுத்தும் கோவை நகரத்தில் ஆட்டோ ரிக்ஷா நிறுத்துமிடங்களை அங்கீகரிக்கவும் — அதிகப்படுத்தித் தரவும் — பிரயாணிகள் வண்டியில் தவறி விட்டுவிட்ட தங்க வளையல்கள்—ரொக்கப்பணம் சில்லறைச் சாமான்கள் அனைவற்றையும் பாதுகாத்து உரியவர்களிடத்தில் சேர்க்கவுமான பணிகளில் ஈடுபட்டது.

அணைக்கட்டுத் தொழிலாளர் சங்க சார்பில், ஆளியார் பகுதியில் மருத்துவ மனையில் எல்லா நேரத்திலும் மருத்துவ சிகிச்சை பெற்றுத் தரவும் பஸ் நிலையம்—சுகாதார வசதி—தற்காலிகத் தொழிலாளரை நிரந்தரப் படுத்தும் முயற்சியிலும் நியாயவிலைக் கடையில் காண்டிராக்ட் தொழிலாளர்கட்கும் அரிசி விநியோகிக்கும் நிலைக்கும்—நிறுத்தப்பட்ட தினக்கூலித் தொழிலாளிக்கு வேலையை மீட்டுத் தந்ததுமான பணிகளைப் புரிந்துள்ளோம்.

பொதுத் தொழிலாளர் முன்னேற்ற சங்க சார்பில்—சாயப்பட்டறைத் தொழிலாளிகள்—சிறுகடைத் தொழிலாளர்கள் நகராட்சி மன்றத் தொழிலாளிகள் ஆகியோருக்கு அவ்வப்போது ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்தும் எவ்வித வசதியும் இல்லாதிருந்த டிரை கிளீனிங் தொழிலாளர்களுக்கு லீவ் வசதி—சம்பள நிர்ணயம் வருடாந்திர உயர்வு, கிளீனிங் தொழிலாளர்கட்கு காலணி—வேலை நிரந்தரம் இவைகளைப் பெற்றுத் தந்தது. வேலையிழந்த வேஸ்ட்காட்டன் கம்பெனியில் நிறுத்தப்பட்ட தொழிலாளிக்கு நஷ்ட ஈடாக ரூபாய் 300ம் இரும்புக் கடையில் நிறுத்தப்பட்ட தொழிலாளிக்கு நஷ்ட ஈடாக ரூபாய் 431ம் பேக்கரியில் நிறுத்தப்பட்ட தொழிலாளிக்கு நஷ்ட ஈடாக ரூபாய் முப்பதும் பெற்றுத் தந்தது.

எவ்வித வசதியுமில்லாதிருந்த கோவை—திருப்பூர் பகுதி பனியன் தொழிலாளர்களுக்கு எல்லாவித வசதிகளும் கிடைக்கப்பெற ஆவன புரிந்தது.

என்ஜினீயர்ஸ் தொழிலாளர்கட்கு சம்பள போர்டு அமைக்க வேண்டியதற்கு வலியுறுத்தியது.

டெக்ஸ்டூல் தொழிலாளர்க்குரிய சம்பள உயர்வு பஞ்சப்படி உயர்வு சிப்பந்திகளது சம்பள உயர்வு—பஞ்சப்படி உயர்வு ஆகியவற்றிற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இறந்துபோன தொழிலாளிகள் மாற்றுச் சங்கத் தவரென்றாலும் முதலாவதாக நின்று நிதி திரட்டுவதிலும் சர்வசங்க சார்பில் குடும்ப நிவாரண நிதி திரட்டுவதிலும் ஈடுபட்டது அவ்வப்போதுஏற்படும் சகல பிரச்சினைகளையும் உடனுக்குடன் முடித்தது. ஈரோடு நகர சுத்தித் தொழிலாளர்கட்கு ஊதிய உயர்வு கிடைக்கவும் — வீட்டு வசதி செய்து தரவும் மழையால் பாதிக்கபபட்ட நேரத்தில் வீடு பராமரிப்புக்கு வழி செய்ய நடவடிக்கை மேற்கொண்டதுமான பல்வேறு வகைகளில் இடையறாது பணியாற்றியுள்ளோம்.

மேற்கண்ட அத்தனை சாதனைகளும் மிகக் குறுகிய காலத்திலேயே நாம் பெற்றவை நமது தோழர்கள் அயராத உழைப்பும் உண்மையான தொண்டுள்ளமும் தான் இந்த வெற்றிக்கு காரணங்களாகும். மேலும் பலாத்கார வெறியைக் காட்டியே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களைக் கட்டுக் கோப்பில் வைத்திருந்த மாற்றுச் சங்கங்கள் மத்தியில் — நமது தோழர்கள் பல நேரங்களில் கடுந் தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டாலும் தளராது பாடுபட்ட வினையின் பலனே இன்றைய வளர்ச்சிக்குரிய அடிப்படையாகும்.

குண்டர்களை வைத்து தொழிற் சங்கம் காக்கும் மற்றவர் கனவு!

அல்லது

தொண்டர்களை வைத்து தூய எண்ணமுடன் பாடுபடும் நாமா!

அடிப்பவர்களா!

அல்லது

அறிஞர் அண்ணா கூறியது போல அடங்கியிருந்து ஐக்கியம் காக்கும் நல்ல பண்பாளர்களா!

தாக்குபவர்களா!

அல்லது தாங்குபவர்களா!

பலாத்கார வெறிப்பாதையா!

அல்லது பகைபோக்கிப் பண்போடு பழகும் பகுத்தறிவுப் பாதையா!

இவைகளை அடிக்கடி தொழிலாளர் நெஞ்சங்களில் கேள்விகளாக எழுப்பினோம்! தொழிலாளர்கள் சிந்தித்தனர். அதன் பலன் மாற்றார் தளரவும் நாம் வளரவுமான நிலையில் உள்ளோம்.

ஆரம்பத்தில் கழகத் தொழிலாளர்கள் மட்டுமே நம்மை நாடினார்கள். ஆனால் நமது நாணயமான நடவடிக்கைகளும், போராட்டத் தருணங்களில் கட்சி பேதம் மறந்து கூடிப்போராடும் தூய உணர்வையும்; ஒழுங்கான நடத்தையையும் பார்த்து மாற்றுக் கட்சியினரும் நம்மை நாடி வந்து கொண்டே இருக்கின்றனர்.

எனவே குறுகிய காலத்திலேயே ஏற்றமிகு நல்வாய்ப்பை உருவாக்கியுள்ள நமது கழகத் தொழிற்சங்கங்கள் சட்ட ரீதியாகப் போராடித் தொழிலாளர் பாதுகாப்பு நலன் பெறும் நடவடிக்கையிலே விறுவிறுப்புக் காட்டவும்— விடுதலை வெற்றிக்கு தொழிலாளர் அணியில் திரண்டுள்ள உத்வேகத்தை இம் மாநாட்டுத் தீர்மானங்கள் மூலம் புதிய வலிவும், பொலிவும் ஏற்படுத்தியிருக்கிறோம்!

அந்த மகத்தான சாதனைதான் திராவிட தொழிலாளர் முன்னணி!

தொழிலாளர் ஒற்றுமை ஓங்கட்டும்!

தொழிற்சங்க ஒற்றுமை நிலவட்டும்!

சங்க மாறுபாடு இருப்பினும் கோரிக்கையை யொட்டிக் கை கோர்த்திடுவோம்!!

பகை போக்கி விடுதலைப் பாதையில் இணைந்தாலொழிய திராவிடத் தொழிலாளி வர்க்கம் நிரந்தர நலனை அடைய இயலாதென்ற உண்மையினை ஊர் ஊராய் உரைப்போம்!

# படித்தறிந்த கருத்துக்களின்படி பண்டித நேரு நடக்கட்டும்!

## பரவிவரும் விடுதலை உணர்வை தடுக்காமல் இருக்கட்டும்!

### மதுரை தி. மு. க. 3-வது பொது மாநாட்டில் அண்ணா அவர்களின் முடிவுரை

"நான்கு நாட்களும் மிகச் சிறப்பாக நடைபெற்ற நமது பொது மாநாடு, இன்று முடிவடையும் இறுதிக் கட்டத்தில் இருக்கிறது எனது பேச்சுக்குப்பிறகு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனின் 'சுமைதாங்கி' நாடகத்தோடு மாநாடு முடிவுடைய இருக்கிறது.

இந்தச் சீரிய முயற்சி வெற்றிகரமாக முடிவுறும் நிலையில் இருந்தாலும், இந்த மாநாட்டிலே தஞ்சை திருச்சி மாவட்டைத்தைச் சார்ந்தவர்களும், தெ. ஆ. மாவட்டத்தின் ஒரு பகுதியினரும், கோவை மாவட்டத்தின் ஒரு பகுதியினரும், கருநாடக, கேரளமாநிலத்தைச் சேர்ந்த சில பகுதியினரும் வந்து கலந்து கொண்டு சிறப்பிக்க முடியாமல் போய்விட்டது.

இந்த மாநாட்டை இங்கு கூட்டுவதற்கு எடுத்துக் கொண்ட காலம் போதுமானதாக இல்லை என்றாலும், நம்முடைய மதுரைத் தோழர்கள் எவ்வளவு குறைந்தகாலம் கொடுத்தாலும் காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த மாநாடு அமைந்திருக்கிறது.

இந்த மாநாட்டை நடத்துவதற்குத் துணையாக, தஞ்சை, திருச்சி மாவட்டத் தோழர்கள் உடனிருந்து சிறப்பாகப்பணியாற்றுவார்கள் என்ற நம்பிக்கையில்தான் காலம் குறைந்த போதிலும்— மாநாட்டைநடத்தத் துணிந்தோம். ஆனால் வெள்ளம் காரணமாக, எதிர்பார்த்தபடி அந்த மாவட்டத் தோழர்கள் மாநாட்டில் பங்கு கொள்ள முடியவில்லை. எனினும், நாமெல்லாம் பெருமைப்படத்தக்க அளவில் மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது.

இருபத்துநான்கு மணி நேரமும் மாநாடு—என்று ஏனையோர் உணரும் அளவுக்கு, பகல் முழுவதும் சொற்பொழிவுகளும் விடியற்காலை 3 மணிவரை நாடகமுமாக இந்த நான்கு நாட்களும் நடைபெற்றிருக்கின்றன.

நேற்று இரவு 2 மணிவரை நான் மாநாட்டுப் பந்தலில் இருந்து அங்கும் இங்கும் சுற்றிப்பார்த்தேன்; பல்லாயிரக்கணக்கானவர் நாடக அரங்கில் இருந்து நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்; அதே நேரத்தில், மற்றவர்கள் இந்தப் பந்தலிலே படுத்துக் கொண்டிருந்த காட்சியையும் கண்டேன்.

இங்கே படுத்திருந்தவர்கள் அத்தனைப்பேரும் மாநாட்டுக்காகவே வந்திருந்தவர்கள் என்றாலும், போர்ப்படையினர் கரியோடும் பரியோடும் வந்து போர்நடத்திவிட்டு இரவு நேரத்தில் அலுத்துப் படுக்கும் காட்சியைப்போல் இருந்தது.

இவ்வளவு உற்சாகப் பெருக்கும், உணர்ச்சி வெள்ளமும் ஏற்பட்டுள்ளதைக் கண்டு பெருமிதப்பட்டேன். இதற்காக ஓயாது உழைத்தவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

நான் மிகமிகச் சாமான்யக் குடும்பத்தில் பிறந்தவன், எனது குடும்பப் பெருமையையோ, பணவலிவையோ நம்பி என்னை நீங்கள் தலைவனாக்கவில்லை. உங்களுடைய ஆற்றலினால்தான் நான் இந்த வலிவினைப் பெற்றிருக்கிறேன். இலட்சக் கணக்கான தம்பிமார்களும், தங்கைமார்களும் தங்கள் இதயத்தை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். நீங்கள் காட்டும் நம்பிக்கைக்கும் மரியாதைக்கும் ஈடாக உடல் வளம் எனக்கு இருக்குமா என்பதற்கு உறுதியில்லை. ஆனால் உற்சாகம் பற்றிய ஐயம் குறுக்கிடவில்லை.

நாம் மிகமிகச் சாமான்யர்கள்; ஆனால் நாம் எடுத்துக் கொண்டுள்ள காரியம் பெரிது—இந்த நாட்டை மீட்கும் காரியம்! வெடிகுண்டினால் மட்டும் பெறக் கூடிய வெற்றியை நல்லெண்ணத்தால் பெற முயலுகிறோம். படை நடத்தினால் மட்டுமே அடையக் கூடிய வெற்றியைமாநாடுநடத்தி அடைய முயலுகிறோம். நரம்பு புடைக்க இரத்தம் கொதிக்கச் செய்து உங்களையெல்லாம் விடுதலை வீரராக்கலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நமது முயற்சியின் வெற்றிக்கு அறிகுறியாக இந்த மாநாடு அமைந்திருக்கிறது.

எனது மதிப்பிற்குரிய மாற்றுக் கட்சித் தோழர்கட்கும், நம்மைப் பற்றி அக்கறையற்றவர்கட்கும் பத்திரிகைக்காரர்கட்கும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்—இந்த மாநாட்டைப் பார்த்தால்வினாடிக்கு வினாடி, வேளைக்கு வேளை, தி. மு. கழகம் வேகமாக வளர்ந்துவருவதைக் காணலாம். ஒரு அரைடசன் பேச்சாளர்கள் போய்விட்டதால், கழகத்திலிருந்து யார்யாரோ போய்விட்டார்கள்—கழகம் கலகலத்துவிட்டது என்றெல்லாம்நாட்டிலே பிரசாரம் செய்தார்கள். இந்த நான்கு நாட்களாகத் திருப்பரங்குன்றத்திலும் மதுரையிலும் ஒவ்வொரு தெருவிலும் ஒளி வீசும் கண்களோடு கழகம் வளர்ந்துள்ள காட்சிகளைக் கண்டோம். இதிலிருந்தேனும் கழகத்தின் வலிமையை மாற்றுக் கட்சியினரும், மனிதாபிமானம் உள்ள பத்திரிகையாளரும் உணரவேண்டும்,

இந்த மாநாட்டுக்கு நகரிலிருந்து வந்தோரைவிட, கிராமப்புறங்களிலிருந்து வந்திருப்போர் தொகை அதிகமாகத் தெரிகிறது. துணி மூட்டைகளையும் தகரப் பெட்டிகளையும் ஓலைப்பெட்டிகளையும் எடுத்துக் கொண்டு வந்தவர்களையும், மாட்டு வண்டியிலே வந்தவர்களையும்மலர் சூடாத கூந்தலைப் பிணைத்துக் கொண்டை போட்ட தாய்மார்களையும் ஏணைகட்டி தங்கள் குழந்தைகளை உறங்கவைத்துக் கொண்டிருப்போரையும் இங்கே காண்கிறோம். இதிலிருந்து. தி. மு. கழகம் நகரைவிடக் கிராமத்தில்தான் அதிகச் செல்வாக்குப் பெற்று வளர்ந்துவருகிறது என்பதை உணரலாம்.

மற்றொரு உண்மையும் இந்த மாநாட்டின் மூலம் வெளிப்பட்டிருக்கிறது. ஆந்திரத்திலிருந்தும், கேரளத்திலிருந்தும், கருநாடகத்திலிருந்தும் வந்துள்ள தோழர்கள், தமிழ்ப் பேச்சாளர்களுடன் போட்டி போட்டுக்கொண்டு அவரவர் மொழியிலே—தமிழைவிட எழுச்சிமிக்க நடையிலும், உணர்ச்சியுடனும் பேசியதைக் கேட்டோம். கருநாடகத் தோழர்களின் கனிவுரையையும், ஆந்திரத் தோழர்களின் அறிவுரையையும், மலையாளத் தோழர்களின் மாண்புரையையும் தமிழர்கள் கேட்டார்கள்.

சவூதி அரேபியாவிலுள்ள ஒரு தோழரும், சிட்டகாங் பகுதியிலுள்ள சில தோழர்களும் மாநாட்டுக்கு வருவதாக எனக்குக் கடிதம் எழுதிவிட்டு வந்திருக்கிறார்கள். ஒரு ஐந்தாறு தோழர்கள் ஐதராபாத்தில் கழகம் துவக்குவதற்கு என்னை அழைத்துச் செல்ல வந்திருக்கிறார்கள். திராவிட நாடு முழுவதிலிருந்தும் பிரதிநிதிகளும், பேச்சாளர்களும் வந்து கலந்துகொண்டிருக்கிறார்கள்.

தி. மு. கழகம் வளரவேண்டிய முறையில் — வளர வேண்டிய — நேரத்தில்—வளரவேண்டிய அளவில் வளர்ந்து வருகிறது.

முதுபெரும் கிழவர் திருவாளர் மேடப்பா அவர்கள், இங்கே நமது மேடையில் அமர்ந்திருப்பது, நமக்கெல்லாம் பெருமையும் புது நம்பிக்கையும் தருவதாகும். நீங்களெல்லாம் என்னை, 'அண்ணா' என்று அழைக்கிறீர்கள், நான் 'அண்ணா' என்று அழைக்க யாருமில்லாதிருந்தார்கள்; இப்போது எனக்கு ஒரு அண்ணா கிடைத்திருக்கிறார். அதுவும் கருநாடகத்திலிருந்து எனக்கு ஒரு அண்ணா கிடைத்திருப்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

திரு. மேடப்பா அவர்கள், 'எனக்கு வாதாடிப் பழக்கமில்லை; தீர்ப்பளிக்கப் பழகியவன்' என்று சொன்னார். அவையடக்கத்துக்கு அவர் அப்படிச் சொல்லியிருக்கக் கூடும். அவர் வாதாடும் கலையில் பயிற்சி பெற்ற பின்னர்தான், நீதிபதியாக அமர்ந்தார்.

அவரிடம் நான் தெரிவித்துக் கொள்கிறேன் — 'ஐயா, எங்கள் வழக்கு மிகச் சாமானியமானது; அழுகுரல் கேட்டுத் தாய், தன் குழந்தைக்குப் பால் கொடுப்பதும், பழுத்த கனி தரையில் விழுவதும் எப்படி இயற்கையோ, அதேபோல் பக்குவம் பெற்ற மக்கள் விடுதலை பெறுவதும் இயற்கை'—என்று!

திரு. மேடப்பா அவர்கள் வழக்காடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதைப்போல, இங்கே நமது தோழர்களின் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டிருந்தார்; உணர்ச்சிகளைப் பார்த்தார், தீர்ப்பளிக்கும் நிலையில், 'திராவிடத்தின் விடுதலைக்கு வாதம் தேவையில்லை' என்று சொல்லி, இந்திய ஏகாதிபத்தியவாதிகளுக்கு நல்வழிகாட்டியிருக்கிறார்.

அவர் இன்று நம்மிடமிருப்பதால், கருநாடகத்தில் காலூன்றியிருக்கும் நாம், வீரநடை போட உறுதுணையாக இருப்பார் என்று நம்புகிறேன்.

மலையாளத்தில் பேசிய தோழர்கள் என் இளமைப் பருவத்தைக் கவனப்படுத்தினார்கள். அவர்கள் பேசிய மொழி மற்றொரு மொழியினருக்கு நன்றாகப் புரிந்தது. மலையாளம், ஆதித் தமிழ்மொழியில் கிளைத்ததுதான் என்பதன் பொருள் இப்

### தொழிற்சங்கப் பிரதிநிதிகள்

——(—)——

கழக சார்புடைய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கூட்டம் 11—7—61 அன்று இரவு நகரத்தார் விடுதியில் தொழிற்சங்கச்செயலாளர் க. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. நூற்றுக்குமேற்பட்ட தொழிற்சங்கப்பிரதிநிதிகள் இந்த ஆலோசனைக்கூட்டத்தில்கலந்துகொண்டு எதிர்காலஆக்கப்பணியினை பற்றி விரிவாக விவாதித்து, அதற்கான பல முடிவுகளை எடுத்தனர். கழக சார்புடைய மத்திய தொழிற்சங்கத்தை அமைக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது இக்கூட்டத்தின் ஒருமித்த முடிவுகளில் ஒன்றாகும்.

# குவாய்ட் தனி அரசாக மாறும் போது குன்றாத வளங்கொண்ட திராவிடத்துக்குத் தடை ஏன்?

போது எல்லோருக்கும் விளங்கும் என எண்ணுகிறேன். மலையாள மொழிப் பேச்சுக் கேட்டு, என்னையும் அறியாது இளைஞனாகவே இருந்தேன்.

ஆந்திரத் தோழர்கள் தெலுங்கில் பேசியது, அப்பகுதியில் எழுச்சியை வளர்க்கப் பயன்படும் என்ற நம்பிக்கையையூட்டியுள்ளது.

மாற்றுக் கட்சியினரும், ஆட்சியாளரும், பத்திரிகையாளரும் இந்த மாநாட்டின் மூலம், மற்றொரு உண்மையையும் உணர்வார்கள் என நம்புகிறேன். இந்த நான்கு நாள் மாநாட்டில் ஏறக்குறைய 100 பேர் வரை பேசியுள்ளார்கள். அவர்கள் அத்தனைப் பேருடைய பேச்சிலும் ஒரு சிறு ஆபாசம் இருந்தது என்று சொல்லமுடியுமா? வகுப்புத் துவேஷமோ, காட்டுமிராண்டித் தன்மையோ பிடிக்காத செயலோ இருந்ததாகக் கூற முடியுமா? ஆபாசமாக எதிர்த்துப் பேசியதாகவோ, தரக்குறைவான சொற்களோ இருந்தனவா என்று—எனக்குச் சொல்லவேண்டாம்—உங்கள் நெஞ்சத்திற்கு நீங்களே சொல்லிக்கொள்ளுங்கள் என்று அவர்களை நான் வேண்டிக் கொள்கிறேன். கழகத் தோழர்கள் எவ்வளவு தூரம் ஆபாசப் பேச்சிலும் வன்முறையிலும் ஈடுபட்டிருக்கக் கூடும் என்பதை உங்கள் நெஞ்சத்திற்கு நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள் என்று அவர்களை நான் வேண்டிக் கொள்கிறேன். உங்கள் நெஞ்சத்துக்குத் திருப்தி தந்தால் போதும்!

தேர்தல் பற்றிய தீர்மானம் வந்த போது எழுச்சியைக் கண்டோம். 1962ம் ஆண்டைய பொதுத் தேர்தலில் நாம் எந்த அளவு வெற்றி பெறுகிறோமோ அதைப் பொறுத்தே அடுத்த 15 ஆண்டு அரசியல் நிலை இருக்கிறது. இன்று நாம் எடுத்துக் கொண்டுள்ள சூளுரை 1962ல் அதிக வெற்றியை நிலை நிறுத்த வேண்டும்.

நமது தாய்த்திருநாடு விடுதலை பெற, 1962ல் பாடுபடவேண்டும்.

வெளிநாட்டுத் தலைவர்களும், நிருபர்களும் என்னைப் பார்த்துக் கேட்பதெல்லாம், நமது மேயர் முனுசாமியைக் கேட்பது போலத் தான். சில நாட்களுக்கு முன்பு சென்னை 'இந்து' பத்திரிகை அலுவலகத்திலிருந்து என்னை ஒருவர் தொலை பேசி மூலம் அழைத்தார்; அந்தக் குரல் எனக்குச் சொந்தம் உள்ள குரல் போல இருந்தது; 'யார்?' என்று கேட்டேன்; 'நான் தான்டா நரசிம்மன்' என்று பதில் குரல் கேட்டது.

நரசிம்மன் என்பவர் எனது பழைய நண்பர்; கல்லூரியில் என்னுடன் படித்தவர்; அவர், 'இந்து' பத்திரிகையில் பணியாற்றுவது எனக்கு இத்தனை ஆண்டுக் காலம் கழித்துத்தான் தெரிந்தது. இவ்வளவு காலம் நான் விளம்பரம் பெற முடியாத துர்ப்பாக்கிய நிலையை நானே எண்ணிக்கொண்டேன், இப்போதுள்ளதுபோல் பத்திரிகை நிருபரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அரசியல் நடத்தி எனக்குப் பழக்கமில்லை.

ஜெர்மன் நாட்டிலிருந்து பெரிய பத்திரிகையொன்றின் நிருபர் வந்திருப்பதாகவும் அவர் என்னைச் சந்திக்க விரும்புவதாகவும் நண்பர் நரசிம்மன் தெரிவித்தான். சிவஞானத்தால் சீந்தப்படாது—ஆதித்தனுல் ஆதரிக்கப்படாது—பெரியார் பேரெதிர்ப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் தி. மு. கழகத்தைப்பற்றி அறிந்துகொள்ள ஜெர்மன் நிருபர் தேடிவந்தார். அவரை எங்கு சந்திக்க சொல்லுவது என்பது ஒரு பிரச்சினையாக இருந்தது. ஏனென்ருல் என்னுடைய வீட்டில் அப்போது பழுதுபார்க்கும் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஏதாவது ஒரு ஓட்டலில் அறை பிடித்து, அங்கே அவரை வரச் சொல்லி சந்திக்கலாம் என்று எண்ணினேன். ஆனல், சென்னையில் ஓட்டல் அறையில் தங்குவது பல தப்பான அர்த்தத்தைத் தரும் என்று கருதி, பின்னர் என் வீட்டிற்கே அவரை வரச் சொல்லிவிட்டேன். அவரும் வந்தார். மூன்று மணி நேரம் என்னிடம் அவர் பேசிக்கொண்டிருந்தார் அவ்வளவு நேரம் பேசியபின், அவர் என்னைக் கேட்ட கேள்வி, 'நாட்டுப் பிரிவினையை அதிகம் பேர் ஆதரிக்கிருர்கள் என்ருல் அதற்கு என்ன அடையாளம்?' என்பதுதான். இதைத்தான் பலரும் கேட்கிருர்கள்—கேட்பார்கள். அர்த்த இராத்திரியில் கூட்டம் போட்டாலும் மலை முகட்டில் கூட்டம் நடத்தினலும், பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடுகிருர்கள் என்ரு அவர்களுக்குப் பதில் கூறமுடியும்?

நாட்டுப் பிரிவினையை மக்கள் ஆதரிக்கிருர்கள் என்பதைக்காட்ட வேண்டும் என்ருல் 'ஓட்டு வித்தையைக் காட்டுங்கள்; சட்டமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 50, 60 என்று உயர்ந்து, ஆட்சியைக் கைப்பற்றிக் காட்டினல், அப்போதுதான் உலகம் உங்களைக்கவனிக்கும்'' என்ருர் அவர்.

என் தொழில், உறவின் முறை எல்லாம் பத்திரிகைத் துறைதான். எனக்கும், மற்றப் பத்திரிகைக்காரர்கட்கும் எந்தவிதத் தகராறும் கோபமும் இல்லை. ஏதாவது ஏற்பட்டால் அது 'பங்காளிக் காய்ச்சலாகத்'தான் இருக்கும்: எனவே நானும் ஒரு பத்திரிகைக்காரன் என்ற முறையில் சொல்லுகிறேன். சட்டமன்றத்தைக் கைப்பற்றினல் தான் உள்நாட்டு நிருபர்களெல்லாம் ஓடிவருவார்கள்.

நமது மூலாதாரக் கொள்கையான 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதை நிறைவேற்ற திருவண்ணமலை சண்முகம் விடுத்த அன்பழைப்பும், கருணநிதி எடுத்துக்காட்டிய புறநானூற்றுப் போர்க்களக் காட்சியும் வெற்றி தருவது, நீங்கள் 1962-ல் காட்டும் உற்சாகத்தைப் பொறுத்துத் தானிருக்கிறது! 'மனைவியிடம் எவ்வளவு ஆசையாக இருக்கிறேன் தெரியுமா?' என்று பேசிவிட்டு, மாதத்தில் 20 நாள் வெளியூரில் தங்கினல் என்ன பொருள்?

கழகத்தின்மீது நீங்கள் காட்டும் ஆர்வம், தேர்தலில் வெற்றிபெற்றுத் தருவதிலேதான் இருக்கிறது. நல்ல வயலுக்கு அடையாளம் நல்ல விளைச்சலைத் தருவது! நல்ல விளக்குக்கு அடையாளம் நல்ல ஒளியைத் தருவது!

தேர்தலில் நல்ல முறையில் பணியாற்றத் தவறிவிடுவீர்களேயானல், என்னை நீங்கள் நம்ப வைத்துக் கழுத்தை அறுத்தீர்கள் என்றுதான் சொல்லுவேன்.

உயிரினும் உயரிய நமது இலட்சியத்தை பிறர் பார்த்துக் கேவலமாகப் பேசக்கூடாது. மாநகராட்சியில் வெற்றி தேடித்தந்ததுபோல், வருகிற பொதுத் தேர்தலிலும் வெற்றி தேடித் தரவேண்டும்.

இந்த மாநாட்டில் உணர்ந்து கொள்ளவேண்டிய உண்மை மற்ரென்று இருக்கிறது. இம்மாநாடு, மறைந்த மாவீரர்கட்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சியுடன் துவங்கியது. முதுபெரும் கழகத் தோழர்கள் இருவருக்கு வீரகேடயம் அளிக்கும் நிகழ்ச்சியோடு முடிவடைய இருக்கிறது. இந்த இரு நிகழ்ச்சிகளினுடைய நோக்கமும் தாய்த்திரு நாட்டை மீட்பதற்கு உறுதுணையாக அமைந்தவையாகும்.

''நமது தாய்த் திருநாட்டை ஏகாதிபத்திய வேட்டைக்காடாக்கி வைத்திருக்கும் பண்டித நேருவின் பாலபருவவரலாற்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

சனநாயகவாதி—நேருவைத் தவிர வேறு காங்கிரசில் யாரும் இல்லை என்பதை இன்னமும் நான் நம்புகிறேன், அவர் படிக்காத நூல் இல்லை; பார்க்காத நாடு இல்லை; அவர் பெற்ற அத்தனை அறிவும் திராவிடத்தைச் சாகடிக்கத் தான பயன்பட வேண்டும்?

பண்டித நேரு ஐரோப்பிய நாடு ஒன்றில் பேசுகையில், 'ஐரோப்பாவில் பல சிறிய நாடுகள் இருந்தாலும், ஒரு நாட்டின் பெருமை அதன் அகல நீளத்தில் இல்லை' என்று கூறினர்.

குவெய்ட் என்ற ஒரு சிறு நாடு இருக்கிறது; அதை ஒரு நாடு என்று சொல்ல முடியாது; மதுரை மாவட்டத்திலுள்ள ஒரு சிறிய தாலுக்கா அளவில் உள்ள நிலப் பகுதியாகும். அங்கு எண்ணெய்க் கிணறுகள் தான் இருக்கின்றன; அது தனி நாடாக வாழ்ந்துகொண்டிருக்கிறது. பக்கத்திலிருக்கும் ஈராக் நாட்டுத் தலைவர், 'படையெடுத்துத் தாக்குவேன்' என்கிருர், குவைய்ட்டைக் காப்பாற்ற பிரிட்டிஷ் அரசு, தனது படையை அனுப்பிவைக்கிறது. பண்டிதநேரு, 'குவெய்ட் தனி நாடாகத்தான் இருக்கவேண்டும்' என்கிருர். அதை ஈராக் ஆதரிக்க மறுக்கிறது.

பண்டிதருக்கு குவெய்ட்மீதுள்ள அக்கறையை நாங்கள் அனுபவிக்கக்கூடாதா?

வரலாற்றுச் சிறப்புமிக்க, இயற்கை வளமிக்க திராவிடம் தனி நாடாகக் கூடாத?

பட்டானிஸ்தான் பாகிஸ்தானின் ஒரு பகுதி; அங்கு வாழ்பவர்களும் பாகிஸ்தானின் குடிமக்கள் தான்; அவர்கள் பக்துனிஸ்தான் கேட்கிருர்கள்; அவர்களுக்கு ஆப்கானிஸ்தான் மறைமுகமாக ஆதரவு காட்டுகிறது. பண்டித நேரு வெளிப்படையாகவே ஆதரிக்கிருர்.

நாகர் நாடு—எழுச்சிக்கு இருப்பிடமாகவும், வீரச் செயலுக்குப் பிறப்பிடமாகவும் இருக்கிறது. துப்பறியும் கதைகளில் வரும் காட்சிகளைப்போல அங்கே போராட்டம் நடந்து வருகிறது. நாகர்கள் தலைவர் துப்பறியும் இலாகாவைவும் ஏமாற்றிவிட்டு இங்கிலாந்து நாட்டுக்குப் போய் விட்டார். அந்த உரிமைப் போரை நேரு நசுக்க முனைகிருர்.

பண்டித நேரு படித்தறிந்த கருத்துப்படி நடக்க வேண்டுமானல், திரரவிடம் தனி நர்டாவதைத் தடுக்கக் கூடாது.

''பெரிய நாடு சிறிய நாடுகளை அடக்குவது அரசியல் காட்டுமிராண்டித்தனம்; இதனல்தான் முதல் ஜெர்மன் யுத்தம் வந்தது'' என்று சிறிய நாடுகளுக்காக ஐ. நா. அவையிலும், காமன்வெல்த் மாநாட்டிலும் பரிந்து பேசும் நேரு, இதற்குக் குறுக்கே நிற்பது பொருத்தமல்ல!

ஐரோப்பாக் கண்டத்தில் பல சிறிய நாடுகள் இருந்தன; அவற்றில் கிரேக்க நாட்டிலிருந்துதான் அறிவு பரவியது. சாக்டரடீஸ்,

(26-ம் பக்கம் பார்க்க)

## பாராட்டுக்குரிய பத்திரிகை நிருபர்கள்

—(())—

மதுரை மாநாட்டுக்கு வருகைதந்திருந்த பத்திரிகையாளர்கள் அனைவரும் நடுநிலையில்நின்று தங்களின் பணியை இனிதே நிறைவேற்றினர். அவர்களுக்கெல்லாம் போதிய வசதிகள் செய்து தர இயலாதிருந்துங்கூட, மாநாட்டுச் செய்திகளையும், உடனுக்குடன் திரட்டித் தந்து பத்திரிகைகளில் வெளிவரச் செய்த மதிப்புக்குரிய நிருபர்களையும், சம்பந்தப்பட்ட எல்லா பத்திரிகையாளர்களையும், வரவேற்புக்குழுவினர், அறிஞர் அண்ண, மற்ற தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் மனமாரப் பாராட்டினர்.

# ஒரே உலகமும் திராவிடமும்!

சேலம்
ஏ. சேரலாதன்
பி.ஏ., பி.டி.,

## 11

திராவிடநாடு பிரிந்தால் இராணுவ ஆட்சி ஏற்பட்டுவிடும் என்பதெல்லாம் கவைக்குதவாத வாதம். அப்படியே ஏற்பட்டாலும் ஒரு தென்னவன்தான் ஆட்சியைக் கைப் பற்றுவான். அவனால் நன்மைகள் விளைவுமென்று எதிர்பார்க்கவும் இடம் உண்டு. ஆனால் 'ஏக இந்தியா'வில் இராணுவ ஆட்சி ஏற்பட்டால்? நிச்சயம் ஒரு வடவன்தான் அதிகாரத்திற்கு வருவான். அவனால் திராவிட மக்களுக்கு எள்ளத்தனை நன்மைகூட ஏற்படாது என்பதும் உறுதி. ஜனநாயக ஆட்சியிலேயே தென்னாட்டைப் பட்டினி போடும் வடவர்கள், சர்வாதிகார ஆட்சியில் நம்மைப் பிழிந்து சக்கைகளாக அல்லவா ஆக்கி விடுவார்கள்?

இன்னொரு அபாயமும் நமக்கிருக்கிறது. அதுதான் இந்தி தேசீய மொழியாகின்ற பயங்கரம்! அது வளமில்லாத'மொழி; நம் தாய் மொழியை அழிக்க வந்தது என்பது ஒரு புறமிருக்க, உலக அரங்கிலும் நம் நிலையைப் பெருமளவுக்கு அது குறைக்கக்கூடியது.

நமது மாணவர்கள் தாய் மொழியோடு, அரசாங்கத்தில் பதவிகள் வகிக்கவும், சலுகைகள் பெறவும் இந்தியைப் படித்தாக வேண்டும். உலகத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ள ஆங்கிலத்தையும் கற்றாக வேண்டும். தென்னாட்டு இளம் சிறார்கள் இந்த 'மொழிச் சுமை'யைத் தாங்கமாட்டாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும்போது, வடநாட்டுக் குழந்தைகள் தங்கள் தாய் மொழியாகிய இந்தியோடு, ஆங்கிலத்தை மட்டும் எளிதாகக் கற்றுக்கொண்டு உள்நாட்டிலும், உலக அரங்கிலும் எளிதில்—விரைவில் உயர்ந்து விடுவார்கள்!

இந்தியால் நமது தாய்மொழிக்கு ஏற்பட இருக்கிற ஆபத்தும் கொஞ்ச நஞ்சமல்ல. சான்றாக, இன்று தமிழ் மொழியில் எந்த அளவுக்கு வட மொழிச்(சமஸ்கிருதம்) சொற்கள் கலந்திருக்கின்றன என்பதை யாவருமே அறிவார்கள். இவ்வளவுக்கும் வடமொழியானது தமிழ் நாட்டின் ஆட்சி மொழியாக ஒரு மணி நேரம் கூட இருந்ததில்லை. ஆட்சி மொழியாக ஆகாமலே வடமொழி இந்த அளவுக்குத் தமிழ் மொழியைப் பாதித்து இருக்கிறதென்றால், ஆட்சி மொழியாகும் இந்தியால் தமிழுக்கு எத்தகைய பேராபத்து காத்திருக்கிறதென்பதை உணரவேண்டும்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ்தான் ஆட்சிமொழி; கல்லூரிகள், நீதிமன்றங்கள் ஆகிய இடங்களில் இனி தமிழ்தான் வழங்கும். இதைத் தி. மு. க. எதிர்க்கிறதென்று 'சென்னை அமைச்சர்கள்' பேசி வருகிறார்கள். ஆனால் எத்தகைய தமிழ் ஆட்சி மொழியாகிறது? பாடசாலை, புஸ்தகம், பரீட்சை, ஜில்லா, நமூனா, ரசீது! இதுதான் தமிழ் ஆட்சி மொழியாகும் இலட்சணம்!

பேராசிரியர் பாவாணர் அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிட்டது போல், "தமிழ் மொழி தூய்மையாக இருக்கும் வரைதானே நாம் அதற்காகப் போராடுவோம்? அதன் தூய்மையை அழித்து, தனித் தன்மையைக் கெடுத்து, தமிழ் மொழி என்றே ஒன்று இல்லாமல் செய்துவிட்டால், பின் நாம் எதைக் காட்டி 'நமது தாய் மொழி' என்று கூற முடியும்? அதற்காகப் போராடவும் முடியும்? இந்த நோக்கத்தோடு, இந்தியை நுழைக்க இருந்து வரும் தடையை நீக்கும் எண்ணத்துடன், தமிழைக் கெடுத்து அதைச் சாகடிக்கச் செய்யும் முயற்சிதான், அதை ஆட்சிமொழியாக்குவதெல்லாம்!"

இதை யுணர்ந்து, இனியாவது நாம் விழிப்போடிருக்க வேண்டாமா?

'ஒரே உலகி'ல் திராவிடம்!

உலகம் மகிழ்ச்சி பொங்க சிரிக்கிறது! ஜனநாயக வாதிகளின் உள்ளங்களெல்லாம் மலர்ந்து நிற்கின்றன! பாட்டாளி வர்க்கம் ஆண்டாண்டு காலமாகக் கண்டு வந்த இன்பக் கனவின் நிழல் முகத்தில் படிந்து மின்னிட தலை நிமிர்ந்து நிற்கிறது! பெண் குலத்தின் விழிகளில் பூரிப்பும், புத்தொளியும் சுடர் விடுகின்றன!......

'ஒரே உலகம்' மலர்கின்ற நாளில் இத்தனையும் நிகழலாம்; இதற்கு மேலும் நிகழலாம்! சற்றே கற்பனைக் கண்கொண்டு பாருங்கள்.

உலக மக்களெல்லாம் வேற்றுமைகளை மறந்து கைகோர்த்துக் கொண்டு ஆடிப் பாடுகின்றனர்; ரஷ்யரும் அமெரிக்கரும் கை குலுக்குகின்றனர்; நீக்ரோ மக்களும், வெள்ளையரும் கட்டித் தழுவுகின்றனர்; பார்மோசா தீவு மக்களும், செஞ்சீனத்துக் குடிகளும் ஒரே மேசையின் முன்பு அமர்ந்து விருந்துண்கின்றனர்! கிரெம்லின் மாளிகையிலும், வெள்ளை மாளிகையிலும், இங்கிலாந்துப் பாராளுமன்றத்திலும், டெல்லி செங்கோட்டையிலும், பாரிஸ்ஸிலும், பீங்கிங்லும் ஒரே கொடிதான் பறக்கிறது! உலக நாடுகளின் தலைவர்களெல்லோரும் ஓரிடத்தில் கூடி 'ஒரே உலகை' அமைக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகின்றனர்!

இந்த நேரத்தில் திராவிடத்தின் நிலை 'என்ன? அதன் தலைவர்கள் என்ன செய்வார்கள்?

ஏதோ ஒரு மாதத்தில் 10-ந் தேதியன்று வாஷிங்டனில் 'ஒருலக' ஒப்பந்தம் கையெழுத்தாகிறது என்று வைத்துக் கொள்வோம். திராவிடத்தின் பிரதிநிதி ஒன்றாம் தேதியே அங்கு சென்றுவிடுவார், அந்த உலகத் தலைவர்களின் மாநாட்டிற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க!

பத்தாம் தேதி காலை 6-மணிக்கு ஒரே உலகத்தின் கொடி உலக நாடுகளிலெல்லாம் பறக்கவிடப் படுகிறதென்றால், சரியாக 6 மணிக்கு சென்னை கோட்டையிலும், பெங்களூர் 'விதான சௌதா'விலும், திருவனந்தபுரத்திலும், கர்நூலிலும் அந்தக் கொடி பறந்து கொண்டிருக்கும்!


இதற்கெல்லாம் என்ன பொருள்? 'ஒரே உலக அமைப்பில் மற்ற எவருக்குமுள்ள ஆர்வத்தைக் காட்டிலும் நமக்கு அதிக ஆர்வமுண்டு. நாம் சொல்வதெல்லாம் 'ஏ வடவராதிக்கமே நீ கூறும் ஒரே உலகத் தத்துவத்தை நாங்களும் ஒப்புக் கொள்கிறோம். நீ ஒரே உலகத்தை நோக்கி நடக்கிறாய் என்பதையும் ஒப்புக்கொள்கிறோம். நாங்களும் அதைத்தான் விரும்புகிறோம்.

ஆனால் எங்கள் கை கால்களை ஆதிக்கச் சங்கிலிகளால் பிணைத்து அடிமைகளாக எங்களை இழுத்துச் செல்கிறாயே அதைத்தான் நாங்கள் விரும்பவில்லை. அந்த ஆதிக்கச் சங்கிலிகளை அகற்றிவிடு! எங்களை விடுதலை பெறச் செய்! பிறகு சுதந்திரமடைந்த திராவிடத்தின் குடிமக்களாக உன்னுடன் வருகிறோம். வேண்டுமானால் நீயும் நாங்களும் கைகோர்த்துக்கொண்டு தோளொடு, தோள் உராய்ந்து கொண்டு 'ஒரே உலகத்தை நோக்கி விரைந்து நடப்போம்!" என்பதுதான்.

எந்த நாட்டு விடுதலை வரலாற்றை எடுத்துப் பார்த்தாலும், விடுதலைக்காக நேரடியாகப் போராடுபவர்கள் சிலர், அவர்களை விட்டு ஒதுங்கி எதிலும் தலையிடாமல் பார்வையாளராக இருக்கும் பொது மக்கள் தான் மிகுதியாக இருப்பார்கள். போர், கிளர்ச்சி, போராட்டம் அரசாட்சி ஆகிய எல்லாவற்றுக்குமே இந்த நிலைதான்!

பத்திரிக்கைகளின் மூலம் மக்களிடம் ஓட்டெடுக்கும் ஒருவித முறையை (அவர்கள் கருத்தறிய) பின்பற்றினாராம் ஸ்டாலின்! நெப்போலியன் தமது அதிகாரத்தின் உச்ச நிலையிலிருக்கும்போது, நாசமாகி எரிந்து கொண்டிருந்த மாஸ்கோ நகரத்தின் சாம்பலுக்கு நடுவே தனது வெள்ளைக் குதிரையின் மீது அமர்ந்தவண்ணம்; பாரிஸ் நகர மக்கட் கூட்டங்களின் கருத்தென்ன என்பது பற்றித் தூதர் மூலம் நித்தமும் வரும் செய்தியை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தானும்!

(தொடரும்)


**வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி**

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசை யில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம், விலை ரூ. 5—00. வி. பி. செலவு ரூ. 1—25.

**தையற்கலை**

இதன் மூலம் யார் வேண்டுமானாலும் பிறர் உதவியில்லாமல், தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். மேலும் இதில் துணிகள் அளவு வெட்டி தைப்பதற்கான தனித்தனி படங்களும் விளக்கமான முறையில் இருக்கின்றன.

விலை : ரூ. 3—00 தபால் செலவு ரூ. 1—00

**ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)**

இதில் சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத் தைலம், மெழுகு வர்த்தி, ஸ்னோ, பேஸ் பௌடர், சாம்பிராணி, பெனாயில் போன்ற 200 கைத்தொழில் கொண்டது. விலை: ரூ. 3—00, வி. பி. செலவு ரூ. 1—00.

**குடும்ப இலகு வைத்தியர்**

வீட்டுச் சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கிக் சொள்ளும் ஏராளமான வைத்திய முறைகளடங்கியது தபால் செலவுடன் ரூ. 3—50.

**VANI BOOK DEPOT.**

3, மலைய பெருமாள் தெரு. Post Box No. 239, Madras-1.

# “தொழிற்சங்க இயக்கத்திலே நமது பணி!”

காட்டூர் கோபால்

சீரோடும் சிறப்போடும் திருப்பரங்குன்றத்திலே திரண்டுள்ள திராவிடப் பெருமக்களின் விடுதலைப் பாசறையின் மூன்ருவது பொது மாநாட்டில் பங்கு கொண்டுள்ள அனைவரும் கடந்த காலப் பணிகளைப் பற்றிக் கலந்துரையாடிக் களிப்புப் பெற்று கொண்டிருக்கும் கொள்கையின் வெற்றிக்குப் பணியாற்றிடும் பண்பினை மெருகேற்றிக் கொண்டு மென்மேலும் முன்னேற வழிவகை காண்கிற எழிலான காட்சியைக் கண்டோம்.

இன எழுச்சியூட்டும் இக் கூடாரத்தில் தமிழகம், ஆந்திரம், கர்ணுடகம், கேரளம் ஆகிய நான்கு மாநிலக் கழகத் தோழர்களும் திரண்டனர். திரண்டிருந்த இலட்சக்கணக்கான திராவிடர்களிலே பல்வேறு வகைத் தொழிலாளிகளும்: மாணவர்களும்; மத்தியதர வகுப்பினருமாக இடம் பெற்றனர், சகல துறையினரும் குழுமியுள்ள அந்நன்ளுளில், மாணவ மணிகள் தாங்கள் கடந்த காலத்தில் நடத்திய மாநாடுகள், மேற்கொண்ட சிறப்பான பணிகள், இவைபற்றி ஒருவருக்கொருவர் பேசி மகிழவும், அடுத்துச் செய்யப்படவேண்டிய செயல்முறைகள் பற்றியும் திட்டமிடும் பணியில் முற்பட்டனர். அதுபோன்றே கலைஞர்களும், கவிஞர்களும் வாணிபர்களும், வழக்கறிஞர்களும் அவரவர்கள் ஆற்றிய பணிகளையும் ஆற்ற இருக்கும் காரியங்களையும் வகை படுத்திக் கொள்ள திரண்டனர், அதுபோன்றே தொழிலாளரும் செய்து முடித்தவற்றையும் செய்யவிருப்பது பற்றியும் எண்ணி முடிவாக்க வேண்டிய பணியில் ஈடுபட்டனர்.

அதனை யொட்டியே திராவிடத் தொழிலாளர்கள் தங்களுக்கென அமைத்து நடத்திவரும் தொழிலாளர் முன்னேற்ற சங்கங்களது சாதனைகளைக் காட்டிப் பார்த்துக் களிப்படையவும் நிலவி வரும் பெருந் தொல்லைகள் நீங்க பொது மாநாட்டில் தீர்மானங்கள் வடிவாக்கிக் கொண்டு; வகையான வேலைத் திட்டங்களை எதிர்காலத்தில் வரையறுத்துக் கொண்டனர்.

இந்நிலையில் கடந்த காலத்தில் கழகசார்பு தொழிற்சங்க மூலம்ஆற்றிய பணிகளை நினைவுக்கு கொண்டு வருவது சாலச் சிறந்ததாகும்.

முன்னேற்றக் கழகம் அடுத்துள்ள அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட நிலையிலிருந்து விடுதலைத் தாகத்தை அனைவர்க்கும் உணர்த்தித் தீரவேண்டிய தலையாய பணியில் ஈடுபட்டிருப்பதால் இதிலேயே அதிகக் கவனம் செலுத்த வேண்டியிருந்ததாலும்; ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கமேஇருக்கவேண்டிய நிலையை நாம் விரும்பியிருப்பதாலும்; நடைபெற்று வந்த மாற்றுக் கட்சியினரது தொழிற்சங்கங்களே நடக்கட்டுமென எண்ணியிருந்தோம். ஆனால் இதுவரை இருக்கும் மாற்றுத் தொழிற்சங்கங்களின் பணிகள் அவரவர்களது அரசியல் ஆதிக்கத்தைப் புகுத்தும் முறைகளில் இருந்தது மட்டுமின்றி, கழகக் கருத்துக் கொண்டவர்கள் மாற்றுச் சங்கத்தில் இருந்தாலும் சரிவர கவனித்துப் பாதுகாப்புக் கொடுக்காத நிலையும்; தொழிலாளிகளின் பேரில் கழகத்தவர்க்குஅக்கறையே இல்லையென்ற பொய்ப் பிரச்சாரமும் பரப்பப்பட்ட நிலையும் வளர வளர வேறு வழியின்றி கழகத் தொழிலாளர்கள் தனித் தொழிற் சங்கம் அமைக்க முற்பட்டனர். கடந்த இரண்டொரு ஆண்டுகளாக இந்தப் பணி பரவலாக பல மாவட்டங்களில் வளரத் தொடங்கிற்று.

நாம் தொழிற் சங்கங்களில் நேரிடையாகப் பங்கு கொள்ளாத நேரங்களில் தொழிற்சங்கம் நடத்துகிற சிரமமான பணிக்கு நாம் லாயக்கில்லை என்ருர்கள், நாமும் தொழிற்சங்கங்களை நேரிடையாகத் துவங்கிய பின்னர் தொழிலாளிகளைப் பிளவு படுத்துகிருேமென்றும், நம்மால் எந்தக் காரியத்தையும் சாதிக்க இயலாதென்றும்; தொழிலாளர் பிரச்சனையே புரியாதென்றும் மாற்றுச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் கூறிவருகின்றனர். இந்த வாதம் எப்பேர்ப்பட்ட பொய்யானது என்பது நமது சங்கத்தின் குறுகிய காலத்தின் வெற்றிச் சாதனைகளைப் படித்தாலே தெளிவாகும்.

பல்வேறு மாவட்டங்களிலும் நமது கழக சார்பு தொழிற் சங்கங்கள் ஆற்றலை பணிகளையும் அதனுல் கிடைத்த வெற்றிகளையும் விளக்குவதென்ருல் ஒரு பெரும் புத்தகமே வடிவாக்க வேண்டி வரும்.

எனவே மாற்றுக்கட்சித் தொழிற் சங்கங்களின் நடவடிக்கைகள் தொழிலாளர் மத்தியில் நீண்ட காலத் தொடர்பை கெட்டியாகக் கொண்டிருந்த கோவை மாவட்டத்தில் கழக சார்பு சங்கம் கடந்த இரண்டொரு ஆண்டுகளில் பெற்ற பெரும் சாதனைகளில் சிலவற்றை கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

சுமார் எண்பதுக்கு மேற்பட்ட பஞ்சாலைகள் இருக்கும் கோவை மாவட்டத்தில் 1958-ம் வருடம் ஆகஸ்ட்மாத இறுதியில் “கோவை மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்” என்கிற அமைப்பினை உடுமலையிலே நிறுவினேம். ஆரம்பத்திலே மிகக் குறைந்த உறுப்பினர்கள் மட்டுமே இருந்த நமது சங்கத்தில் தற்போது மிக அதிகப்படியாக வளர்ந்து வருகிறது.

இந்த சங்கத்தின் மூலம் கோவை—கமலா மில் நிர்வாகத்தினரால் தவருன வழக்குத் தொடர்ப்பட்டு பாதிக்கப்பட இருந்த நமது தொழிலாளிகளை மீட்டு வேலை வாய்ப்புப் பெற்றுத்தந்தோம்.

பிரீமியர் ‘B’ மில்லில்:

வேலைத்தரம் குறித்த டிக்கெட்டுகள் வழங்கப்படாதவர்களுக்கு அளிக்கப்படவும்; தனியான முறையில் தரப்பட்ட சம்பள உயர்வை, சம்பளப்பட்டியலிலேயே போடச் செய்து கொடுக்கவும்; பதவித் தொழிலாளர்களை நிரந்தரம் செய்வித்து பாதுகாப்புப் பெற்றுத்தந்துள்ளோம்.

ஓம் பராசக்தி மில்லில்:

தற்காலிகத் தொழிலாளியை நிரந்தரம் செய்வித்து பாதுகாப்புக் கொடுத்தது. வேலை உயர்வு பெற்றுத் தத்துள்ளோம்.

பிரகாசா மில்ஸ்:

நமது தொழிலாளர்கள் மீது போடப்பட்டிருந்த சஸ்பெண்ட் தண்டனையை ரத்து செய்யவும்; மற்றும் இருவர்க்கு கொடுத்த தண்டனையைக் குறைக்கவும் ஆவன செய்துள்ளோம்.

சோமசுந்திரா மில்ஸ்:

தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக்கவும் — 240 நாள் வேலை செய்துள்ள தினக்கூலித் தொழிலாளர்களுக்கு மாதாந்திர டிக்கெட் வழங்கவும் — மிசின்களை மாற்றித் தந்து அவரவர்களுக்கு நிரந்தரப்படுத்தவும்—ஆவன புரிந்துள்ளோம்.

முருகன் மில் :

2 தொழிலாளிகளுக்கு இருந்த நிலுவைச் சம்பளத்தைப் பெற்றுத் தரவும்—தற்காலிகத் தொழிலாளிகளுக்கு வில்லை வழங்கவும் தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தும் கூட்டு முயற்சிக்கும் பெண் (தோட்டித்) தொழிலாளிக்கு நிரந்தர வேலைக்கு புதுப்பித்துக் கொடுத்ததும்-தறிகள் 8 மணி நேரத்திற்கு நின்ருல்தான் கூலி கிடைக்குமென்ற நிலையைப்போக்கி குறைந்த மணி நேரம் நின்றுவிட்டாலும் தொகை கணக்கிட்டுத் தரப்படவும் ஆவன செய்துள்ளோம்.

நரசிம்மா மில்:

அதிகமாக பார்க்கும் ஊசிளுக்கு கூலி கிடைக்கவும், சைக்கிள் நிறுத்துமிடம் — ஓய்வு விடுதி அமைக்க வேண்டிய முயற்சிகளும் கோன்வைண்டிங் — பிரிபரேடரி தொழிலாளர் வேலைப்பளு நிர்ணய முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

சுஜனி மில்:

கோன் வைண்டிங் தொழிலாளிகட்கு மாற்றுத் தொழிற்சங்கம் செய்து கொண்டிருந்த ஒப்பந்தப்படி குறைந்த ஊதியம் மட்டுமே கிடைத்தது. இந்த ஒப்பந்தத்தை உடைத்துவிட்டு நாம் புதிய ஒப்பந்தம் செய்து பிரதி மாதமும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் இருபது ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தோம்.

ஜெயலட்சுமி மில் :

வேலை யிழந்த தொழிலாளிக்கு நஷ்ட ஈடு பெற்றுத்தந்தது.

மற்றும் உள்ள வரதராஜா, லட்சுமி, டி. பி. எப்., ராதாகிருஷ்ணு, பங்கஜா, ஸ்டேன்ஸ். சிவானந்தா ஹரி, ஜோதி, பயனீயர், ரவீந்திரா ஆகிய ஆலைகளில் அவ்வப்போது ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தவிர்க்கும் முயற்சியில் ஈடுபட்டது.

திருப்பூர் காட்டன் மில்:

இருநூறு தொழிலாளிகளுக்கு நிரந்தர டிக்கெட் பெற்றுத் தந்துள்ளது. பினிசர் ஸ்கெட்சர் வேலை பார்ப்பவருக்கு கிடைக்கவேண்டிய ஊதிய உயர்வைப் பெற்றுத் தந்தது. லேணர்களாக வேலை பார்ப்பவர்களுக்கும் போனஸ் பெற்றுத் தந்தது.

கோபால்டு மில்:

அப்ரண்டீஸ் தொழிலாளர்களுக்கு நிரந்தரம் செய்வித்தது.

தனலட்சுமி மில் :

காடா—லாங்க்லாத் ஆகிய துணிகளுக்குரிய கூலியை குறைத்துக் கொடுத்துவந்த நிலைமையை மாற்றித் தரப்படவேண்டிய அளவு பெற்றுத் தந்தது—அரியாத் தொழிலாளர்களுக்கு சைடர்களாக வேலை உயர்வு பெற்றுத் தந்தது. பல ஆண்டுகளாக வீவிங் டிபார்ட்மெண்டில் இருந்த பதவித் தொழிலாளர்களை நிரந்தரம் செய்வித்தது.

எஸ். ஆர். சி. மில் :

வீவர் — கோன் வைண்டிங் தொழிலாளர்களாகிய இருநூறு பேர்களுக்கு வேலை நிரந்தரம் செய்வித்தது.

மற்றும் உடுமலை திருமூர்த்தி மில்லில் அப்ரெண்டீஸ் தொழிலாளர்களுக்கு ஓய்வு லீவு பெறவும்—பழனி ஆண்டவர், வெங்கடேசா ஆலை, ஈரோடு நடேசர் ஆலை, பல்லடம் லட்சுமி நாராயணு, புளியம்பட்டி விஜயேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ் ஆகிய ஆலைகளிலும் அவ்வப்போது ஏற்பட்ட பல்வேறு பிரச்சனைகளை முடித்துத் தந்தது. மேலும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் போனஸ் பேச்சு வார்த்தையிலும்—ஊதிய போர்டு சிபார்சினை அமுல் படுத்தும் நடவடிக்கைகளிலும்—பெண் தொழிலாளர் வேலை வாய்ப்பு—பஞ்சப்படி உயர்வு தராமைக்கு எடுத்த நடவடிக்கை—சிக்கனச் சீரமைப்புக் குழுவின் அலுவல்கள் ஆகிய எல்லா பொதுவான நடவடிக்கைகளிலும் மாற்றுத் தொழிற்சங்கங்கள் போலவே நாமும் பங்கு பெற்றுப் பணியாற்றி வந்துள்ளோம்.

மேலும் மோட்டார் தொழிலாளர் முன்னேற்ற சங்க சார்பில் வி. ஆர். டி. பஸ் நிர்வாகிகளிடம் தினசரி பேட்டா உயர்வு பெற்றுத் தரவும்; பீடித் தொழிலாளர் முன்னேற்ற சங்க சார்பில் சூலூர் பீடி கம்பெனி ஒன்றில் ஒரு மாத போனஸ் கோவை மாவட்ட பீடித் தொழிலாளர் போராட்டத்தில் பெரும் பங்கேற்றுப் பணியாற்றியும் போராட்டத் தருணத்தில் சுமார் 1500 ரூபாய் ரொக்கமாக வசூலித்துத் தந்தும், 50மூட்டை அரிசி வசூலித்து உதவியும் ஆக்கப் பணிகளில் ஈடுபட்டது.

டிரங் பெட்டித் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில்

(13-ம் பக்கம் பார்க்க)

# வாக்குகளின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் வழங்குக!

8-ம் பக்கத் தொடர்ச்சி

மரக்கலங்களை விட்டு கத்தும் கடலை அடக்கியாண்டவர்கள். அப்பேர்ப்பட்ட வீரவரலாறு படைத்தவர்கள் நாம். வடக்குக்கும் தெற்குக்கும் உள்ள வேறுபாடுகள் மிகவும் அதிகம்.

ஈராயிரம் ஆண்டு காலமாக வடக்குப் பகுதி மற்றவர்களுக்கு அடிமைப்பட்டிருந்தது.

அலெக்சாண்டர் வந்தான்; தைமூர் வந்தான், செங்கிஸ்கான் வந்தான், பாபர் வந்தான், உமாயூன் வந்தான் என்று இப்படி வடக்கின் வரலாறு வந்தான் வந்தான் என்றிருக்கும்!

ஆனால் நம்முடைய வரலாறு சேரன் செங்குட்டுவன் சென்றான் — வென்றான், இமயவரம்பன் வென்றான், ராசேந்திரசோழன் வென்றான் கரிகால் பெருவளத்தான் வென்றான் குலோத்துங்கச்சோழன் வென்றான் என்றிருக்கும். ஆனால் இன்று நிலைமாறி நாம் அவர்களுக்கு அடிமைகளாக இருக்கிறோம். "வென்றான்" வரலாறு "வந்தான்" வரலாறுக்கு அடிமைப்பட்டிருப்பது என்பது வீரர் வரலாற்றுக்கு இழுக்காகும். வெற்றி வீரர்களாக விளங்கிய நாம் இன்று வீழ்ந்து கிடக்கிறோம். இதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நாம் சுவாசிப்பது திராவிடக் காற்று. நாம் உண்பது திராவிட நாடு. நாம் அருந்துவது திராவிடத் தண்ணீர் நம்முடைய உடலில் இருப்பது திராவிடவீரம் வடநாட்டு வீரத்தை முறியடிக்க நமக்கு இருக்கும் பல எலும்புகளில் ஒரு எலும்பை ஒடித்து எடுத்து வீசி இந்த மண்ணுக்கு நாம் செய்யும் காணிக்கையைச் செலுத்த வேண்டும். அதை விடுத்து பிரிந்து செல்லும் உரிமையோடு இருப்போம் என்று பேரம் பேசுவது கடைந்தெடுத்த துரோகச்செயலாகும்.

வீரத்திருநாட்டின் பிறப்புக்களே, தாய்த்திருநாட்டின் வீரர்களே இந்நாடு நமக்குச் சொந்தம் என்பதை நாடெங்கும் பரப்புங்கள். விடுதலைக்காகப் பாடுபடும் இந்தப் பாசறையில் ஈடுபட்டிருப்பதைவிட வேறு பெருமை யாருக்கும் கிடைக்காது. நம்முடைய வருங்காலப் பேரப் பிள்ளைகள் தன் சிநேகிதர்களிடம், என்னுடைய பாட்டனார் இருந்தார்—இந்த நாட்டின் விடுதலைக்குப் போராடினார்—அப்போது எதிர்வீட்டிலிருந்த கிழவனார் சந்தைக் கடைக்குக்கோழி வாங்கப் போயிருந்தார் என்று நம்மைப்பற்றித்தான் பெருமையாகப் பேசுவார்கள். நாம் மண்ணோடு மண்ணாகியிருப்போம். ஆனால் நாம் ஈட்டுகின்ற புகழ் மண்ணுக்கு மணமளிக்க வேண்டும். ஆகவே உங்களனைவரையும் இரத்தம் சிந்த அழைக்கிறேன்—உழைப்பதற்கு அழைக்கிறேன்.

நண்பர்களேசுயராஜ்யப்போராட்டத்துக்கும் நாம் எடுத்துள்ள விடுதலைப் போராட்டத்துக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. இந்தியர் வேறு வெள்ளையர் வேறு என்ற உணர்வு இயற்கையாக ஏற்பட்ட காரணத்தால் நாட்டுமக்கள் வேற்றுமையை எளிதில்உணர்ந்துகொண்டார்கள்.

ஆகவே காங்கிரசுக்கு வேலை சுலபமாக முடிந்தது.

ஆனால் வடவருக்கும் தென்னவருக்கும் உள்ள பேதத்தை நாட்டு மக்கள் சரியாக உணரவில்லை. பாம்புகளில் பலவகை உண்டு. பச்சைப் பாம்பு என்னும் பாம்பு படர்ந்திருக்கும் கொடிகளில் ஒளிந்திருக்கும். கொடிக்கும் பாம்புக்கும் வித்தியாசம் தெரியாத வகையில் இருக்கும்.

அதைப்போல் திராவிடர் யார்—தென்னவர் யார்—இந்தியர் யார்—வடவர் யார் என்று பொது மக்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. அது மறைந்து விட்ட உண்மையாக உள்ளது. மறைந்து விட்ட உண்மையைக் கல்லி எடுத்து மக்கள் முன் வைப்பதே நமது கடமை.

பாத்திரங்களில் களாய்பூசவேண்டுமென்றால் முதலில் பாத்திரத்தில் பிடித்துள்ள களிம்பைப் போக்கி விட்டு அதன் பிறகு ஈயம் பூச வேண்டும். அதேபோல் இந்தியா, இந்தியர் என்ற களிம்பை கழுவி எடுத்து, மனம் என்ற பாத்திரத்தில் திராவிடர் என்ற களாய் பூசவேண்டியவர்களாக இருக்கிறோம்.

நான் இன்டர்மீடியட் வகுப்பிலே படிக்கும்போது எனக்கு வரலாறு போதித்த பேராசிரியர் டி. ஆர். சேஷய்யங்கார் என்பவர் "Dravidian India" என்ற ஒருநூல் எழுதியிருந்தார். நான் அதை அன்று பரிட்சைக்காக மட்டும் படித்தேன். எதிர்காலத்தில் அது! ஒரு இனமக்களை ஒன்றுபட வைக்க உதவும் என்று எண்ணவேயில்லை.

இந்தியாவிலேயே திராவிடம் தனி நாடு, தனி இனம், தனி பண்பாடு ஆகிய சிறப்புகளோடு திகழ்ந்தது. அதற்குப் பிறகு நான் பார்த்த அத்தனை வரலாறுகளிலும் திராவிட வரலாற்றின் மேம்பாட்டையும் சிறப்பையும் கண்டேன்.

ஆனால் சிலபேர் மீண்டும் மீண்டும் ஆந்திரம் ஆதரித்ததா—கன்னடம் காது கொடுத்ததா—கேரளம் கேட்டதா என்று கூறிய வண்ணமுள்ளனர். அங்கே யெல்லாம் நம்முடைய குரல் விழாமல் இல்லை.

விலைவாசிகளைக் குறைக்க வேண்டுமென்று கருதுகிறவர்கள் எல்லா ஊருக்கும் போய் விலைகளை விசாரித்துவிட்டு வந்தா பேசுகிறார்கள்.

கர்நாடக மக்களும் ஆந்திர மக்களும் கேரள மக்களும் தங்கள் தலைவர்களின் மூலம் அவர்களுடைய கருத்தைத் தெரிவித்துள்ளதைக் கவனிக்க வேண்டுகிறேன்.

திராவிட நாடு திராவிடருக்கே என்பதைத் தமிழ் நாட்டிலே பேசி வருகிறோம். வரும் 1962 தேர்தலிலே தி. மு. கழகத்தின் சார்பில் 100 பேரை வெற்றி பெறச் செய்து 100 பேர்களின் தலைவன் என்ற முறையில் விஜயவாடாவுக்கும் குண்டூருக்கும் கர்னூலுக்கும் தெனாலிக்கும் ஐதராபாத்திற்கும் சென்று பேசினால் ஆதரவு கிடைக்காதா என்ன. வாய்ப்பு இல்லை ஆகவே வார்த்தைகள் இல்லை.

சென்ற பொதுத் தேர்தலில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கழகம் அதிக வளர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை என்பதற்காக, இராமநாதபுரத்தை நீக்கியா திராவிட நாடு கேட்பது.

முதுகுளத்தூரில் கலவரம் நடந்த நேரத்தில், ஒரு பெரிய காங்கிரஸ் தலைவரிடம் நீங்கள் ஏன் போய் அங்கே அமைதி உண்டாக்கக் கூடாது என்று கேட்டேன்—அப்போது மதியழகனும் உடனிருந்தார்—அப்போது அந்தக் காங்கிரஸ் தலைவர் சொன்னார். நான் முதுகுளத்தூர் பகுதியை முத்துராமலிங்கத் தேவருக்கு செலவு கணக்கு எழுதிவிட்டேன் என்று சொன்னார் எந்த யோக்கியனாவது மறுத்தால் அடுத்த கூட்டத்தில் பெயர் வெளியிடப்படும்—சாட்சியும் இருக்கிறது.

இப்படி ஒரு பகுதியையே செலவு கணக்கில் எழுதுகின்ற அளவுக்கு இன்றைய காங்கிரஸ் இருக்கிறது.

சென்னை நகரசபை வரவேற்பில் ஒரு சமயம் கலந்துகொண்ட சஞ்சீவி ரெட்டி அவர்கள் நமது மேயரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு தி. மு. க. மேயரா என்ற வியப்புடன் அவர் பேசினார். 'ஆந்திரர்களும் தமிழர்களும் கேரளியர்களும் கன்னடியர்களும் நாலு பேரும் ஒன்றாகச் சேர்ந்து போராடி உரிமைகளைப் பெற வேண்டும்' என்று சஞ்சீவி ரெட்டி தான் சொன்னார்.

தமிழ்—தெலுங்கு — கேரள கர்நாடக சங்கீதம் திராவிடக் கலாச்சாரத்தைச் சேர்ந்தவை என்று இன்னொருவர் சொன்னார்.

இவ்வளவையும் தள்ளிவிடுங்கள், நிதியமைச்சர் சி. சுப்ரமணியம், தேசிய அபிவிருத்திக் கவுன்சிலில், தமிழகத்துக்கும் ஆந்திரத்துக்கும், கேரளத்துக்கும் கர்நாடகத்துக்கும் தொகை ஒதுக்கப்படும்போது தென்னகத்துக்கென்று ஏதாவது ஒதுக்கிவிடுங்கள் பிறகு எங்களுக்குள் நாங்கள் பேசித் தீர்த்துக் கொள்கிறோம்"— என்று பேசியதாகச் சொன்னாரே.

சென்னையில் பொறியியல் துறை கல்லூரி ஒன்றை மத்திய சர்க்கார் துவக்கிய நேரத்தில் அமைச்சர் சுப்ரமண்யம் சொன்னார்—தமிழகத்துக்கு மட்டுமல்ல இந்தக் கல்லூரி அண்ணாதுரையின் சந்தோஷத்துக்காகக் கூறுகிறேன் திராவிட நாட்டுக்காகத்தான் இந்தக்கல்லூரி—என்று கூறினாரே.

நாம் பதினைந்து பேராக இருக்கும்போதே இந்தப் பணிவு,என்றால் நூறு பேராக இருந்தால்?

முன்னர் ஒரு சமயம் சுப்ரமணியம் சொன்னார்—திராவிடநாட்டுப் பிரிவினையை பத்து வருஷங்களுக்கு ஒத்தி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன் என்று. விட்டுவிடச் சொல்லுகின்ற வீரம் அவருக்கு இல்லை. இதைச் சட்டசபையில் தானே சொன்னார்—நாம் வெட்ட வெளியோடு நின்றிருந்தால் இப்படிப் பேசப்பட்டிருக்குமா?

அமைச்சர் சுப்ரமண்யம் அவர்களின் பேச்சைக் குறித்து "Bombay Standard" என்னும் பத்திரிகை எழுதியது.—அண்ணாத்துரையையே நம்பலாம் — அவர் வெளிப்படையாக திராவிடநாட்டின் பிரிவினையை வற்புறுத்துகிறார். ஆனால் சுப்ரமண்யம் அவரைவிட ஆபத்தானவர் பத்தாண்டு காலத்தில் கிடைப்பதையெல்லாம் பெற்றுக்கொண்டு பிறகு பிரிந்துவிட எண்ணுகிறார்—என்று அந்தப் பத்திரிகை எழுதியது.

ஆகவே திராவிட நாடு திராவிடருக்கே என்ற கொள்கை வலுப்பெற்று வருவதையே காண்கிறோம்.

1942-ல் காங்கிஸ் கட்சி நடத்தியதைப் போன்ற ஒரு போராட்டத்தை நாம் நடத்த முடியாது என்பதல்ல. நடத்தினால் ஒரு தண்டவாளம்—தந்திக்கம்பி கூட உருவாக இருக்காது, ஒரு தபாலாபீஸ்கூட வேலை செய்யாது. எனக்கிருக்கும் கவலையெல்லாம் எங்கே இது என் கையை மீறிப் போய் விடுகிறதோ என்கின்ற கவலைதான்.

போராட்ட வெள்ளத்தைத் தடுத்து நிறுத்திக்கொண்டிருப்பவனே நான்தான். இதைத்தடுக்க வேறு யாராலும் முடியாது. நான்தான் அந்த ஏரிக்கரைக்கு காவல். கரை உடைந்த பிறகு என்னைத் தேடினால் நான் வெள்ளத்துக்கு அடியில்தான் இருப்பேன்.

பாக்கிஸ்தானைத் தனியாகப் பிரித்துக் கொடுத்து விடுங்கள்

## மாநாட்டின் வெற்றிக்குப் பெருந்துணை புரிந்தவர்கள்!

பந்தல் அமைப்பு: தோழர்கள். தருமலிங்கம், முனுசாமி, பிச்சை, இருளப்பன், கிட்டு, முத்துக்காமாட்சி

மேடை அமைப்பு: தோழர் கோபால்.

மேடை அலங்காரம்: ஒளி ஓவியம்

வெளி முகப்பு: மாயவரம் அண்ணாமலை

உள் முகப்பு: தோழர்கள் மணி, எம். பலராம்.

மாநாடு—ஒலி: மதுரை முருகன் ஒலிபெருக்கி நிலையம்.

கலையரங்கம்—ஒலி: அமீர் ஒலிபெருக்கி நிலையம்.

ஒளி: தோழர் எம். பலராம்.

ஊர்வலப் படகு அமைப்பு: ஒளி ஓவியம்.

திராவிடத்தாய் சிலை: சிற்பி நாராயணன்,

அண்ணா சிலை: சிற்பி ராசாராம்

என்று ஜனுப் ஜின்ன கேட்டுக்கொண்டிருந்த சமயம், நிக்கோலஸ் என்பவர் ஜின்னவிடம் கேட்டார் "பாக்கிஸ்தான் பிரிந்தால் பொருளாதார வளம் இருக்குமா" என்று. அதற்கு ஜின்ன "அதைக் கேட்க வேண்டியது நீர் அல்ல, யோசிக்க வேண்டியது நான்" என்று ஜின்ன சொன்னர்.

ஐரோப்பாக் கண்டத்தில் தனித்தனியாகப் பிரிந்திருக்கின்ற நாடுகளை எடுத்துக் கொள்ளுங்கள். Economic Viability என்று சொல்வார்களே—அந்த பொருளாதார வளர்ச்சியில்லாத நாடுகள் கூட ஐரோப்பாவில் தனித்தனி நாடுகளாக வாழ்கின்றன!

சைப்ரஸை எடுத்துக்கொண்டாலும்—அதனுடைய விடுதலைக்குப் பண்டிதர் நேரு வாழ்த்துச் செய்தி அனுப்பினர்—ஐ. நா. மன்றம் அறிக்கைகள் வெளியிட்டு அந்த நாட்டை வரவேற்றன.

சைப்ரஸை நான் நாடு என்று உபசாரத்துக்காகச் சொன்னேன். மத்திய தரைக்கடல் பகுதிகளுக்கு நடுவே இருக்கும் ஒரு தீவு அது. அந்தத் தீவுக்குத்தான் பரலோகத்துக்கு வழி காட்டவேண்டிய ஒரு பாதிரியார், விடுதலை வாங்கிக் கொடுத்தார்.

அதைவிட திராவிட நாடு குறைந்து விட்டதா? திராவிடநாடு திராவிடருக்கே என்னும் விடுதலை முழக்கத்தை யார் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் உடன்வர முடியாமல் துவண்டாலும் தத்தளித்தாலும், விட்டுவிட்டு ஓடினலும் விரோதிகளானலும் திராவிட நாடு தனியரசாக வேண்டும் என்ற ஒரே தத்துவத்தைத்தான் எங்களுடைய வாழ்க்கைத் தத்துவமாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

தி. மு. கழகத்தை சட்ட விரோதஸ்தாபனமாக்கினலும் சரி, நாங்கள் வெளி நாடுகளுக்குத் துரத்தப்படுவதானலும் சரி எங்களுடைய கண்கள் திராவிடத்தின் விடுதலையை எதிர்நோக்கியிருக்கும். எங்களுக்கு எந்தத் திறமையிருந்தாலும் அது அத்தனையும் இந்த இலட்சியத்துக்கே பயன்படுத்தப்படும். எனக்கும் உங்களுக்கும் ஏற்பட்ட தொடர்பே இதனல்தான். இல்லாவிட்டால் நீங்கள் யாரோ, நான் யாரோ. இந்த இலட்சியத்தால்தான் பரமக்குடியிலே இருக்கின்ற வாலிபனுக்கும் பாளையங்கோட்டையிலே இருக்கின்ற தோழனுக்கும் காஞ்சீபுரத்திலே இருக்கும் எனக்கும் இப்படி தொடர்பு ஏற்பட்டது. இஸ்லாமிய மதத்தைச் சேந்த ராபி அந்த மதத்தைச் சாராத என்னை எங்கள் அண்ணு எங்கள் அண்ணு என்று அழைக்கிறர் என்றல் எதனல்?

தாய்த்திருநாடு மீட்கப்படவேண்டும் என்ற தேசிய உணர்வுதான் நம்மைஒன்றகப்பிணைத்திருக்கிறது.

இன்றைக்கு வடவர்களுக்கு இருக்கின்ற பிரச்னை யெல்லாம் இந்திய தேசீயத்தை எப்படி உருவாக்குவது என்பதுதான். இந்திரா காந்தியின் தலைமையில் "National Integration Committee"யை ஏற்படுத்தி ஒற்றுமையை உருவாக்க முயல்கிறர்கள்.

அவர்கள் பாட்டுப்பாடியும் ஆட்டம் ஆடியும், மாநாடுகளைக் கூட்டியும் இந்தியத் தேசீயத்தை உருவாக்க முயல்கிறர்கள்.

திராவிட விடுதலைக்காகப் போராடும் தி. மு. கழகத்துக்கு தமிழகத்தில் 4000 கிளைக் கழகங்கள் இருப்பதைப்போல் ஆந்திரத்திலும் கேரளத்திலும் கருநாடகத்திலும் இருக்கிறதா என்று கேட்டால் இப்போது நாங்கள் கமா தான் போட்டிருக்கிறேமே தவிர இன்னும் முற்றுப் புள்ளி வைத்துவிடவில்லையே தொடர்ந்து சூளுரைத்து கொள்ளத்தான் வைகையிலே கூடியிருக்கிறோம்.

இந்த மாநாட்டின் மூலம் நாட்டுக்கான செய்தியாக—திராவிட நாடுபெறுவதுதேவை என்பதையும் முடியும் என்பதையும்திராவிட நாட்டுப் பிரிவினைக்குத் தொடர்ந்து போராடுவது என்பதையும் என்னுடைய தலைமையுரையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வர இருக்கும் பொதுத் தேர்தலைப் பற்றி சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். தி. மு. கழகம் ஒரு விடுதலை இயக்கமாகும் 1956-ல் திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டில் நாம் முடிவெடுத்தபடி தேர்தலில் ஈடுபட்டு நாம் நல்லதோர் எதிர்க் கட்சியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். இந்த நாலைந்து ஆண்டு காலங்களில் சட்ட மன்றங்களில் நாம் ஆற்றியிருக்கின்ற பணி சாதாரணமானது என்று யாராலும் சொல்ல முடியாது. கூட இருந்தவர்கள் வேண்டுமானல் சொல்லலாம். இந்த நான்காண்டு காலங்களில் பாபரப்பான சம்பவங்களை நடத்திக் காட்ட விரும்பியிருந்தால் சுலபமாகச் செய்திருக்கலாம். ஆனல் ஒரு காலத்தில் நாமும் ஆளும் கட்சியாக வந்தாலும் வருவோம் ஆதலால் பொறுப்போடுதான் நாம் நடந்து கொள்வோம்.

ஆகவே இந்த மாநாட்டிலும் நாம் தேர்தலில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பதினைந்து வருடங்களாக நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சி நிர்வாகத் துறையில் இலஞ்ச இலாவண்யத்துக்கு இடமளித்துள்ளது. வரிகள் அநேகம்—விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவில்லை. வெளி நாட்டுக் கடன்கள் அதிகரித்துள்ளன. இத்தகைய ஆட்சியை 1962-ம் ஆண்டுத் தேர்தலில் பொது மக்கள் முறியடிக்கா விட்டால்—அதிகாரத்தைப் பறிக்காவிட்டால் சர்வாதிகாரம்தான் நடக்கும்.

எதிர்க்கட்சிகள் அடக்கப்படும்—நசுக்கப்படும். ஆகவே 1962 தேர்தலில் சர்வாதிகார மனப்பான்மை உள்ள காங்கிரஸ் ஆட்சியை முறியடிக்க வேண்டும்.

1957-ம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரஸ் அல்லாதவர்களுக்குத்தான் அதிக வாக்குகள் கிடைத்தன. காங்கிரஸ் குறைவான வாக்குகளையே பெற்றது. ஆனல் தேர்தல் யந்திரம் தந்திரமாக மாற்றப்பட்டுள்ளது. ஆகவே காங்கிரஸ் ஆட்சிபீடத்தைக் கைப்பற்றியது. ஆகவே மேலை நாடுகளில் இருப்பதைப்போல் 'Proportional Representation' அதாவது கட்சிகள் பெறுகின்ற வாக்குகளின் அடிப்படையில் அவைகளுக்குஇடங்களை ஒதுக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு கிளர்ச்சி நடத்தவேண்டும்.

தேர்தலில் அடிப்படை கொள்கைகளை விட்டுக்கொடுத்து மற்ற கட்சிகளுடன் கூட்டு சேருவது இயலாத காரியம்—கூடாத காரியம்—ஆகாத காரியம்—ஆகவே தேவையில்லாத காரியம். திராவிட நாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்தை விட்டுவிட்டு யாருடனும் கூட்டு சேர விருப்பமும் இல்லை. திட்டமும் இல்லை. அப்படிப்பட்ட தி. மு. க. தோழர் மருந்துக்குக் கூட இல்லை. தேர்தல் வெற்றி என்ற இனிப்பைக் காட்டி இந்த வலிவைப் பறித்துக்கொள்ள முடியாது. கொள்கையிலே இருக்கும் உறுதியை எந்தச் சபலமும் அசைத்துவிட முடியாது.

சில கம்யூனிஸ்டுத் தலைவர்கள்—ஆத்திரப்பட்டுவிட்ட தலைவர்கள்—அவசரப்பட்டுவிட்ட தலைவர்கள்—நம்மைப் பார்த்து கொள்கையை விட்டுவிட வேண்டும் என்று அறிவுரை வழங்குகிறர்கள். தேர்தல் வெற்றி என்ற இனிப்புப் பண்டத்திற்காகக் கொள்கையைவிட்டுக் கொடுக்கமாட்டேன். ஆனல் காங்கிரசை வீழ்த்தவேண்டும் என்பதற்காக எதிர்க்கட்சிகளிடையே—யார் யார் எந்த எந்த இடத்தில் காங்கிரசை எதிர்ப்பது என்பது குறித்துக் கலந்துபேசி ஒருதொகுதி உடன்பாடு வேண்டுமானல் வைத்துக் கொள்ளலாம். இதைத்தான் நான் ஆங்கிலத்திலே 'அட்ஜஸ்மெண்ட்' என்று சொன்னேன். உடனே நிதியமைச்சர் சுப்பிரமணியம் அட்ஜஸ்ட்மெண்ட் என்றல் கூட்டுதானே; வேறு அர்த்தம் என்ன என்று கேட்டு எனக்கு ஆசிரியராகப் பணியாற்றினர்—அவருக்கு 150 மாணவர்கள் இருக்கிறர்களே என்ற தைரியத்தில். அகராதியைப் புரட்டிப் பார்த்து 'அட்ஜஸ்ட்மெண்ட்' என்பதற்கு அர்த்தத்தைத் தேடிப்பார்ப்பார்களானல் அவரது கட்சியினரே வருத்தப்படுவார்கள்; வெட்கப்படுவார்கள்—இப்படிப்பட்டவரா கல்வி மந்திரியாக இருப்பது என்று.

விருந்துக்கு வாருங்கள் என்பதும், சாப்பிட வா என்பதும் தின்னுத் தொலை என்பதும் போட்டுத் தொலை என்பதும் சாப்பாட்டைப் பற்றித்தான் குறிக்கின்றன. அத்தனையும் சாப்பாடுதான். ஆனல் முறைகள் தான் வேறு. அதேபோல் கூட்டு என்பதும் அட்ஜஸ்ட்மெண்ட் என்பதும் தேர்தலைக் குறித்தாலும் அர்த்தம் வேறு. அமைச்சர் சுப்பிரமணியம்—சமீப காலங்களில் வெளிநாடுகளில் சுற்றி வந்ததற்குப் பின்னரும் ஆங்கிலத்தில் அர்த்தம் வேறுவிதமாகக் கூறுவது வேடிக்கையே. ஆகவே தொகுதி உடன்பாடு ஏற்படலாம். வேலூர் தொகுதி உனக்கா? எனக்கா? இப்படிக் கலந்துபேசி முடிவெடுக்கும் தொகுதி உடன்பாடுகள் ஏற்படலாம்.

அந்த அளவுக்கு அந்தந்த மாவட்டச் செயலாளர்கள் தங்கள் மாவட்டத் தொகுதி நிலைமையை ஆராய்ந்து — தலைமைக் கழகம் அனுப்பும் ஆய்வாளரையும் உடன் வைத்துக்கொண்டு தொகுதிகளைப் பற்றி முடிவுசெய்யும் வேலையை உடனடி வேலையாகக்கொள்ள வேண்டுகிறேன்.

அதேபோல் பல ஐரோப்பிய நாடுகளில் இருப்பதைப் போன்ற 'Proportional Representation' முறை வேண்டும் என்பதையும் வலியுறுத்தி மற்றவற்றையும்—வெள்ளப் பகுதிகளுக்கு இன்று புறப்பட்டுச் சென்று அந்த நிலைமைகளையும்-முடிவுரையில் கூறுகிறேன் என்று சொல்லி திராவிட நாட்டுப் பிரச்சினையில் தளராத நம்பிக்கை கொண்டு பணியாற்றுங்கள் என்று கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

தொகுத்தது

**என். வி. என். சோமு**

## அண்ணு முடிவுரை தொடர்ச்சி...

அரிஸ்டாடில், பிளாட்டோ ஆகியவர்கள் வாழ்ந்தது சின்னஞ்சிறிய கிரேக்க நாட்டில் தான். ரோம் நாடு தான்வீரத்துக்குரிய நாடாக இருந்தது; தீரச்செயல்களுக்கும் அது தான் இடமாக இருந்தது. அதன் செல்வாக்கு வளர்ந்து சாம்ராஜ்யமாக மாறியது.

அளவுக்கு மீறி பணம் படைத்தவர் வெறும் மாமிசப் பிண்டமாக இருப்பதுபோல் நாடு பெரியநாடாக இருந்து பயன் என்ன? பெரிய நாடான புனித ரோம் அழிந்தது போல் உதுமானிய சாம்ராஜ்யம் அழிந்ததுபோல், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அழிந்து 'வருவதுபோல் ஏகாதிபத்தியங்களெல்லாம் மண்ணேடு மண்ணகப் போகும்.

"கோடிக்கணக்கில் பணம் செலவிட்டு வைத்திருக்கும் இராணுவமும் போலீசும் சிறைச்சாலையும் நம்மிடம் இருக்கும்போது அண்ணுதுரையும், நெடுஞ்செழியனும், கருணநிதியும் என்ன செய்ய முடியும்?" என்று காங்கிரசுக்காரர்கள் நம்மைப் பார்த்துக் கேலி செய்கிறர்கள்.

இங்கிலாந்து நாட்டில் முதலாம் சார்லஸ் மன்னன் மகேசனகக் கருதப்பட்டான்; 'அவனை எதிர்ப்பவர்கள் அழிந்துவிடுவார்கள்' என்று சொல்லப்பட்டது. அவனையே தூக்கு மேடையில் நிறுத்தினர்கள் மக்கள்!

விளையாட்டாக ஒரு வாலிபன், மன்னனின் அரண்மனைச் சுவரில் 'வாடகைக்கு விடப்படும்' (Palace To Let) என்று எழுதிவைத்தான்; அவனைப் பார்த்து, மற்றவர்கள், 'சித்தனே, பித்தனே; இது எப்படியப்பா நடக்கும்? கோவின் இல்லமாகிய அரண்மனையைஎப்படிவாடகைக்கு விடுவார்கள்?' என்றுகேட்டார்கள்; அதற்கு அந்த வீரவாலிபன்; 'மக்கள் விழித்தெழுந்துவிட்டனர்; கிளர்ச்சியில்மனிதர்கள் தலைகள் உருளப்போகின்றன; பிறகுமன்னன்இருக்கமாட்டான்; அரண்மனையில் வசிக்க ஆள் இருக்கமாட்டார்கள்; அதன் பிறகு, வாடகைக்கு விட வேண்டியதுதான்; பின்னலே எழுத வேண்டியதைத்தான் இன்றே எழுதினேன்' என்றன்.

அதேபோல், நாம் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று சுவரில் எழுதும் வாசகம் விளையாட்டுப் பிள்ளையின் விபரீதச் செயல் அல்ல; அரண்மனையில் வீர வாலிபன் எழுதியதைப் போன்ற போர்ப் பயிற்சியாகும்!

பண்டித நேரு கேட்கலாம்—'திராவிட நாட்டுக்கு, 4 வேதம், 18 புராணங்களில் ஆதாரமிருக்கிறதா?' சங்க இலக்கியங்களில் சான்று உண்டா' என்று!

இந்திய பூபாகத்தில் ஆப்கானிஸ்தானமும் சேர்ந்திருந்தபோது, அதற்கு, 'காந்தார நாடு' என்று பெயர். அந்த நாட்டுப் பெண் தான், பாரதக் கதையில் வரும் காந்தாரி ஆனல், பாரதக் கதையை ஆதாரம் காட்டி, இப்போது ஆப்கானிஸ்தான் இந்தியாவின் ஒரு பகுதி' என்று யாராவது வாதாடுவார்களா?

இன்றைய அசாம் மலைப்பகுதி தான் காமருபம் என்று முன்பு

தி. மு. கழக 3-வது பொது மாநாட்டுத் தீர்மானங்கள் :

# கைத்தறி

திராவிடத்தின் முக்கியத் தொழிலான கைத்தறி நெசவில் ஈடுபட்டுள்ள பல இலட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்க்கை நிலை பரிதாபகரமாகத் தாழ்ந்து போயிருப்பதால், அதனை உயர்த்த மத்திய மாநில அரசுகள் தக்க வழிகண்டு திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும் எனவும் ;

திராவிடத்தில் பல இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணித் தேக்கம் ஏற்பட்டுள்ளதால், குறிப்பாகத் தமிழ்நாட்டில் கைத்தறித் தேக்கம் தொழில் முடக்கத்திற்கும் வேலையில்லாக் கொடுமைக்கும் காரணமாவதால், இந்நிலைக்குப் பரிகாரம் காண வேண்டும் எனவும் ;

கைத்தறிக்கான வளர்ச்சிக்குழு (Board) கைத்தறித் தொழில் மிகுந்த திராவிடத்திலேயே அமைந்து இயங்குமாறு செய்ய வேண்டும் எனவும் ;

ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு நூற்பு ஆலை துவக்க வேண்டுமெனவும் ;

கைத்தறி நெசவாளருக்குக் கிடைக்கும் நூல் விலைகள் மிகுதியாக இருப்பதால். நூல் விலையும் கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் கிடைக்குமாறு செய்ய வேண்டும் எனவும் ;

விலைவாசி ஏற்றம் மிகுதியாக உள்ள நிலையில் அதற்கேற்ப கைத்தறி நெசவாளரின் — குறிப்பாகப் பட்டு நெசவாளரின்—கூலி நிர்ணயிக்கப்படுவதுடன், கூலி உயர்வுக்குப் போராடும் நெசவாளருக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும் எனவும் ;

சரிகை, பட்டு உற்பத்திக்கான தொழில் நிலயங்களைத் திராவிடத்தில்—குறிப்பாகத் தமிழ் நாட்டில் அரசினர் துவக்கவேண்டும் எனவும்;

சாயப் பவுடர்கள் குறைந்த விலையில் கிடைக்கச் செய்யவேண்டும் எனவும்;

பட்டுத் துணிகளை வெளி நாடுகளிலும் பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய வழிமுறை காண வேண்டும் எனவும்;

நெசவாளர்களின் குழந்தைகட்கு இலவசமான கல்வியும் வேறு தொழில் பயிற்சியும் அளிக்கத் திட்டமிட வேண்டுமெனவும் இப்பொது மாநாடு வற்புறுத்துகிறது.

முன் : எஸ். எஸ். எம். சுப்பிரமணியம்

வழி : சைதை சம்பந்தம்,
குடந்தை எஸ்.ஆர். இராதா
எஸ். டி. தாஸ்.

# வடநாட்டுப் பொருள்கள்

திராவிடத் திருநாட்டின் கனி வளம் யாவும், விஞ்ஞான முறையில் தொழில் வளர்ச்சிக்கும், வருமானப் பெருக்கத்துக்கும் துணையாக்கப்படாத நிலையில், திராவிட மக்களின் வருமானம் குறைத்து வாழ்க்கைத்தரம் தேய்ந்துவரும் முறையில், வடநாடு வளம்பெறும் முறையிலேயேமூலத்தொழில்துவக்கமும், வணிக முறையும், மத்திய அரசின் திட்டங்களும் அமைந்து வருவதால், திராவிட மக்களின் எளிய வாழ்க்கைக்கு உறுதுணையாகும் அவர்தம் சிறு தொழில்களையேனும் ஆதரித்துக் காக்க உறுதி கொண்டு, திராவிட மக்கள் இயன்றவரை வெளிநாட்டு—வடநாட்டுப் பண்டங்களை வாங்குவதைக் கைவிட்டு, தென்னுட்டில் உற்பத்தியாகும் பொருள்களையே பெரிதும் வாங்கிப் பயன்படுத்துவதை ஒரு இலட்சியக் கடமையாகக் கொள்ளவேண்டும் என்பதுடன்—

அன்ருடம் பயன்படுத்தும் பொருள்கள் யாவும், தென்னக மக்களுக்கு வேலை வாய்ப்பும்—கூலியும், வாழ்வும் அளிக்கக் கூடிய தென்னகப் பொருள்களாகவே கவனித்து வாங்குவதற்கு திராவிட மக்கள் அனைவரும் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இம்மாநாடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

திராவிடத்தின்மீது வடக்கு செலுத்தும் பொருளாதார ஆதிக்கத்தைக் கண்டிக்கும் அறிகுறியாக ஒரு நாள் குறிப்பிட்டு, வட இந்தியரின் வணிக நிலயங்களின் முன்பு அடையாள மறியல் நடத்த ஏற்பாடு செய்தளிக்க வேண்டுமென்றும் இப்பொது மாநாடு பொதுச் செயலாளரைக் கேட்டுக் கொள்கிறது.

முன் : சே. அ. ராசமாணிக்கம்

வழி : சு. பாலன் எம்.சி.

## வெள்ள நிவாரண நிதிக்கு கழகத்தின் உதவி

அண்மையில் ஏற்பட்ட வெள்ளக் கொடுமையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி புரியும் வகையில் கீழ்க்கண்டவாறு தி. மு. கழகம் அதிகாரிகளின் மூலம் நிதியளித்துள்ளது.

| | | |
|---|---|---|
| தஞ்சை மாவட்டத்திற்கு | : | ரூ. 2,000 |
| திருச்சி மாவட்டத்திற்கு | : | ரூ. 1,000 |
| கோவை மாவட்டத்திற்கு | : | ரூ. 1,000 |
| சேலம் மாவட்டத்திற்கு | : | ரூ. 500 |
| தெ. ஆ. மாவட்டத்திற்கு | : | ரூ. 500 |
| கேரள மாநிலத்திற்கு | : | ரூ. 500 |
| கருநாடக மாநிலத்திற்கு | : | ரூ. 500 |

26-ம் பக்கத் தொடர்ச்சி……………

சொல்லப்பட்டது. அதுவும் தனித்து வாழ விரும்புகிறது.

பர்மாகூட ஒரு காலத்தில் இந்தியாவுடன் இணைந்துதானிருந்தது—பழைய பூகோளத்தில், இந்தியப் படத்தைப் பார்த்தால் தெரியும் 'பாரதமாதா' கையில் சூலாயுதத்துடன் முந்தானையைக் கையில் பிடித்துக் கொண்டு நிற்பதுபோல் படம் போட்டிருப்பார்கள்.

இப்போது, பாரதமாதா'வின் முந்தானை இருந்த இடம் பர்மாவாகவும், சூலம் இருந்த இடம் பாகிஸ்தானமாகவும், முடி இருந்த இடம் காஷ்மீராகவும் இருக்கின்றன. இந்தியப் பிரிவினையின்போது பாரத மாதாவின் முந்தானையும், கூந்தலும், தோள்பட்டையும் துண்டாடப்பட்டன. ஒரு கரமே துண்டிக்கப்பட்டுவிட்டது. நெய்யப்பட்ட துணியை எலி கடித்தால் ஏற்படும் பள்ளம்போல், இந்தியப் படம் பள்ளம் விழுந்திருக்கிறது.

'எங்கிருந்தோ வந்த முஸ்லீம்களுக்குத் தனி நாடா?' என்று கொக்கரித்தவர்கள், அவர்களுக்கென்று தனி நாடு கொடுத்துவிட்டார்கள். ஆனல் நாங்கள் எங்கிருந்தும் வந்தவர்களல்ல; எங்கள் நாட்டை நாங்கள் ஆளவேண்டும் என்று கேட்கிறோம்; இது தவரு?

ஜனப் ஜின்னு சென்னைத வந்போது, அவருடைய பேச்சை நான் நேரிலே கேட்டேன்; எனக்கு இன்னும் நினைவிருக்கிறது — காற்றடித்தால் விழுந்துவிடக்கூடிய ஒல்லியான உருவம் உள்ள அவர், தனது விரலை ஆட்டி, ஆட்டிக் கேட்டார் —'பாகிஸ்தானை நீங்கள் கொடுக்கப்போகிறீர்களா, நானே எடுத்துக் கொள்ளட்டுமா? என்று. 'பாகிஸ்தானை உலகிலுள்ள பல நாடுகள் ஆதரிக்கின்றன; இதற்கு என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டார்; இதை நான் காதாரக் கேட்டேன்.

காங்கிரஸ்காரர்கள் 'பாகிஸ்தானு? ஊகூம்……' என்று உதட்டைப் பிதுக்கினுர்கள்; ஆனலும் அவர், இறுதியிலே பாகிஸ்தான் பெற்ருர்!

ஜின்னு அளவுக்கு நான் வலிமை பெற்றவனல்லன் என்ருலும்,இங்கே என்னை விட்டால் வேறுயாரும் கிடையாது. இந்தக் காரியத்தை நான்தான் செய்யவேண்டியவனுக இருக்கிறேன்.

பாகிஸ்தான் கேட்ட முஸ்லிம் சமுதாயம் இருந்த அளவுக்கு இந்த (திராவிட) இனம் திரண்டிருந்தால், 'திராவிடம் கொடுக்காவிட்டால் நான் எடுத்துக்கொள்வேன்' என்று என்னல் சொல்ல முடியும்.

1962-ல் நான் சட்டமன்றத்திற்குள் நுழையும்போது, நான் திரும்பிப்பார்த்தால் மகிழும் அளவுக்கு நீங்கள் நமது தோழர்களை அனுப்பி வைப்பீர்களானல், நானும் ஒரு கை பார்க்கலாம். நமது வரலாற்றை மறைப்பவர்களை, பூகோள உண்மைகளை மறுப்பவர்களை, இலக்கிய ஆதாரங்களை எதிர்ப்பவர்களை, எடுத்தெறிந்து பேசுபவர்களை ஒரு கை பார்க்கலாம்.

இதைச் செய்யாமல், 'அண்ணு நீ செய்யவேண்டியதைச் செய்' என்று சொன்னல் நான் என்ன செய்யமுடியும்? மாவு இல்லாமல் பணியாரம் செய்ய நான் என்ன, மந்திரவாதியா?

தாலிக்கயிறு இல்லாமல் திருமணம் நிறைவேறமுடியாது. ஆனல், கட்டவேண்டிய நேரத்தில்—கட்ட வேண்டிய முறைப்படி கட்டினல் தான், அது தாலிக் கயிருகும். தாலியில் கோர்ப்பது 40-ம் நெம்பர் நூல் என்பதால், 40-ம் நெம்பர் நூலெல்லாம் தாலிக் கயிருகி விடாது; பாவிலிருக்கின்ற நூலைத் தாலிக் கயிறு என்று கூறமுடியாது. அந்த நூலுக்கு தாலிக்கு உள்ள பெருமை கிட்டிவிடாது!

அதைப்போல நாம்திராவிடநாடு பிரச்சினையை எழுப்பவேண்டிய முறைப்படி எழுப்ப வேண்டிய இடத்தில், எழுப்பவேண்டும்,

நமக்கு கிடைக்கின்ற ஓட்டுச் சீட்டு ஏகாதிபத்தியத்திற்கு வைக்கின்ற வேட்டு!

நம் தாய்த் திருநாடு மீட்கப்படுவதற்குமுன், நீங்கள் நிச்சயமாக ஒரு நல்ல வெற்றியைத் தேடித்தர வேண்டும்.

தொடர்ந்து பேசிய அண்ணு அவர்கள் கடந்த 14 ஆண்டுகளாக காங்கிரசு ஆட்சியில் முதலாளித்துவம் பெருகி வந்திருப்பதையும், எல்லாத் தொழில்களிலும் வெளிநாட்டார் முதல் போட்டுப் பங்காளிகளாகி விடுவதையும், இந்தியத் துணைக்கண்டத்தின் பொருளாதாரப் பிடி வெளிநாட்டான் கையில் இருப்பதையும், அதுமட்டுமின்றி இந்தியாவுக்கு 5000 கோடி கடன் ஏற்பட்டிருப்பதையும் எடுத்துக்காட்டினுர்.

இறுதியாக அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

ஆதித் திராவிடச் சமுதாயத்துக்கு இந்த ஆட்சியினல் நன்மையில்லை என்பதை நாங்கள் மட்டும் சொல்லவில்லை; டாக்டர் அம்பேத்கார் ஒரு புத்தகமே எழுதியிருக்கிருர். தாழ்த்தப்பட்டவர்கள் தலைவர் சிவராஜ், 'இனி காங்கிரசை நம்பக்கூடாது' என்கிருர் அமைச்சர் செகசீவன்ராம், ஐதராபாத்தில் நடந்த மாநாட்டில் பேசுகையில், 'ஏமாற்றப்பட்டிருக்கிருேம்' என்று கூறியிருக்கிருர்.

சுதந்தரம் பெற்று 14ஆண்டுகள் ஆகியும் இன்னமும் மலம் தூக்குவதற்கு என ஒரு இனம் இருந்து வருகிறது. ஆதித் திராவிடத் தாய்மார்கள், மல்லிகை மணம் கூந்தலில் வீசுவதற்குப் பதில் மலத்தைக் கூடையில் வைத்துத் தலையில் தூக்கிச் செல்லும் பரிதாபக் காட்சியை இன்னும் பார்க்கிருேம். இது ஆதித் திராவிடருக்குச் செய்த நன்மையா?

சென்னையில் நடந்த பிற்பட்ட வகுப்பினர் மாநாட்டில், அமைச்சர்களான மாணிக்கவேலர்; லூர்து அம்மையார். இராமையா ஆகிய மூவரும் கலந்துகொண்டனர். தங்கள் சமூகத்துக்கு, காங்கிரசு ஆட்சியில் நன்மை ஏற்பட்டிருப்பதாக அமைச்சர் இராமையா சொன்னுர். மற்ற இரு அமைச்சர்களும் அதை மறுத்திருக்கின்றனர்.


காங்கிரசு ஆட்சியில் நன்மையில்லை என்று, முஸ்லீம் லீக் அல்லாத தேசியமுஸ்லீம்களின் மாநாட்டில் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

காங்கிரசின் சார்புடைய தொழிலாளர் அணியான ஐ.என்.டி.யூ சி. 'தொழிலாளர்களுக்கு இந்தத் துரைத்தனம் நன்மை செய்யவில்லை' என்று அறிக்கை விடுத்திருக்கிறது.

எனவே, இந்த ஆட்சியை ஒழித்துக்கட்டி, 1962ல் பணியாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.




வரலாற்றுச் சிறப்புமிக்க
ஊர்வலத்தில் கலந்துகொண்ட
பஸ்களின் காட்சி.




அண்ணா ஏற்றிவைத்த
விடுதலைக் கொடி
பட்டொளி வீசிப்பறக்கிறது.



ஊர்வலத்தின் முன்னணியில்
சென்ற
மாணவர் குழாம்.



அண்ணா தலைமையுரையாற்றுகிறார்.



மாநாட்டு மேடையில் அண்ணா, அவைத்தலைவர், அமைப்புச் செயலாளர், கடலூர் வழக்கறிஞர் இளம்வழுதி, பொற்செல்வி இளமுருகு ஆகியோர்.



மாநாட்டு முகப்பில் அழகுசெய்த
திராவிடத் தாய் சிலையருகே
திருச்சி பாண்டுவும், காந்தியும்.



மதுரை மாநாட்டுக்கு
வருங்கால சந்ததியினரும்
வந்திருந்தார்கள்.



கவின்மிகு கலைக்
கண்காட்சியில்
ஒரு பகுதி.

ஆசிரியர், வெளியிடுபவர் : என். வி. நடராசன், அச்சிடுபவர், சோமு அச்சகம், 163, வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1